வெளியீடு : 3-12-2016 Issued : 3-12-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஜூலை 26, 2016—தொகுதி 4—எண் 3**

**Tuesday, the 26th July 2016—Volume 4—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**26–7–2016**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 231-232,234 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 231-232 |
| திரு. டி. செங்குட்டுவன் | 234 |
| திரு. பெரியண்ணன் அரசு | 234 |
| (ஆ) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோருதல் | 232-243 |
| *திரு. அர. சக்கரபாணி | 232,235-236 |
| திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 232-233 |
| திரு. எஸ். ஆஸ்டின் | 233 |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 236-243 |
| **2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்—** | 244-359 |
| *திரு. கே.என். நேரு | 244-254, 262-269,278 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 247-252,257-258,277,327-328,337-339 |

பக்கங்கள்

**2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்**— தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 253,261-262 |
| திரு. துரைமுருகன் | 254,258 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 255,259-260 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 270-274, 332-334 |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 275,358-359 |
| *மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன் | 275-277 |
| திரு. ஓ.கே. சின்னராஜ் | 278-299 |
| திரு. உ. தனியரசு | 299-306 |
| திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் | 306-313 |
| திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் | 313-316, 318-327 |
| *மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | 317-318, 330-332 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 324,335-337 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 328-330 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 334-335 |
| *மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் | 339-341 |
| *திருமதி கு. உமா மகேஸ்வரி | 339,341-347 |
| *திருமதி எஸ். விஜயதரணி | 347-358 |
| மாண்புமிகு திரு. பா. பென்ஜமின் | 352-353 |
| மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் | 359 |

**3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 360-361

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, ஆடி 11, திருவள்ளுவர் ஆண்டு–2047

## 2016 ஜூலை 26, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்*
*போற்றி வழங்கும் நெறி"*

*நம் வருமானத்தின் அளவறிந்து, அதற்கு தக்கபடிதான் பிறருக்கு உதவவேண்டும். அதுவே பொருளைச் சேமித்து பாதுகாத்து வாழும் வாழ்க்கை நெறியாகும்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. தகவல் கோரல்

## (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய புதிய கல்விக் கொள்கை, மேட்டூர் அரசு மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்ட 16 நபர்களுக்கு கண் பார்வை பறிபோனது, தமிழ்நாட்டில் அனைத்து கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகளுக்கு வழங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்வது குறித்து, அரசு ஊழியர்களின் வேண்டுகோளை ஏற்று, பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கல்விக் கடனை உடனே*

*திரும்பச் செலுத்த முடியாத மதுரை, அவனியாபுரத்தைச் சேர்ந்த திரு. லெனின் தற்கொலை, டெல்லி எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் திருப்பூரைச் சேர்ந்த மருத்துவ மாணவன் திரு. சரவணன் மர்ம மரணம் போன்ற 34 ஒத்திவைப்புத் தீர்மானங்களை இந்த அவையிலே எடுத்து விவாதிக்க வேண்டுமென்று நாங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறோம். செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியன்று இந்த அவையின் கூட்டம் முடிவடையவிருக்கிறது. எனவே, நாள் கணக்கைப் பார்த்தால், ஒரு நாளைக்கு இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்தால்தான் அவற்றை முழுமையாக எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வரும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு முக்கியத்துவம் தந்து, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. ஸ்டாலின், நீங்கள் சொன்னவற்றிற்கு உரிய பதில்கள் வருகின்றபோது எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், கொஞ்சம் இருங்கள்.*

## (ஆ) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோருதல்

*__திரு. அர. சக்கரபாணி:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கூட்டுறவு வங்கிகளில் சிறு, குறு விவசாயிகள் வாங்கிய கடன்களைத்தான் இன்றைக்கு தள்ளுபடி செய்வதாக அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. நாங்கள் கேட்பது அனைத்து விவசாயிகளுடைய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்; அதேபோல தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கியிருக்கிற கடன்களையும் தள்ளுபடி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக*

*2016 ஜூலை 26]* [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

*விவசாயிகள் பெற்ற கடனை இரத்து செய்வதாக அறிவித்திருக்கிறது. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனை இரத்து செய்யவில்லை. அதேபோல், விவசாயிகள் தங்கள் விவசாயத்திற்காக நகைகளை அடகு வைத்து கடன் பெற்றிருக்கிறார்கள். அந்தக் கடனையும் இரத்து செய்தால், விவசாயிகள் நலம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்ட கேள்விக்குத்தான் அமைச்சர் பதில் சொல்ல இருக்கிறார். (குறுக்கீடு) தி.மு.க. சார்பில், உங்கள் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து விட்டேன். (குறுக்கீடு) நான் அடுத்த பிரச்சினைக்குப் போய்விட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்யும் நேர்வில், ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோல், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்யவில்லை. அதோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். அங்கே, ஒரு ஏக்கர், அரை ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு கடனைத் தள்ளுபடி செய்யவில்லை. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள். இதற்குக் காரணம், குத்தகை நிலம் வைத்திருப்பவர்களுக்கு கடன் வழங்கலாம் என அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்கள் விவாதம்போல் பேசவேண்டாம். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், உறுப்பினர் திரு. சக்கரபாணி அரசின் நிலை என்னவென்று கேட்டுள்ளார். அதற்குப் பதில் கூற, மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறேன். அதோடு நீங்கள் நிறுத்தவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கென தனியாக நீங்கள் பேசவேண்டாம். திரு. ஆஸ்டின், போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன? (குறுக்கீடு) திரு. டி. செங்குட்டுவன், சொல்லுங்கள்.*

## (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி, ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் கடந்த இரண்டு மாதங்களில், சுமார் 40 நபர்கள் விபத்தில் பலியாகியிருக்கிறார்கள். அந்த 40 நபர்கள் விபத்தில் பலியானதற்கு மாண்புமிகு அமைச்சர், . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், நீங்கள் அதற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறோம், உட்காருங்கள். (குறுக்கீடு) பதிவு செய்யப்பட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பெரியண்ணன் அரசு, சொல்லுங்கள்.*

**திரு. பெரியண்ணன் அரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரத்தில் காவேரி குடிதண்ணீர் ஒரு பகுதியில் வருகின்றது. ஒரு பகுதியில் ஒரு குடம் தண்ணீர் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது.*

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, நேற்றுதான் நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு)*

## (ஆ) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோருதல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவார்.*

*2016 ஜூலை 26]*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்களும் அதைத்தான் பேசினார்; திரு. ஆஸ்டின் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்காக பேசினார். நீங்கள் உங்கள் மாவட்டத்திற்காகப் பேசப்போகிறீர்கள். அப்படித்தானே?*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்நாட்டிற்கே பேசப்போகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, பேசுங்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு குறு, சிறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளிலிருந்து பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கான அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தளவில், கூட்டுறவு வங்கிகளிலிருந்து விவசாயிகள் பெற்ற அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். சிறு, குறு விவசாயிகள் என்று பாகுபாடு பாராமல், அனைத்து விவசாயிகள் பெற்ற கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கென 1,000 கோடி ரூபாய், 1,200 கோடி ரூபாய் என்ற அளவிற்குத்தான் கூடுதலாகத் தேவைப்படும். ஆகவே, அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து விவசாயிகள் பெற்ற கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 2, 3 ஆண்டுகளாக விவசாயிகள் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கி, கடன்களைக் கட்ட முடியாமல் மிகவும் தவிக்கிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், விவசாயிகள் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்றால், அவர்களுடைய வீட்டிற்குச் சென்று பொருட்களை ஜப்தி செய்கின்றன. எனவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற*

[திரு. அர. சக்கரபாணி] [2016 ஜூலை 26

கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், வட்டியையாவது தள்ளுபடி செய்வதற்கு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனெனில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் கவனத்தை ஈர்த்தது போதும், உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு 1989–1990 ஆம் ஆண்டில் திரு. வி.பி. சிங் அவர்கள் தலைமையிலான மத்திய அரசால் 600 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. பிறகு 2008 ஆம் ஆண்டு, அப்போது ஆட்சியிலிருந்த மத்திய அரசால், விவசாயிகள் பெற்ற கடன்களுக்காக 74,000 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது நீங்கள் 50 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருக்கிறீர்கள். எனவே, மத்திய அரசை வலியுறுத்தி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் அரசினுடைய கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, பொறுங்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐவகை நிலம் சூழ்ந்த அழகு தமிழ் மண்ணில், ஆறாம் முறை முடி சூடி, அகிலமே போற்றிப் பாராட்டும் அதிசயமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியில் நம் மாட்சி என்ன! சபதமேற்கும் சங்க நாதமே எங்கள் அம்மா! உழைப்பவரைத் தேடித் தேடி (குறுக்கீடு) நான் தற்போதைய கூட்டத் தொடரில் முதல் முறையாகப் பேசுகிறேன். (குறுக்கீடு) எனது துறை குறித்து முதன்முறையாகப் பேசுகிறேன். இதுபோன்று குறுக்கீடு செய்வது சரியல்ல. (குறுக்கீடு) இல்லார்க்கும், இயலார்க்கும் ஏற்றங்கள் தரவே, இமை துஞ்சாது உழைக்கும் . . . (குறுக்கீடு)

*2016 ஜூலை 26]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் தேவையில்லாமல் குறுக்கீடு செய்ய வேண்டாம். (குறுக்கீடு) நான்தான் தி.மு.க. உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தேன் அல்லவா? (குறுக்கீடு) உங்களுக்குப் பேச நான் வாய்ப்பு கொடுத்த பிறகுதான், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ராஜா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *நான் தற்போதைய சட்டமன்றக் கூட்டத் தொடரில் முதன்முறையாக எனது துறை குறித்துப் பேசுகிறேன். தற்போதைய கூட்டத் தொடரில் முதன்முறையாக, நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பின்மீது நான் பதில் சொல்ல வந்திருக்கிறேன். என்னை இந்த இடத்தில் அமைச்சராக அமர வைத்து அழகு பார்க்கும் என் தாயைப் பற்றிப் பேசாமல், நான் யாரைப் பற்றிப் பேசுவது? (மேசையைத் தட்டும் ஒலி) நான் பதில் சொல்லும்போது, பதிலில் குறை இருந்தால், கேளுங்கள். (குறுக்கீடு) எதற்கெடுத்தாலும் கூச்சல் போடாதீர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள், கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *உழைப்பவர்களைத் தேடித் தேடி உயர்வினை . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள், நீங்கள் பேசும்போது உங்கள் தலைவரைப் பாராட்டிவிட்டுத்தான் பேச ஆரம்பிக்கிறீர்கள். அதேபோன்று, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது முதல்வரைப் பாராட்டிவிட்டுப் பேசுவதை நீங்கள் தடுக்க முடியாது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் முதல்வரைப் பாராட்டிப் பேசிவிட்டு, பதில் சொல்லப் போகிறார். அதை நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்? (குறுக்கீடு) அப்படியெனில், நீங்கள் உங்கள்*

*தலைவரைப் பாராட்டிப் பேசுவதும் தவறுதானே? (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது. அப்படியெல்லாம் பேசக் கூடாது. பேசாமல் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *உழைப்பவரைத் தேடித் தேடி உயர்வளிக்கும் சிங்காதனமே எங்கள் அம்மா! (குறுக்கீடு) இல்லார்க்கும் இயலார்க்கும் ஏற்றங்கள் தரவே . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *இல்லார்க்கும், இயலார்க்கும் ஏற்றங்கள் தரவே இமை துஞ்சாது உழைக்கும் ஈகையே எங்கள் அம்மா. அம்மா, உங்கள் திருவடிகளை வணங்கி, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான என் பதிலுரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நேற்று இதே அவையிலே உங்கள் உறுப்பினர் தாத்தா, பேரன், பாட்டி, கொள்ளுப்பேரன் எல்லோரையும் பற்றிச் சொன்னார். அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். முதன்முதலாக அமைச்சர் பேசும்போது குறுக்கிடுவதுதான் நாகரிகமா? இதுதான் கடமை, கண்ணியம் கட்டுப்பாடா? இதுதான் தி.மு.க.வின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடா? இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார். நான் என்ன சொல்கிறேன் என்றால், என்னுடைய துறை சார்பாக முதல் உரையை, எங்களுடைய முக்கியத்துவம் வாய்ந்த உரையை (குறுக்கீடுகள்) நான் வாசிக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் வாசிக்கிறேன். உங்களுக்குத் தெரியவேண்டுமல்லவா நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் பதிலைச் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்*

*2016 ஜூலை 26]* [திரு. செல்லூர் கா. ராஜு]

*தேர்தல், 2016-ன்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், "விவசாய மேம்பாடு மற்றும் விவசாயிகளின் நலன்" என்னும் தலைப்பின்கீழ், கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க் கடன், நடுத்தர காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு அம்மா அவர்களின் தேர்தல் அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, ஆறாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற அன்றே, முதல் கையெழுத்தாக கூட்டுறவு வங்கிகளால் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, 31-3-2016 அன்றுவரை நிலுவையில் இருந்த பயிர்க் கடன், நடுத்தர காலக் கடன் (வேளாண்மை) மற்றும் நீண்ட காலக் கடன் (பண்ணை சார்ந்தது) ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டார்கள். மேலும், கடன் தள்ளுபடிக்குத் தேவையான நிதியை கூட்டுறவு வங்கிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கும் எனவும் ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இக்கடன் தள்ளுபடி தொடர்பான விரிவான நெறிமுறைகள் 28-6-2016 அன்று அரசால் வெளியிடப்பட்டுள்ளன. அதன் பின், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் சுற்றறிக்கை, நாள் 1-7-2016 வழிகாட்டும் நடைமுறைகள் அனைத்து மண்டல இணைப் பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இக்கடன் தள்ளுபடித் திட்டம் கீழ்க்கண்ட கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகளால் வழங்கப்பட்ட பண்ணை சார்ந்த கடன்களுக்குப் பொருந்தும். 1) மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 2) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 3) தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 4) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களிலிருந்து நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றப்பட்டவை, சிறு மற்றும் குறு விவசாயிகளால் பெறப்பட்ட, 31-3-2016 அன்று நிலுவையில் இருந்த குறுகிய கால பயிர்க் கடன், குறுகிய கால விவசாயக் கடன், மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன், மத்திய கால வேளாண்மைக் கடன், பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன்கள் ஆகியவற்றிற்கான*

[திரு. செல்லூர் கா. ராஜு] [2016 ஜூலை 26

அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் அனைத்தும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கடன் அனுமதிக்கப்பட்ட நாளில், நில உடைமைப் பதிவேடு மற்றும் கடன் பதிவேடுகள் சிறு மற்றும் குறு விவசாயிகள் என பதியப்பட்டவர்களே இத்திட்டத்தின்கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகள் என வகைப்படுத்தப்படுவர். சிறு விவசாயிகள் என்போர் 2.5 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை மொத்த நிலப்பரப்பு உடைமைகொண்ட விவசாயிகள். குறு விவசாயிகள் என்போர் 2.5 ஏக்கர் வரை நில உடைமை கொண்டவர்கள்.

முற்பகல் 10–15

இத்திட்டம் தொடர்பாக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணைகளை செயல்படுத்தும்பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கடன் தள்ளுபடி பயனாளிகளின் பட்டியலைத் தயாரித்தல், நிருவாகக் குழுவின் ஒப்புதல் பெறுதல், பட்டியலை சரிபார்த்தல், இதர மாவட்ட அலுவலர்களைக்கொண்டு 10 சதவிகித கூராய்வுப் பயனாளிகளின் பட்டியலை அந்தந்தச் சங்கங்களில் வைத்து, பயனாளிகளின் பட்டியலுக்கு ஆட்சேபனை பெறுதல், ஆட்சேபனை மனுக்களைப் பரிசீலித்தல், இறுதிப் பட்டியலை மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்புதல், மத்திய கூட்டுறவு வங்கிகள் அந்தப் பட்டியலை மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு அனுப்புதல், பயனாளிகளின் பட்டியலை கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு அனுப்புதல், தணிக்கைத் துறையின் சரிபார்ப்புப் பணி முடித்தல் என ஒவ்வொரு கட்ட நடவடிக்கைக்கும் காலக்கெடுவை நிர்ணயித்துள்ளார். அப்பட்டியலின்படி, கடன் தள்ளுபடி பயனாளிகளின் பட்டியல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் தயாரிக்கப்பட்டு, சங்க ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட்ட பின்னர், அப்பட்டியல் நிருவாகக் குழு ஒப்புதலை 26–7–2016 அன்று பெறும்பொருட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது. இக்கடன் தள்ளுபடித் திட்டத்தின்படி, 31–3–2016–ன்படி நிலுவையில் இருந்த பயிர்க் கடன் 5 ஆயிரத்து 16 கோடியே 55 இலட்சம் ரூபாய். மத்திய கால வேளாண் கடன் 732 கோடியே 32 இலட்சம் ரூபாய். பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன் 32 கோடியே 5 இலட்சம் ரூபாய் என மொத்தம் 5 ஆயிரத்து 780 கோடியே 92 இலட்சம் ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) பயனடைந்த விவசாயிகள் 8 இலட்சத்து 35 ஆயிரத்து 360 சிறு விவசாயிகள். (மேசையைத்

*2016 ஜூலை 26]  [திரு. செல்லூர் கா. ராஜு]*

*தட்டும் ஒலி) 8 இலட்சத்து 58 ஆயிரத்து 785 குறு விவசாயிகள் என மொத்தம் 16 இலட்சத்து 94 ஆயிரத்து 145 விவசாயிகள் பயன்பெறுகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை திரும்பச் செலுத்தப்படும் வரை உள்ள வட்டியுடன் கூட்டுறவு வங்கிகளுக்கு ஐந்து ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் செலுத்தப்படும். இக்கடன் தள்ளுபடித் திட்டத்திற்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,680 கோடியே 73 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இக்கடன் தள்ளுபடி திட்டத்தைப்பற்றி திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் திரு. ஆஸ்டின் கேட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 31–3–2016–ன்படி நிலுவையில் இருந்த, திரு. ஆஸ்டின் கவனியுங்கள், பயிர்க் கடன் 230 கோடியே 8 இலட்சம் ரூபாய். மத்திய கால வேளாண் கடன் 20 கோடியே 77 இலட்சம் ரூபாய் ஆக மொத்தம் 250 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஆகும். இதன்மூலம் 24 ஆயிரத்து 836 சிறு விவசாயிகள், 51 ஆயிரத்து 167 குறு விவசாயிகள் என மொத்தம் 76 ஆயிரத்து 3 விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.*

*பொதுவாக, சிட்டா அடங்கல் போன்ற நிலவுடைமை ஆவணங்களின் அடிப்படையில் பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலும் வாய்மொழி பாட்டத்தின் அடிப்படையில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு கணினியில் பதிவு செய்யப்பட்ட 10–1 சிட்டா ஆவணங்கள் பெற்று, கடன் வழங்கவேண்டுமென்ற கூட்டுறவு வங்கியினுடைய விதிமுறையிலிருந்து கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு விலக்களித்து, கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பயிர்க் கடன் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு, பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகின்றது.*

*மேலும், பயிர்க் கடன் தள்ளுபடி தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 ஏக்கர் வரை சொந்த நிலம் இருந்தும் பயிர்க் கடன் பெற்ற விவசாயிகளும், வாய்மொழி பாட்டத்தின்கீழ் 5 ஏக்கர் வரை பயிர் செய்யும் கடன் பெற்ற விவசாயிகளும் கடன் தள்ளுபடி பெற தகுதி பெற்றவர் ஆவர். வாய்மொழி பாட்டத்தின்கீழ் 5 ஏக்கர் வரை விவசாயம் செய்ய கடன் பெற்றவர்களின் நலனும் இத்திட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவாளரின் வழிகாட்டி*

நெறிமுறைகளின்படி 100 சதவிகிதம் கள ஆய்வு செய்து, பட்டியல்களைச் சரிபார்க்க மூன்று நபர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

*26–8–2016* அன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், கிராம நிருவாக அலுவலகம், மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் மற்றும் ஊராட்சி அலுவலகத்தில் விவசாயக் கடன் தள்ளுபடி பெற்ற பயனாளிகளின் பட்டியல் வெளியிடப்படும். ஆட்சேபணை உள்ள விவசாயிகள் அக்குழுவிடம் தங்களது தகுதிக்குரிய சான்று ஆவணங்களை அளித்து, உறுதி செய்து கொள்ளலாம். மேலும், தகுதியுடைய விவசாயிகள் பட்டியல் கணக்கீடு செய்வதில் நேரக்கூடிய விடுபாடுகளை சரிசெய்தல் மற்றும் குறைகள் ஏதும் இருப்பின், விவசாயிகள் சரக துணைப் பதிவாளரிடம் தெரிவித்து, நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

*முற்பகல் 10–20*

மேலும், பெறப்படுகின்ற பதில் திருப்தி அளிக்காவிட்டால், மண்டல இணைப் பதிவாளரிடம் மேல்முறையீடு செய்து, தீர்வு காணலாம். இதில் என்ன குறை கண்டீர்கள்? மேலும், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்ய மற்றும் குறைகளைக் களைய, மாநில அளவில் குழு அமைக்கப்பட்டு, ஒவ்வொரு வாரமும் அக்குழு கூடி, கள அளவில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க பதிவாளருக்கு உதவுவார்கள். மேலும், மாநில அளவில் தொடர்பு கொள்ள Helpline 044–42858602–ம் மாவட்ட அளவில் இணைப் பதிவாளரைத் தொடர்புகொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த கடன் தள்ளுபடித் திட்டத்தில் பயன்பெறும் அனைத்து விவசாயிகளின் பெயர், கடன் எண், தள்ளுபடி பெற்ற கடன் தொகை உள்ளிட்ட அனைத்து விவரங்களும் கூட்டுறவுத் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். இதை யார் வேண்டுமானாலும், எங்கிருந்து வேண்டுமானாலும் பார்வையிடவும், பதிவிறக்கம் செய்யவும் இயலும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின் வரலாற்றில் முதல் முறையாக இவ்வசதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பயிர்க் கடன்

*2016 ஜூலை 26]* [*திரு. செல்லூர் கா. ராஜு*]

*தள்ளுபடித் திட்டம், ஏற்கெனவே வெளியிடப்பட்ட அரசாணைகள் மற்றும் பதிவாளரின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, எவ்வித புகார்களுக்கும், குறைகளுக்கும் இடமின்றி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில், விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியுடைய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான பயிர்க் கடன் தள்ளுபடி, தங்களுக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சமோ அல்லது பதற்றமோ தேவையில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய கடன் தள்ளுபடி திட்டத்தினால், இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற சிறு, குறு விவசாயிகள் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே, என்ன வாக்குறுதி கொடுத்தார்களோ, அதை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். கடந்த காலங்களிலும் இதுபோன்று வரலாறு உண்டு. இதையெல்லாம் சொன்னால் அரசியலாகிவிடும். இது தகவல் கோரல். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். சொன்னதை செய்யக்கூடியவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதை செய்வார் அம்மா. அதனால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆறாவது முறையாக (மேசையைத் தட்டும் ஒலி), தமிழக வரலாற்றில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு, இங்கே அரசாட்சி செய்வதற்கு தமிழக மக்கள் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக வாய்ப்பு அளித்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்தப் பதிலைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. தகவல் கோரல் என்ற வகையில்தான் உரையாற்ற அனுமதித்தேன். அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்குப் பிறகு பேச வாய்ப்பில்லை. (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள்.*

## 2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016–2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.என். நேரு.*

***திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரில்லா தலைவர், எங்களது அன்புத் தலைவர், . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தி.மு.க. கட்சி உறுப்பினர்கள் முன்பு* objection *செய்ததனால்தான் அவர்கள் குறுக்கிட்டார்கள். வேறொன்றுமில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தங்க. தமிழ்ச்செல்வன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.என். நேரு, நீங்கள் பேசுங்கள்.*

**திரு. கே.என். நேரு:** *எங்களுடைய அன்புத் தலைவர், கழகத் தலைவர் (குறுக்கீடுகள்) அவர் இருக்கும் திசையை நோக்கி வணங்கி . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கே.என். நேரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் முன்பே சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் முன்பே சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முன்னரே விளக்கம் சொல்லிவிட்டேன். திரு. நேரு, நீங்கள் பேசுங்கள்.*

*முற்பகல் 10–25*

**திரு. கே.என். நேரு:** *திராவிட முன்னேற்றக் கழகத்தினரோடு, இனி யார் இருப்பார்கள், இவர்களோடு யார் சேருவார்கள் என்று எள்ளி நகையாடிய நேரத்தில், தன்னந்தனி மனிதனாக, மாநிலம் முழுவதும் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் 'நமக்கு நாமே' (மேசையைத் தட்டும் ஒலி) திட்டத்தை உருவாக்கி, 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்களை நேரடியாகப் பெற்று, நாங்கள் உங்கள் குறைகளைத் தீர்க்கிறோம் என்று உறுதிமொழி*

தந்ததன் காரணமாக, 23 இடங்களிலிருந்து இன்றைக்கு 89 இடங்களை உருவாக்கித் தந்திருக்கின்ற எங்களது தளபதி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்கி, நான் என்னுடைய உரையை நிகழ்த்தலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) எப்படி உங்களுக்கு எரிகிறதோ, அப்படித்தான் எங்களுக்கும் எரியும். (குறுக்கீடுகள்). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், நான் எங்களை உருவாக்கியவர்களைப் பேசுவேன் என்று இப்போதுதான் சொன்னார். அதேமாதிரி எங்களை உருவாக்கியவர்களை நாங்கள் பேசினால் உங்களுக்கு ஏன் எரிகிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நீங்கள் பட்ஜெட்மீது பேசுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பட்ஜெட்டில்தான் பேசுகிறேன், வேறு என்ன பேசுகிறேன்? (குறுக்கீடுகள்) பட்ஜெட்டில்தானே பேசுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எதற்கு சப்தம் போடுகிறார்கள்? மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் பல்வேறு விளக்கங்களைத் தந்திருந்தாலும், பட்ஜெட் விவாதத்தின்மீது ஒரு சில சந்தேகங்களை எழுப்பி, ஐந்து, ஆறு கேள்விகளை அவர்களிடம் வைத்து, இறுதியாக அவர்களுடைய விளக்க உரையைக் கேட்க நாங்கள் இருக்கிறோம்.

பெட்ரோலியப் பொருட்களின் விலை வீழ்ச்சி காரணமாக, அரசின் வரி வருவாய் குறைந்து வருவதாக கடந்த ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், பற்றாக்குறையை சமாளிக்க இந்த அரசு என்ன மாற்று வழிமுறைகளை எடுத்து வருகிறது?

குறிப்பாக, வரி வசூலை விரைவுபடுத்த வணிக வரித் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். வணிக வரி வசூலிப்பதை துரிதப்படுத்த, மேற்கொண்டு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன். வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை கடந்த மூன்று ஆண்டுகளாக நிலவி வருகிறது. அது கவலைக்கிடமான விகிதத்தில் அதிகரித்து வருகிறது. வருவாய்க் கணக்கில் நிலவி வரும் பற்றாக்குறையைப் போக்க அரசு வருமான பொறுப்புச் சட்டத்தை, The Fiscal

Responsibility Act–ஐ திருத்தி, நடவடிக்கைகள் எடுப்பதைத் தவிர, வேறு என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது? சட்டத்தின் பார்வையில் செலவினங்களைக் கட்டுப்படுத்தி, வருவாய்க்குள் செலவினங்களை அடக்க வேண்டும் என்பதனை நிதி ஆணைக் குழுவின் கருவூலப் பொறுப்பு வரவு–செலவுத் திட்ட மேலாண்மைச் சட்டம் வலியுறுத்துகிறது.

இன்று இருக்கும் கடன் சுமை ரூ.2.52 இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இது அனுமதிக்கப்பட்ட வரையறைக்குள் இருந்தாலும், உயர்ந்து வரும் வட்டி விகிதம் மாநிலத்தின் வருவாயில் 15 சதவீதமாக இருக்கிறது. இதைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது? 2016–2017 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தில், fiscal deficit ரூ.4.500 கோடி அதிகரித்துள்ளது. 2015–2016 ஆம் ஆண்டுக்கான fiscal deficit ரூ.32,359.59 கோடி. இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் fiscal deficit ரூ.36,740.11 கோடி.

ஆனால், இப்போது அறிவிக்கப்பட்டுள்ள வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.44.533.84 கோடிகள். இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தைவிட, தற்போது அறிவிக்கப்பட்ட திட்டத்தில் ரூ.4,000 கோடிகள் அதிகரித்திருப்பதற்கான காரணம் என்ன என்பதற்கு அரசின் தரப்பிலிருந்து விளக்கம் வேண்டும். இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள வருவாய் இலக்கு ரூ.96,531.41 கோடி. ஆனால், தற்போது அறிவிக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தில் வருவாய் இலக்கு ரூ.90,691.87 கோடி. அறிவிக்கப்பட்ட இரு வரவு–செலவுத் திட்டங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ரூ.5,839.54 கோடி, குறைவு 6.04 சதவீதம். இக்குறைவுக்கான காரணத்தை அரசு விளக்க வேண்டும். இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இலக்கு ரூ.24,508.86 கோடிகள். தற்போது அறிவிக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இலக்கு ரூ.22,368.85 கோடி Capital outlay ரூ.2,140.1 கோடி குறைந்துள்ளது. இதனால் உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் உருவாக்கும் வேலைவாய்ப்பு தற்போது குறைந்துள்ளது. இக்குறைவுக்கான காரணத்தை அரசு விளக்க வேண்டும். மத்திய தொகுப்பிலிருந்து வரும் வரி வருவாய் வருடத்திற்கு ரூ.23,018 கோடி குறைந்துள்ளது என்று மாநில பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஜூலை 19 ஆம் நாளன்று மேலவையில், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர்

அவர்கள், 2015–2020 வரை தமிழக அரசுக்கு ரூ.35,855 கோடி வருடந்தோறும் வரும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாநில வரவு–செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட அறிவிப்பு சரியா அல்லது மத்திய நிதியமைச்சர் அவர்களின் அறிவிப்பு சரியா என்பதை அரசு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள் நேற்றையதினம் சட்டசபைக்கு வந்திருந்தாரா, இல்லையா என்பது தெரியவில்லை. ஏனென்றால், நான் நேற்றையதினமே வருவாய் பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணங்கள், அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகள் ஆகியவற்றுக்கான நீண்ட விளக்கத்தை என்னுடைய பதிலில் தந்துவிட்டேன். விளக்கங்கள் தந்துகொண்டிருந்தபோது, நீங்கள் போதும், போதும் என்று சொன்னீர்கள். அந்த விளக்கங்கள் போதுமா, இன்றைக்கும் விளக்கங்கள் இன்னமும் தர வேண்டுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசு தினந்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் பெட்ரோலியப் பொருட்களுடைய விலையைக் குறைத்துக்கொண்டே வந்ததனால், நமது மாநிலத்தின் வரி வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டது. அந்த வரி வருவாயை ஈடு செய்யவேண்டும் என்று சொன்னால், நமது மாநிலத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வரியை உயர்த்த வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவ்வாறு வரியை உயர்த்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே ஐந்தாண்டு காலம் வரியில்லாத பட்ஜெட் போடப்பட்டதால்தான் நம்முடைய வரி வருவாய், வரி அல்லாத வருவாய் ஆகியவற்றின்மூலம் வருகின்ற நமது அரசின் வருவாய்த் தொகை 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை உயர்ந்திருக்கிறது. ஆனால், ஆண்டுத் தொடக்கத்தில் தருகின்ற இந்த நிதிநிலை அறிக்கையில் நமது இலக்கினைச் சொல்கின்றோம். வரி வருவாய் இவ்வளவாக இருக்கும் என்று கணக்கிட்டு, அதை

எதிர்பார்த்துதான் நமது அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம். ஆனால், உலக அளவிலும், இந்திய அளவிலும் இருக்கின்ற பொருளாதார மந்த நிலை தமிழகத்தையும் பாதிப்பதனால், வரி வருவாயில் ஒவ்வோர் ஆண்டும் தேக்க நிலை தொடர்ந்து இருந்தது. அதன் காரணமாகத்தான் வருவாய் பற்றாக்குறை இருந்தது என்பதையும், அதற்குரிய காரணங்களெல்லாம் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுவிட்டன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அதில், நீங்களே point of order கேட்கிறீர்களே! உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொன்ன விளக்கத்தில், வருவாய் எவ்வளவு குறைந்தாலும், எங்களுக்கு வருகின்ற வருவாய் பற்றாக்குறையாக இருந்தாலும், செலவு செய்கின்றபோது எந்தச் செலவுகளையும் நிறுத்த இயலாது. குறிப்பாக சம்பளம், வளர்ச்சிப் பணிகள் போன்ற செலவுகளை நிறுத்த முடியாத காரணத்தால்தான் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த காலத்தில் 2006–2007 முதல் 2010–2011 வரை இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து வருவாய் பற்றாக்குறை இருந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திட்டம் வகுக்கப்பட்ட பின்னர், ஏற்கெனவே திட்டமிட்டபடி நாம் செலவழித்துக்கொண்டேதான் இருக்க முடியும். சம்பளம், ஓய்வூதியம், வளர்ச்சித் திட்டங்கள்,

*சேவைத் துறை போன்றவற்றுக்காகச் செய்யும் செலவினங்களை நிறுத்த முடியாது. இதன் காரணமாக செலவினங்கள் கூடும். வருவாய் வருகின்ற இனங்களில் இருக்கின்ற பொருளாதார சூழ்நிலை காரணமாக வருவாய் குறைந்தது என்றால், அதனை ஈடு செய்வதற்கு வேறு வழியில்லை என்பதுதான் இன்று இருக்கக்கூடிய நிலைமை. இந்த நிலைமை மாறும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கி நமது மாநிலத்திற்கு அனுமதித்திருப்பது 3 சதவீதம். அந்த 3 சதவீதத்திற்குள்ளாகத்தான் நம்முடைய கடன் தொகை இருக்கிறது. இப்பொழுதுகூட, 2.96 சதவீத அளவிற்கு நம்முடைய கடன் தொகை பெறுவதற்கான கட்டமைப்பு இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிதி பற்றாக்குறைதான் 3 சதவீதத்திற்குள்ளாக இருக்க வேண்டும். கடன் அளவு 25 சதவீதம் இருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் கடன் அளவு இந்த நிதியாண்டில் 18.86 சதவீதமாகத்தான் இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் கடன் தொகை 18.86 சதவீதம்தான் இருக்கிறது. நமது மாநிலத்திற்கு அருகிலுள்ள கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் நேற்றையதினம் நீங்கள் எடுத்துக் கூறினீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள், நமது மாநிலத்தில் கடன் அளவு 2 இலட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் என்று தற்போது இருக்கின்ற நிலைமையைச் சொல்கின்றார்கள். ஆனால், இந்த 2 இலட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் கடன் அளவு என்பது 2017 மார்ச் மாத நிலைமைதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இன்னும் ஓராண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் வாங்கும் திறன் 3 சதவீதத்திற்குள்ளாக இருக்க வேண்டும் என்பதில் இப்போது 2.96 சதவீதம் வந்துவிட்டது. இன்னும் 0.04 சதவீதம்தான் இருக்கிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், நீங்கள் தெரிவித்ததைப்போல, நமது மாநிலத்தின் மொத்த உற்பத்தித் திறன் 13 இலட்சம் கோடி என்று நான் அறிகிறேன். அதை மேலும் மேலும் உயர்த்தக்கூடிய முயற்சியாக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றுதான் நான் கேட்க விரும்புகிறேனேதவிர, நேற்று நீங்கள் சொன்ன விளக்கத்தையெல்லாம் நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியே போடாமல் 2011–லிருந்து 2016 வரை நம்முடைய வரி வருவாய். . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உங்கள் சௌகரியத்துக்குப் பேசினால் எப்படி? உட்கார்ந்துகொண்டே பேசுவது என்ன முறை? (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உங்கள் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பொறுமையாய் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *ஒவ்வோர் ஆண்டும் வரியே போடாமல். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள். அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டு சொல்கிறார். நீங்கள் எப்படி தவறு என்று சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) நிதியமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டு சொல்கிறார். நீங்கள் உட்கார்ந்துகொண்டு எப்படி பொத்தாம்பொதுவாக குற்றச்சாட்டு சொல்கிறீர்கள்? இது எல்லாம் சரியில்லை. நீங்கள் உட்காருங்கள், நீங்கள் சொல்வது எல்லாம் சரியில்லை. உட்காருங்கள். மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *கொஞ்சம் பொறுமையாய் கேளுங்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது, 2011–2012–ல், ரூ.59,517 கோடியாகத் தான் வரி வசூல் வருவாய் இருந்தது. 2015–2016–ல் நிதிநிலை கணக்குகளின்படி, அது ரூ.80,476 கோடியாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இந்த காலக்கட்டத்தில் வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டுக்கு அர்ப்பணித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரியே போடாமல் நிதி 21,000 கோடி ரூபாய் அதிகமாக வருவதற்குக் காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நல்ல பல நடவடிக்கைகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகள் இங்கே உருவாக்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சி அடைந்து, வேலைவாய்ப்புகள் உருவாகி, அதன் மூலமாக வரி வருவாய் வந்ததன் காரணமாகத்தான் இந்த வருவாய் உயர்ந்திருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே, உங்களுக்கு அனைத்தையும் எடுத்துக் கூறுவதற்கு நிதித் துறைச் செயலாளர் இருக்கிறார். பல்வேறு ஆலோசகர்கள் இருக்கிறார்கள். எனவே, நீங்கள் அதைப் படித்து ஞாபகம் வைத்துக்கொண்டு பேசலாம். நாங்கள், நீங்கள் கொடுத்த நிதிநிலை அறிக்கையைப் படித்து வந்து பேசுகின்றபொழுது எங்களுடைய கருத்தைச் சொல்லவிடாமல் இடையிலே பேசி, எங்களை திசை திருப்பக் கூடாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நிமிடம் அவர் கருத்தைச் சொல்லி முடித்துவிட்டு, அடுத்த Subject–க்குப் போனார். பிறகுதான் நான் எழுந்தேன்.

**திரு. கே.என். நேரு:** வரி போடாத நிதிநிலை அறிக்கை என்று சொன்னீர்கள். கடந்த 5 ஆண்டுகளில், 14,174 கோடி ரூபாய் வரி விதிக்கப்பட்டுள்ளது என்று ஒரு செய்தி இருக்கிறது. அதை விளக்கினால் நன்றாக இருக்கும். 5 வருடங்கள் வரியே போடவில்லை என்கிறீர்கள். ஒரு விஷயம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாங்களும் அங்கிருந்து பதில் சொன்னவர்கள்தான். நான் சொல்வேன், நீங்கள் முதன்முதலில் 2011–ல் ஆட்சிக்கு வருகிறீர்கள். 1996–2011–ல். அப்போது நீங்கள் கொடுத்த அறிக்கை என்னவென்றால், 28,000 கோடி ரூபாய் தமிழ்நாட்டில் கடன். தமிழ்நாட்டு கஜானாவை காலி செய்துவிட்டார் என்று அன்றைக்கு அறிக்கை கொடுத்தீர்கள். அன்றைக்கு இருந்த முதலமைச்சர் எங்களுடைய தலைவர் அவர்கள், 28,000 கோடி ரூபாய் கடன் வந்திருக்கிறது. ஆனால் 1,000 கோடி ரூபாய், 14 இலட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம் என்று அறிக்கை கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வோர் ஆண்டும் கடன் தொகை கூடுகின்றபொழுது நீங்கள் சொன்னீர்கள், எங்களால் என்று. அடுத்து, 2006–ல் நாங்கள் வரும்பொழுது கடன் தொகை எவ்வளவு என்றால் 56,000 கோடி ரூபாய். அதே 28,000 கோடி ரூபாயை நீங்களும் வாங்கியிருந்தீர்கள். எனவே, அதை ஒரு குற்றச்சாட்டாக உங்களிடம் சொல்ல விரும்பவில்லை. எல்லா அமைச்சர்களும் சொல்கிறீர்கள், உங்கள் ஆட்சியில் என்று. நேற்று கூட மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் சொன்னார், ரூபாய் 10 கோடி தான் கொடுத்தீர்கள் துறைமுகத்துக்கு, நாங்கள் 110 கோடி ரூபாய் கொடுத்தோம் என்று. எங்கள் காலத்தில் ரூபாய் 10 கோடிக்கு செய்த வேலையை இன்றைக்கு 110 கோடி ரூபாய் கொடுத்து செய்ய வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) விலைவாசி ஏறியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்துக்கு முழுமையான அளவுக்கு ஒரு* estimate*–ஐ தயார் செய்து விட்டு, அதற்கான பணிகளை ஆரம்பித்திருந்தால், அது பாராட்டுக்குரியது. ஆனால், முழுமையான அளவில்* estimate*-ஐ தயாரிக்காமல் 10 கோடி ரூபாயை மட்டும் ஒதுக்கீடு செய்து, அதுவும், துறைமுகத்தைக் கட்டாமல், வெறும் கற்களை மட்டும் கொட்டினீர்கள். அந்த கற்கள் எல்லாம் கடலில் போய்விட்டன. அதுதான் உங்களுடைய ஆட்சியின் திறமை என்றுதான் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், சாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நீங்கள் கொட்டிய கற்கள் எல்லாம் கடலில் போய்விட்டன. எனவே, முழுமையான அளவுக்கு அங்கு மீன்பிடி துறைமுகம் அமைய வேண்டும் என்று சொல்லி, கிட்டத்தட்ட 76 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியை நிறைவேற்றிய முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலேயே அந்தத் துறைமுகம் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களால் திறக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. நேரு பேசுங்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நேரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நேரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேரு பேசட்டும். (குறுக்கீடுகள்) திரு. சாமியின் பெயரைச் சொல்லி, அமைச்சர் பேசவில்லையே! (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், தேவையில்லாமல் பேசுவதற்கு வாய்ப்பு கேட்காதீர்கள். இப்போது பேசிக் கொண்டிருப்பது திரு. நேரு. நேரு கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கின்றார். அடுத்து பேச வேண்டியது நேரு தான். (குறுக்கீடுகள்) அதுமாதிரியெல்லாம் நான் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)* Point of order *ஒன்றும் கிடையாது,*

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேருதான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) நேரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) Point of order–ஐ நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், தேவையில்லாமல் ஒவ்வொருவரும் பேசுவதற்கு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, Point of Order கேட்டால் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நேரு பேசினார், நேரு பேசியதற்கு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். அதோடு பிரச்சினை முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) மேற்கொண்டும் நேரு பேசிக்கொண்டிருக்கிறார். நேரு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நேரு பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச பிறகு வாய்ப்புத் தருகிறேன். பிறகு வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன் என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நேரு அவர்கள் பேசியதற்கு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறார்கள். அது நியாயமும்கூட. அதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் எழுந்து, இங்கே ஒரு கருத்தை குற்றச்சாட்டு மாதிரி சொன்னார். அந்தக் கருத்துக்கு நேரு பதில் சொல்ல முடியாது. அதற்கு முன்னாள் மீன் வளத் துறை அமைச்சர் திரு. சாமி தான் பதில் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொஞ்சம் பொறுமையாக நான் சொல்வதையும் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள். நேற்று மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதற்கு பதில் சொல்கிறவிதமாக, நேரு அவர்கள் திருப்பி கேள்வி கேட்டார்.

*அமைச்சரைக் குறிப்பிட்டுச் சொன்னார். உடனே அமைச்சர் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார். பதில் சொன்னதுடன் பிரச்சினை தீர்ந்துவிட்டது. மேற்கொண்டும் பேச வேண்டியது நேருதான். (குறுக்கீடு) மேற்கொண்டும் பேச வேண்டியது நேருதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்வதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. நான் கேட்க விரும்புவது, கடந்தகால தி.மு.க. ஆட்சி என்று சொல்லி, மீன் வளத் துறையிலே ஏற்பட்ட ஒரு குற்றச்சாட்டை அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். எனவே, அன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர், இங்கேயிருக்கக்கூடிய உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள். எனவே, அவர் அதற்கு விளக்கம் தருவதற்கு தாங்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் இப்படிப் பேசினால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) இப்படிப் பேசினால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் அனைவரும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் ஒருமுகமாகப் பேசுவது முறையல்ல. நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டைச் சொன்னவர் அதற்கு பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், அமைச்சராக இருந்தார் என்பதற்காக அவருக்கு வாய்ப்புக் கொடுக்க முடியாது. அவர் பேசவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். இப்படி இருந்தால், நான் சபையை நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். குற்றச்சாட்டு எதுவும் அவர் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) நீங்கள்*

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், இப்படியெல்லாம் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பெரியகருப்பன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் தெளிவாக இந்தச் சபையை நடத்த வேண்டிய பொறுப்பில் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) ஒவ்வோர் உறுப்பினரும், தான்தான் பதில் சொல்ல வேண்டும், நான்தான் அதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டால், என்னால் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, தெளிவாக, நேற்றைக்கு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் பேசியதற்கு, மாண்புமிகு உறுப்பினர் நேரு இன்றைக்குப் பேசுகிறபோது, அதைக் குறிப்பிட்டு கேள்வி கேட்டார். அந்தக் கேள்விக்கு மீண்டும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அதோடு subject முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் அந்தத் துறையினுடைய அமைச்சர் என்று நீங்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவர் அப்படிச் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) அவர் அப்படிச் சொல்லவில்லையே, அந்தத் துறையினுடைய அமைச்சர் இப்படி தவறு செய்தாரென்று அவர் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பொறுமையாக இந்தச் சபையை நடத்த வேண்டுமென்று விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அதாவது என்னுடைய இடத்திலிருந்து நான் நேர்மையாக, correct–ஆக என் பணியைச் செய்துகொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் நேரு கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்)

*நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, கடந்த ஆட்சியிலே இருந்த அமைச்சர்கள் யாருடைய பெயரையாவது குறிப்பிட்டு, அவர்தான் இந்தத் தவறைச் செய்தார் என்று சொல்லியிருந்தால், நான் அதற்கு வாய்ப்புத் தருவதற்குத் தயார். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், பொதுவாக ஓர் ஆட்சியின்மீது குற்றச்சாட்டைச் சொன்னார். (குறுக்கீடுகள்) அந்த ஆட்சியினுடைய குற்றச்சாட்டுக்கு, பேசுகிறவர்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், நீங்கள் எவ்வளவுதான் பேசினாலும் இதை நியாயப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) ஓர் ஆட்சியின்மீது ஒரு குற்றச்சாட்டை உறுப்பினர் நேரு சொன்னார். அவர் சொன்னதற்கு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) ஓர் அமைச்சர், இன்னார்தான் அமைச்சர், அவர் பெயரைச் சொல்லி, இப்படி ஊழல் செய்தார் என்று அவர் சொல்லியிருந்தால் நான் அதற்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அப்படிச் சொல்லாதபோது, பொத்தாம் பொதுவாக ஓர் ஆட்சியின்மீது சொன்னதற்கு, அமைச்சர் பொறுப்பேற்று பதிலைச் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) இனிமேல், திரு. நேரு, தன்னுடைய பேச்சைத் தொடரவேண்டியதுதான். (குறுக்கீடுகள்) இதற்கு நீங்கள் எவ்வளவு பேர்தான்* support *செய்தாலும், எத்தனை தடவை சொன்னாலும் இது ஒரு நியாயமான வாதமில்லை. (குறுக்கீடுகள்) நியாயம் இல்லை. (குறுக்கீடுகள்) அதனால் நான் அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) திரு. நேரு அவர்கள்தான் பேசுவார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்*

தக்க பதிலை அளித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்களுக்கு. . . (குறுக்கீடு) சற்று பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் ஏதாவது பேச வேண்டுமென்றால், மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது தாராளமாக, எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நீங்கள் அவரைப் பேச விடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) இப்பொழுது பேசிக்கொண்டிருப்பது உங்களுடைய உறுப்பினர்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு தான் பேசுகிறார். நீங்கள் ஏதாவது விளக்கம் சொல்லவேண்டுமென்றால், அதை திரு. கே.என். நேரு அவர்களிடம் சொல்லி, அவர்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள் பேசும்போது குறுக்கிடவில்லை. (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைப் பேசச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு கஷ்டம் கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. ஆனால், தங்களிடத்தில் ஒரு நியாயத்தைக் கேட்கிறேன். தயவுசெய்து ஒரு நிமிடம் என்னைப் பேச அனுமதிக்க வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேற்றைக்குப் பதில் அளித்தார்கள். நானும் கூர்ந்து கவனித்தேன். மிகத் தெள்ளத் தெளிவாக பதில் சொன்னார்கள். ** (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிய அந்த வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் அதையெல்லாம் சொல்ல முடியாது. உறுப்பினரைப் பேச அழைத்தேன். அவர் பேசினார். அத்துடன் அந்த விஷயம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் ** என்று அதைப்பற்றியெல்லாம் பேசக் கூடாது. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசவேண்டுமென்று அனுமதி கேட்டதற்கு நான் அனுமதி கொடுத்தேன். நீங்கள் அனுமதியைப் பெற்று பேசுகிறபோது, தேவையில்லாமல் ** பற்றியெல்லாம் பேசுகிறீர்கள். அதெல்லாம் தவறு. அதனால் அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். உங்களுடைய உறுப்பினர்களைப் பார்த்து, ‘அனைவரும் எழுந்திருங்கள், எழுந்திருங்கள்’ என்று சொல்வது ஓர் எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு அழகல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இதுமாதிரி உங்களுடைய உறுப்பினர்களை ‘நீங்கள் எழுந்திருங்கள்’ என்று சொல்வது சரியல்ல. அவர்களை அமைதிப்படுத்துவதை விட்டுவிட்டு, (குறுக்கீடு) சற்று பொறுங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) ஒரு தலைவருடைய பொறுப்பு தங்கள் கட்சி உறுப்பினர்களை அமைதிப்படுத்துவதுதானேயொழிய, அவர்களை எழுந்திருங்கள் என்று சொல்வது இந்தச் சபையில் உள்ள உறுப்பினர்களைத் தூண்டிவிடுவது போலாகிறது. அது உங்களுடைய பதவிக்கு அழகல்ல என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் திரு. நேரு அவர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவ்வப்போது விளக்கங்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள். இடையிலே மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் விளக்கத்தைச் சொன்னார். விளக்கம், விளக்கமாக இருந்தால் நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டு அமைதியாக இருக்கத் தயார்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆனால், அதையும் தாண்டி நேற்றைய தினம் இதே அவையிலே, பத்து கோடி ரூபாய் என்று குறிப்பிட்டு, அதிலே ஒரு முறைகேடு நடந்திருப்பதாக ஒரு செய்தியை இங்கே பதிவு செய்திருக்கிறார். தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது, திரு. கே.பி.பி. சாமி அவர்கள் மீன் வளத் துறை அமைச்சராக இருந்தார். அவர், அதுகுறித்து விளக்கம் தரவேண்டுமென்று உங்களிடத்தில் அனுமதி கேட்டார். நீங்கள் அனுமதி தரவில்லை. ஆனால், தொடர்ந்து இன்றும், அதே நிலையிலே மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்சினையை மீண்டும் இங்கே சுட்டிக்காட்டியிருப்பது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும்? எனவேதான், எங்களுடைய உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் தி.மு.க. ஆட்சி இருந்த நேரத்திலே மீன் வளத் துறை அமைச்சராக இருந்தவர், பெயர் சொல்லவேண்டுமென்று அவசியம் இல்லை. தி.மு.க. ஆட்சியிலே மீன் வளத் துறையிலே இருந்த அந்தக் குறைபாட்டை, அந்த முறைகேட்டை, அவர் எடுத்துச் சொல்கிறார். எனவே, அதற்கு விளக்கம் சொல்வதற்கு நீங்கள் தயவுகூர்ந்து அனுமதி தந்தால், நாங்கள் எந்தவித குறுக்கீடும் செய்வதற்குத் தயாராக இல்லை. தயவுகூர்ந்து அவருக்கு நீங்கள் அனுமதி தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுவதிலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, கடந்த ஆட்சியிலே இருந்த மீன் வளத் துறை அமைச்சர்மீது இந்த மாதிரியான குற்றச்சாட்டை அவர்மேல் தனிப்பட்ட முறையில், அவருடைய பெயரைச் சொல்லி குறிப்பிட்டிருந்தால், நான் நிச்சயம் அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருப்பேன். *(குறுக்கீடு)* அவருடைய பெயரைச் சொல்லி குறிப்பிடவில்லை. ஓர் ஆட்சியைச் சொன்னார். *(குறுக்கீடு)* ஓர் ஆட்சி என்று சொல்கின்றபோது அது பொதுவானது. அதற்கு நான்தான் பொறுப்பு என்று அவர் சொல்ல முடியாது. *(குறுக்கீடு)* அவர் சொல்ல முடியாது. *(குறுக்கீடு)* இன்று உங்களுடைய உறுப்பினர் திரு. நேருதான் பேசிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடு)* அவர்தான் அமைச்சர் என்று நீங்கள் சொல்கிறீர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவரைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவரைச் சொல்லவேயில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள் எழுப்பிய பிரச்சினை, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது ரூ.71 கோடியாக தற்போது உயர்த்தப்பட்டது ஏன் என்பது குறித்து விளக்கம் கேட்டார். அதனடிப்படையில்தான் நான் விளக்கம் சொன்னேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** முறைகேடு என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) முறைகேடு என்று எந்த வார்த்தையாவது நான் சொல்லியிருக்கிறேனா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, முறைகேடு என்று நான் சொல்லவில்லை. நான் சொல்லாத வார்த்தையை நீங்கள் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) முறைகேடு என்று நான் சொல்லவில்லை. Technical Committee–ஐ கலந்தாலோசிக்காமல் பணியை மேற்கொண்டதைப் பற்றித்தான் நான் சொன்னேன். அதுசம்பந்தமாகத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) Please sit down. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் எழுந்து, நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை என்பதை உறுதி செய்துவிட்டார். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு சொல்லாதபோது நான் யாரையும் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) யாரையும் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விடையளிக்கும்பட்சத்தில், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதுவும், குளச்சல் மீன்பிடி துறைமுகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி அல்ல. Main break water பணி துவங்குவதற்கு மட்டுமே. அதாவது, கடற்கரையிலே groynes-ஐ கற்களைக் கொட்டி break water அமைத்தார்கள். அங்கு கொட்டிய கற்களெல்லாம் கடலுக்குள் போய்விட்டன என்றுதான் சொன்னேனேயொழிய, யாரும் முறைகேடு செய்ததாக நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) இருங்கள். அதன் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த break water alignment சரியில்லை என்பதால், அதை இரத்து செய்துவிட்டு, ஒரு Technical wing–ஐ constitute செய்திருக்கின்றார்கள். அதாவது, Central Power Research Institute, பெங்களூருவிலிருந்து அவர்கள் வரவழைக்கப்பட்டு, ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே கிட்டத்தட்ட ரூ.60 கோடி—அந்த ரூ.10 கோடியை விடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்து, மீன்பிடி துறைமுகத்தை குளச்சல் பகுதியிலே அமைத்திருக்கின்றார்கள் என்றுதான் நான் சொன்னேன். அந்த ரூ.10 கோடிக்கு கடற்கரையிலே groynes கற்களைக் கொட்டினார்கள். அந்தக் கற்களெல்லாம் கடலுக்குள் போய்விட்டன. ஒரு Technical committee–ஐ consult செய்யாமல், இஷ்டம்போல் செயல்பட்டதன் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டது என்றுதான் நான் சொன்னேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள், திரும்பத் திரும்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். அதனால் மேற்கொண்டு யாரும் பேச முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசப் போகிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 1989 ஆம் ஆண்டு இந்த அவைக்கு வருகின்றபோது மொத்த வரவு–செலவுத் திட்டம் என்பது ரூ.25 ஆயிரம் கோடி.

ஆனால், இன்றைக்கு ரூ.1 இலட்சம் கோடி என்ற அளவிலே உயர்ந்திருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே ரூ.5 கோடி, ரூ.10 கோடி என்ற அளவிலே செய்த பணிகளை, இந்தக் காலக்கட்டத்தில் கூடுதலாகப் பணம் ஒதுக்கினால்தான் செய்ய முடியும் என்ற கருத்தில்தான் சொன்னேனேதவிர, வேறு கருத்தில் அல்ல. ரூ.10 கோடிக்கான கற்கள் கடலிலே போய்விட்டன என்று மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் கடலிலே போட்டு அடித்தளம் போட்டதால்தான், நீங்கள் மேலே அதை கட்ட முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்றால், அதை ஒன்றும் செய்ய முடியாது. எனவே, இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடலாம்.

முற்பகல் 11–00

நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சில, பல செய்திகளைச் சொல்கிறேன். நாங்கள் குற்றச்சாட்டாகச் சொல்வதாக அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்று கேட்டால், நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற அந்தப் பகுதிக்கும் சேர்த்துதான் நான் இதைச் சொல்லப் போகிறேன். தயவுசெய்து குறுக்கீடுகள் இல்லாமல் என்னைப் பேச அனுமதிக்குமாறு சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2006–2011 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவர், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, திருச்சி மாநகரிலே பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்றன. குறிப்பாக, காவேரி கரையைப் பலப்படுத்துவதற்காக 234 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அந்த வேலை முடிவடைந்தது.

1996 ஆம் ஆண்டு வெள்ள பாதிப்பு ஏற்பட்டபோது, கலைஞர் அவர்களே நேரடியாக திருச்சிக்கு வருகை தந்து, வெள்ளத் தடுப்பிற்காக முதல் கட்டமாக, 5 கோடி ரூபாயும், அடுத்தகட்டமாக, 77 கோடி ரூபாயும் ஒதுக்கித் தந்து, இன்றைக்கு அந்தப் பணியும் முடிந்திருக்கின்றது. திருச்சி மாநகருக்கு

குடிநீருக்காக 221 கோடியே 67 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்த நாடு தோன்றியதிலிருந்து திருச்சி மாநகர கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய அளவு 90 MLD. கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களால் ரூ.221 கோடியே 67 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, பணிகள் முடிவுற்று, 30–க்கும் மேற்பட்ட இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. அந்தத் தண்ணீர் வருகின்ற வழியில் நிலச்சுவான்தார்களின் இடையூறு இருந்தது. அதாவது, அந்த இடத்தில் திருவரங்கம் கோயிலுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அந்த நிலத்தின் வழியாகத்தான் குழாய்கள் பதிக்கப்பட்டு தண்ணீர் கொண்டுவர வேண்டும். குழாய்களைப் பதிக்கின்றபோதே, 'அங்கு குழாய்களைப் பதிக்கக்கூடாது' என்று அங்கிருக்கின்ற E.O.s தடை செய்தபோது, பொதுமக்களுக்காகத்தான் தண்ணீர் கொண்டு செல்கிறோம் என்று அவர்களை சமாதானப்படுத்தி, குழாய்களைப் பதித்து, தண்ணீர் கொண்டு வந்தோம்.

அதன் பின்னர், உங்களுடைய ஆட்சி வந்தது. உங்களுடைய ஆட்சி வந்த பிறகு, கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வருகின்ற தண்ணீர் சேறும், சகதியுமாக வந்து கொண்டிருக்கிறது. அதை சரிசெய்வதற்கு, அந்த இடத்திலே ஒரு filter போட வேண்டும். அதற்கான செலவு ரூ.70 இலட்சம்தான். அந்த 70 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டால், திருச்சி மாநகரிலே அனைத்து இடங்களிலும் சீரான குடிநீர் விநியோகம் செய்ய முடியும். ஆகவே, நீங்கள் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களோடு பேசி அதை செய்து தந்தால், திருச்சி மாநகரில் குடிநீர் பற்றாக்குறை இருக்காது என்று இதுசம்பந்தமாக, நேற்று மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் கேட்டபோது, 'நிலத்தடி நீர் குறைந்திருக்கிறது. காவேரியிலே நிலத்தடி நீர் இல்லை. அதனால், தண்ணீர் தர முடியவில்லை. அரசிடம் சொல்லியிருக்கிறோம். மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வரும். Recharge செய்து தண்ணீர் தருவோம்' என்று சொன்னார்களேதவிர, தண்ணீர் பற்றாக்குறையைப் பொறுத்தவரை, காவேரி மற்றும் கொள்ளிடம் இருக்கிற இடத்திலே, மொத்தமுள்ள 65 வட்டங்களிலே இன்றைக்கு 30–க்கும் மேற்பட்ட வட்டங்களுக்கு தண்ணீர் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோல, நீதிமன்றக் கட்டடத்திற்காக ரூ.13 கோடி அனுமதித்தார்கள். கட்டடம் கட்டப்பட்டு, திறக்கப்பட்டிருக்கிறது. அனுமதி அளித்ததெல்லாம் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில். கட்டப்பட்டு, திறந்ததெல்லாம் உங்களுடைய ஆட்சியில். அரசாணை வெளியிட்டது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு 12 கோடி ரூபாய்; மணப்பாறை தலைமை மருத்துவமனைக்கு ஒரு இலட்சம் குறைவாக 50 கோடி ரூபாய்; கொள்ளிடம் குடிநீருக்காக நிலத்தடி நீரைப் பெருக்குவதற்காக தடுப்பணை ஒன்று 30 கோடி ரூபாயிலே கட்டப்பட்டு, அதுவும் திறக்கப்பட்டிருக்கிறது. நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், ஐந்தாண்டு கால ஆட்சியில் என்னென்ன அறிவித்திருக்கிறோமோ, அதற்குள்ளாகவோ, அதற்குப் பிறகோ, 4, 5 ஆண்டுகளில் அந்தத் திட்டம் மக்களுடைய பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது என்பதைச் சொல்வதற்காகத்தான்.

கடந்த முறை நடைபெற்ற தேர்தலிலே, உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே ‘திருச்சி மையப் பகுதியாக இருக்கிறது, அங்கு ஓர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டுவோம்’ என்று சொல்லி, அதற்கான நடவடிக்கையை எடுத்தீர்கள். பேருந்து நிலையத்திற்கு இடம் தேர்வு செய்வதற்கென பல்வேறு இடங்களிலே அதிகாரிகள் சென்று ஆய்வு செய்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தேர்வு செய்த இடத்தை மாற்றி, வேறு இடத்தில் கட்டுவதாகச் சொன்னீர்கள். அதற்காக கிட்டத்தட்ட 109 கோடி ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, 23–7–2014–ல் அரசுக்கு அனுப்பப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், பணி இன்னமும் தொடங்கப்படவில்லை. உங்களுடைய கடந்த கால ஆட்சியிலே, இரண்டு வருடங்களுக்கு முன்னால் தரப்பட்ட அந்த ஆணை இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது.

முற்பகல் 11–05

அதேபோல, water system–ஐ மேம்படுத்துவதற்காக 69 கோடி ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டு, அந்தப் பணியும் தொடங்கப்படாமல் இருக்கிறது. Fish Market குழுமணி ரோடிலே அனுமதிக்கப்பட்டு, 10 இலட்சம் ரூபாய் அதற்காக முன்பணமும் வழங்கப்பட்டு, அந்தப் பணியும் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது.

திருச்சி மாநகரில் நிறைய விரிவுபடுத்தப்பட்ட பகுதிகள் இருக்கின்றன. அண்ணன் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்தபோது, திருச்சி மாநகரில் முதன் முதலில் 120 கோடி ரூபாய் செலவிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஸ்ரீரங்கம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஸ்ரீரங்கம் பகுதியிலே மட்டும் சில இடங்களிலே அந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறதேதவிர, நாங்கள் தொடங்கியதற்குப் பிறகு, மற்ற இடங்களிலே எல்லாம் இப்போது அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதற்கு 1,100 கோடி ரூபாய் என்ற அளவிலே மதிப்பீடு செய்யப்பட்டு, Detailed Project Report அரசாங்கத்திடம் வந்திருக்கிறது. அந்தப் பணி இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார். திருச்சி மாநகரம் என்று சொன்னால், முழுவதும் விளை நிலங்களாக இருந்த இடம். பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் எட்டு வாய்க்கால்கள் இருக்கின்றன. Junction பகுதியிலேயிருந்து காவேரி நோக்கி வரும்போது 8 வாய்க்கால்கள் இருக்கின்றன. விளை நிலங்களில் எல்லாம் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வாய்க்கால்களில் முழுவதும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பையும் அகற்ற முடியவில்லை. மழை பெய்தால், மழை நீர் வடிகால்கள் அமைக்கப்படாததால், தண்ணீர் ஆங்காங்கு நிற்கின்ற நிலை இருக்கின்றது. திருச்சி மாநகரம் முழுவதும் மழை நீர் வடிகால்களை உருவாக்குவதற்காக 1,100 கோடி ரூபாய் அளவிற்கு திட்டமிடப்பட்டு, 1,338 கோடி ரூபாய்க்கு அதற்கான திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டு, 15–3–2015 அன்று அரசுக்கு வந்திருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியில் காந்தி மார்க்கெட் பகுதி இருக்கிறது. அது நெரிசலான இடம். காந்தி மார்க்கெட்டைப் புனரமைக்க வேண்டும் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கையிலேகூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அங்கே இருக்கிற வியாபாரிகள் மற்ற இடங்களுக்குச் செல்லமாட்டோம்

என்கிறார்கள். பக்கத்திலே கல்லுக்குழி என்ற இடத்திலே அரசு சார்பாக ஒரு மார்க்கெட் செயல்படுகிறது. அங்கு வியாபாரிகள் எவரும் செல்வதற்குத் தயாராக இல்லை. அதனால், அந்த மார்க்கெட் இருக்கும் இடத்தில் தரையை உயர்த்தி, மாடி கட்டி, அங்கேயே அவர்களை வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்க 250 கோடி ரூபாய்க்கு முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 50 நிமிடங்களுக்கு மேல் உங்களுக்கு கொடுக்கப்பட்டது. இன்று பேசுவோர் பட்டியல் அதிகமாக இருக்கிறது. 50 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. சீக்கிரம் உரையை முடியுங்கள். உங்கள் உறுப்பினர் இன்னொருவரும் இன்று பேசவேண்டும். சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிது நேரம் பேச அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 50 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொஞ்சம் நேரம் பேச அனுமதி கொடுங்கள். (குறுக்கீடு) திருவெறும்பூர் தொகுதியில், அரியமங்கலத்தின் நடு பகுதியிலே 26 ஏக்கர் நிலத்திலே compost yard இருக்கிறது. அதனால் பல வியாதிகள் அந்தப் பகுதியிலே வருகின்றன. எங்களுடைய ஆட்சிக் காலத்தில்கூட அந்த compost yard–ஐ மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டு, அதற்காக 250 கோடி ரூபாய் அளவிலே திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதுவும் அரசுக்கு வந்திருக்கிறது.

விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி பகுதியிலே, 60–வது வார்டிலிருந்து 65–வது வார்டு வரை, ஐந்து வார்டுகள் முழுமையாக திருச்சி மாநகராட்சியிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஐந்தாண்டுகளாக, இப்போதுதான் வரி போட்டிருக்கிறார்கள். கட்டட அனுமதியும், திட்ட அனுமதியும் அந்த ஐந்து வார்டுகளுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை.

இப்போது, காவேரி ஆற்றில் கழிவு நீர் முழுவதும் வந்து கலக்கின்றது. ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, கிட்டத்தட்ட 23 கோடி ரூபாய் செலவிலே, TWAD Board மூலமாக, pump

செய்கிற பணியைச் செய்திருக்கிறார்கள். அதனுடைய கொள்ளளவு குறைந்துள்ளது. அது, மிகவும் மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். நேரு, நீங்கள் பேசியது போதும், இத்துடன் உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இத்துடன் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் (குறுக்கீடு) அவர் பேனாவெல்லாம் எடுத்து, பதில் சொல்லத் தயாராகிவிட்டார். நான் பேசிய பின்னர் பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களுக்குப் பதில் சொல்வது இருக்கட்டும். நேரமாகிவிட்டது, நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்று ஒன்பது பேர் பேசவேண்டும். நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்து வந்து ஆய்வு செய்யலாம். நாங்கள் சொன்ன இடம் என்பதால் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அல்ல. National Highways, 8 தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கின்ற பகுதியாக இருக்கின்றது. அங்கிருந்து விமான நிலையம் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. இரயில் நிலையம் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. எனவே, அது ஒரு முக்கியமான இடம். அரசுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் அந்த இடத்திலே இருக்கிறது. அரசுக்கு செலவும் குறைவு. அதே நேரத்திலே, 8 தேசிய நெடுஞ்சாலைகளையும் இணைக்கின்ற பகுதியாகவும் இருக்கிறது. அதை உங்களுடைய அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, அந்த இடத்திலே பேருந்து நிலையம் அமைத்துத் தந்தால், திருச்சி நகரின் வளர்ச்சிக்கு உதவும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்ரீரங்கம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர்கள், ஸ்ரீரங்கத்தில் பேருந்து நிலையம் கட்டுவேன் என்று சொல்லி, அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, அதுவும் கட்டப்படவில்லை.

அதேபோல, கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங்கம் போக்குவரத்துக் கழகமாகவும்...

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள், உரையை முடியுங்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக BHEL–லிருந்து பால் பண்ணை வரையில் உள்ள சாலை, மிகவும் நெரிசலான சாலை. தேசிய நெடுஞ்சாலை இரண்டிலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உரையை முடிக்கமாட்டேன் என்கின்றாரே, உரையை முடிக்கவேமாட்டேன் என்கின்றாரே, (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு சொல்கிறார் என்று நான் சொல்லவில்லை, எனக்கு நேரம் இல்லை, உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் பகுதியிலிருந்து திருச்சியை நோக்கி வருகின்றபோது சர்வீஸ் சாலைகளை அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் அறிவுறுத்தப்பட்டு, தேர்தல் அறிக்கையிலும் சொல்லப்பட்டது. ஆனால் இதுவரை அந்தப் பணி நடந்தபாடில்லை. அங்கே விபத்துகள் நடக்கின்றன. அதையும் நீங்கள் கவனத்தில்கொண்டு செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இரயில்வே மேம்பாலம். உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்கள். மேலகல்கண்டார்கோட்டை மற்றும் மணக்கால் பகுதிகளில் இரயில்வே மேம்பாலம் கட்டுவேன் என்று சொன்னீர்கள். உங்களுடைய அறிக்கையில் சொன்ன பல பணிகள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்துபேசி, திருச்சி மாநகரத்தை விரிவுபடுத்தப்பட்ட நகரமாக, பொலிவுள்ள நகரமாக மாற்றுவதற்கு துணை நிற்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவருக்கு நன்கு தெரியும். திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற திட்டங்கள் முழுவதும் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அவர்கள் ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டவை என்பது போல பேசி இருக்கின்றார்கள். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஸ்ரீரங்கம் தொகுதிக்கு அதிகமான திட்டங்களைத் தந்த ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, குடிநீர்த் திட்டப் பணிகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிவிட்டு திரும்பவும் அதை வேறு மாதிரி மாற்றிச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். உங்கள் ஆட்சியில், அதாவது தி.மு.க. ஆட்சியில் எடுத்த பணிகளைவிட, எங்கள் ஆட்சியில் கூடுதலாகச் செய்தோம் என்று ஒரு வார்த்தை கூறினார். எங்களுடைய ஆட்சியில் போடப்பட்ட சாலைகள், பாலங்கள், வடிகால்கள் போன்ற அத்தனை திட்டங்களும் எண்ணிக்கை கூடுதலாக இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் செய்ததைவிட நாங்கள் மூன்று மடங்கு அதிகமாகச் செய்திருக்கின்றோம். குடிநீருக்காக மட்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சரித்திர சாதனையாக 21,478.18 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். உங்கள் ஆட்சியில் 7,280.12 கோடி ரூபாயை ஒதுக்கினீர்கள். இப்படி ஒவ்வொன்றிலும், பாலங்கள், தெரு விளக்குகள், மழைநீர் வடிகால்கள் போன்று எல்லாவற்றையும் சொல்ல முடியும். பாலங்களை எடுத்துக்கொண்டால், உள்ளாட்சித் துறையில் மட்டும் 539 பாலங்களைக் கட்டியிருக்கின்றோம், ஆனால், நீங்கள் 58 பாலங்களைக் கட்டியிருக்கின்றீர்கள். இப்படி ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக சொல்ல முடியும். அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி உட்கார்ந்துகொண்டே பேசினால் என்ன அர்த்தம்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்தானே சொல்லிக்கொண்டிருக்கின்றார். நீங்கள் நினைக்கின்ற மாதிரி பதில் சொல்ல முடியாது. அவர் பதில் சொல்கின்றார், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகராட்சிப் பகுதியிலுள்ள 65 வார்டுகளில், 30 வார்டுகளில் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 60 வார்டுகளில் குடிநீர் பற்றாக்குறை கிடையாது. நபர் ஒருவருக்கு 154 லிட்டர் தண்ணீர் அங்கே வழங்கப்படுகின்றது. அந்த 5 வார்டுகளில் இருக்கக்கூடிய பேரூராட்சி மற்றும் கிராம பஞ்சாயத்துடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அற்புதமான திட்டங்களைத் தந்துள்ளார்கள். அவற்றிலும்கூட 2 வார்டுகளுக்கு இன்றைக்கு 100 சின்டெக்ஸ் டாங்குகள் வைத்து லாரிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இணைக்கப்பட்ட 5 வார்டுகளுக்கும் 63.70 கோடி ரூபாய் மதிப்பில் 12–8–2015 அன்று நிருவாக அனுமதி பெறப்பட்டு, 3 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த 5 வார்டுகளுக்கும் 3–3–2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த அளவில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் விடுபட்ட பகுதிகளுக்கும் குடிநீர் கிடைக்கும் வகையில் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

அதேபோல், பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்த அளவில், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடுகள்) 1,044 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு பேசும்போது அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள் அல்லவா?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,044 கோடி ரூபாய் நிதி இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அந்த புள்ளிவிவரத்தையும்கூட மாற்றிச் சொல்கிறார். 1,044.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இவ்வாறு பொறுமை இல்லாமல் குறுக்கிடுவது என்ன நியாயம்? பொறுமையாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,044.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) குறிப்பிட்ட 10 தி.மு.க உறுப்பினர்கள் எந்த அமைச்சர்கள் பேசினாலும் தனியாக வந்து குறுக்கிடுகிறீர்கள். நீங்கள் அமைச்சர்களாக இருந்தபோது, நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தேன். நாங்கள் அப்போது எப்படி அவையில் இருந்தோம்? நீங்கள் இப்போது எப்படி இருக்கிறீர்கள்? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் நாங்கள் இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் உங்கள் தலைவர் சொன்னாலும் சரி, துணைத் தலைவர் சொன்னாலும் சரி, உங்கள் கொறடா சொன்னாலும் சரி, யாருமே உட்கார மாட்டேன் என்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). நீங்கள் எப்படி கட்டுப்பாட்டோடு இருக்கிறீர்கள் என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். (குறுக்கீடுகள்) அமைச்சர்களுக்கு பதில் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர்கள் பேசி முடித்தவுடன் மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடம் அனுமதி பெற்று பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ரூ.1,044.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இவற்றில் Phase-I–ல் 24

கோடி ரூபாயில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 81% வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. Phase-II–ல் ரூ.439 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் துறை குறித்து நிறைய கேள்விகள் கேட்டிருக்கிறார். நான் பதில் சொல்லித்தானே ஆக வேண்டும். ரூ.439.21 கோடி ரூபாய்க்கு Phase-II–ல், Phase- III–ல் 452.96 கோடி ரூபாய் மற்றும் phase- IV–ல் 128 கோடி ரூபாய். இவ்வாறு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, விடுபட்ட பகுதிகளுக்கும் சேர்த்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழுமையான நிதியினை பார்த்துப் பார்த்து பிரித்துக்கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் காவேரி நதிநீர் பகுதிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

குப்பைக் கிடங்கைப் பற்றிப் பேசினார்கள். 26,000 ஏக்கர் பரப்பில் குப்பைக் கிடங்கு இருக்கிறது. அதிலிருந்து உரம் தயாரிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 430 டன் அளவிற்கு ஒரு நாளுக்கு அந்தப் பகுதியில் குப்பை கொட்டப்படுகிறது. தனித் தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து 100 டன் உரம் தயாரிப்பதற்கும், 180 டன்னுக்கு வேறொரு திட்டத்திற்கு DPR தயார் செய்திருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்படும் அனைத்துத் திட்டங்களுக்கும் என்னென்ன தேவையோ அவை வழங்கப்பட்டு, அனைத்தும் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்ல, அரியமங்கலம் குப்பைக் கிடங்கு குறித்து கடந்த முறை இங்கு பேசிய உறுப்பினர்கள் கூட, அங்கு அடிக்கடி நெருப்பு பிடித்துக்கொள்கிறது, அதனால் பாதுகாப்பு தேவை என்று கோரியிருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் CCTV camera பொருத்தப்பட்டுள்ளது. நெருப்பு பிடிக்காமலிருக்கவும், ஈ மற்றும் பூச்சிகள் வராமல் மக்களைப் பாதுகாப்பதற்கும் நல்ல தரமான மருந்து தெளிக்கப்படுகிறது. எனவே, திருச்சி மாவட்டத்திற்கு என்னென்ன தேவையோ அனைத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–20

திருச்சி பேருந்து நிலையம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். திருச்சி பேருந்து நிலையத்தைப் பொறுத்தளவிற்கு, கூடுதலாக வேலையிருக்கிற காரணத்தினால், 200 ஏக்கர் தனியார் இடமும், அரசு நிலங்களும் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வலியுறுத்தப்பட்டு, அந்தத் திட்டமும் நடைபெறக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. இன்றைக்கு என்னென்ன தேவையோ, அவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்தது இன்னும் நிறைய இருக்கின்றன. நேரத்தின் அருமை கருதி முடித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தளவில், இன்றைக்கு திருச்சி மாவட்டத்திற்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ, அத்தனையும் செய்து தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், (குறுக்கீடு) இருங்கள், கடந்த 5 வருட தி.மு.க. ஆட்சியிலே, திருச்சி மேற்குத் தொகுதியிலே, உள்ளாட்சித் துறைக்கு மட்டும் ரூ.130 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கினீர்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 294.17 கோடி ரூபாயை உங்களுடைய தொகுதிக்கு மட்டும் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சியிலே, உள்ளாட்சித் துறைக்கு நீங்கள் எவ்வளவு நிதி ஒதுக்கியிருந்தீர்கள்? அப்போது நீங்கள் அமைச்சராக இருந்தீர்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உங்கள் தொகுதி உட்பட 234 தொகுதிகளுக்கும் அதிகமான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தளவில், அத்தனை திட்டங்களையும் தந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, திருச்சி, துவாக்குடி பால் பண்ணை ரவுண்டானா வரை சேவைச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்ற கருத்தை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். அதனுடைய நீளம் 14.490 கிலோ மீட்டர். தேசிய நெடுஞ்சாலை எண் 67, திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர் பிரிவு, தேசிய நெடுஞ்சாலை* NH *67 துவாக்குடி முதல் திருச்சிராப்பள்ளி பழைய பால் பண்ணை வரையிலான 14.49 கிலோ மீட்டர் தூரத்திற்கு சேவைச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிக்கு ரூ.84.50 கோடிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 2011—ல் ஆணை வழங்கியுள்ளார்கள். அதற்கான நிதியும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த சேவைச் சாலையை 60 மீட்டர் அகலத்திற்கு அமைக்க மத்திய அரசு அரசிதழில் அறிக்கை வெளியிட்டதால், பொது மக்களில் ஒரு பகுதியினர் 45 மீட்டர் அகலம் போதுமென்று கருத்துத் தெரிவித்தபடியால், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் நிலம் கையகப்படுத்தும் பணி தடைபட்டுள்ளது. நீதிமன்றத்தில் 123 நில உரிமையாளர்களால் வழக்குத் தொடுக்கப்பட்டு, நிலுவையிலுள்ளது. மாவட்ட ஆட்சியர் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் அதிகாரிகளிடையே பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிற காரணத்தினாலே, சேவைச் சாலை அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அந்த வழக்கில் தீர்ப்பு கிடைத்த பிறகு, அங்கே சேவைச் சாலையை அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள் பேசுகின்றபொழுது, திருச்சி மாவட்டத்தைப் பற்றிய தன்னுடைய கருத்துகளைத்*

தெரிவித்தார்கள். குறிப்பாக, சுற்றுலாத் துறை அமைச்சர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் ஆகியோரைப் பற்றியும் பேசினார்கள். அந்த வகையிலே, என்னுடைய கருத்துகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, திருச்சி மாநகரில் நடைபெற வேண்டிய சில திட்டங்கள் பற்றியும், அதற்காக அளிக்கப்பட்டுள்ள நிதியைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே, அந்தத் திட்டங்கள் அனைத்தையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிறைவேற்ற இந்த அரசு நிச்சயம் பாடுபடும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏனோ பாராட்ட மனமில்லாமல் இருந்தாலும், அதை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருச்சி மாநகர் மட்டுமல்ல, திருச்சி மாவட்டமே பாராட்டுகின்ற வகையிலே அற்புதமான நல்ல பல திட்டங்களையும் நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்கின்ற செய்தியினை இந்தச் சபையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

தேசிய அரசு சட்டக் கல்லூரியை திருச்சி மாவட்டத்திலே நிறுவியது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, தேசிய அரசு கலைக் கல்லூரி, (மேசையைத் தட்டும் ஒலி) அரசு மகளிர் வேளாண்மை பல்கலைக்கழகம், (மேசையைத் தட்டும் ஒலி) அரசு தொழில்நுட்பக் கல்லூரி, அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அரசு போக்குவரத்து பயிற்சிப் பள்ளி, ரூ.1,650 கோடி செலவில் முண்டிப்பட்டியிலே காகித தொழிற்சாலை (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற அற்புதமான திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள் என்கின்ற செய்தியினை இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வண்ணத்துப்பூச்சி பூங்கா, ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியிலே யாத்ரிகர்கள் வந்து தங்குவதற்கு வசதியாக Yatri Niwas–ஐ உருவாக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வானிலை ஆராய்ச்சி மையத்தை உருவாக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொள்ளிடம் பாலத்தை ரூ. 75.45 கோடி செலவில் புதுமையாக உருவாக்கிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். அந்த வகையிலே, நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைக் கூறுவீர்கள் என்று எதிர்பார்த்தால், அதிலுள்ள சின்னச் சின்ன குறைபாடுகளைச் சொல்கிறீர்கள். இத்துணைக் காலம் காந்தி மார்க்கெட் பகுதி எந்த அளவிற்கு நெரிசலாக இருந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிந்ததுதான். நாங்கள் வருகின்ற காலங்களில் சரி செய்யப் போகின்றோம் என்பதை முன்பே அறிந்து கொண்டு, முன்னெச்சரிக்கையாக இப்படிச் செய்யுங்கள் என்று, நாங்கள் தயாரித்து வைத்திருக்கின்ற திட்டத்தை, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நாங்கள் செய்யவிருக்கின்ற திட்டத்தை, நீங்கள் கூறினால் என்ன அர்த்தம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு, நன்றியோடு விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய செல்லமான தொகுதியாக இருந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதிக்கு அருகில் காவேரி ஆற்றின் குறுக்கே 33½ கோடி ரூபாய் செலவில் முத்தரசநல்லூர் என்ற ஊரில் புதிய தடுப்பணை கட்டப்பட்டு, அந்தத் தடுப்பணையின் மூலமாக நிலத்தடி நீர் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நேரு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு 55 நிமிடம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். மேலும், விவாதத்தை வளர்க்க முடியாது. உட்காருங்கள். பதில்தான் சொல்லி இருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றுமில்லை. என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 33½ கோடி ரூபாய் செலவில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அந்தக் காலத்தில் போடப்பட்ட திட்டம் என்னவென்றால், இருவழிச் சாலையாக ஸ்ரீரங்கம் கோயிலுக்கு வர வேண்டியிருப்பதால், ஒரு சுற்றுச் சாலையாகப் போட வேண்டுமென்பதற்காக 300 கோடி ரூபாய் நபார்டு வங்கியிடமிருந்து பெறப்பட்டு, ஆட்சி முடிகிற நேரத்தில், 30 கோடி ரூபாயை அனுமதித்தது தி.மு.க. ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தடுப்பணை கட்டியது தி.மு.க. ஆட்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். (குறுக்கீடு) இவ்வளவு நேரம் பேச அனுமதித்தும் (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் பதிலுக்குப் பதில் பேச முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள். (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) பதிலுக்குப் பதில் எல்லாம் நீங்கள் பேச முடியாது. நேரமில்லை. உங்களுக்குப் பேச 55 நிமிடங்கள் வாய்ப்பு தந்துவிட்டேன். பதிலுக்குப் பதில் எல்லாம் பேச முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

முற்பகல் 11–30

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பே சிவம் என அன்பு செலுத்துபவர்களை கடவுளுக்கு இணையாகக் கூறக் கேட்டதுண்டு மூதோர் கூற்றினிலே. பாரி முதல் சடையப்ப வள்ளல் வரை கடையேழு வள்ளல்களின் பெருமைகளைப் படித்ததுண்டு பாவலர்களின் பாட்டினிலே. கருணையின் பெருமையைக் கூறக் கேட்டதுண்டு கடவுளைப் பற்றிய கதைகளிலே.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*2016 ஜூலை 26]* [திரு. ஓ.கே. சின்னராஜ்]

*துறந்தவர்கள் மிகுந்த நாட்டை, தொடர்ந்திடும் துன்பமெல்லாம் எனத் தெரிந்ததுண்டு தமிழ் இலக்கியங்களிலே. அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் ஆகியவற்றைக் கற்றதுண்டு வள்ளுவப் பெருந்தகையின் பொருட்பாலிலே! அன்பு, அறம், பண்பு, நீதி, வீரம் ஆகியவற்றைப் படித்ததுண்டு பைந்தமிழர் வரலாற்றிலிருந்து. ஆனால், இவை அனைத்தையும் நான் ஒருங்கே கண்டுகொண்டேன் எங்கள் அன்னையின் வடிவிலே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மண் கண்ட மாதவமே! மறை கண்ட சாதகமே! எங்கள் கண்கண்ட தெய்வமே! கல்வி தரும் நல் அறிவே! அன்பின் திருவுருவமே! ஆற்றலின் ஊற்றே! நம்பினோருக்கு நாயகமே! பசிப் பிணி போக்கிட்ட அன்னலட்சுமியே! (மேசையைத் தட்டும் ஒலி) வகையறியா மானிடருக்கு வழிகாட்டும் விடிவெள்ளியே! தமிழினத்தைக் காத்து வந்த அருந்தவமே! கூப்பிய கரம் விலகும் முன்பே வரம் அளிக்கும் அட்சயமே! எதிரிகளுக்கு சிம்மசொப்பனமே! தனி மனித இராணுவமே! (மேசையைத் தட்டும் ஒலி) தாய் உருவில் தெய்வமே, தங்களை என்ன சொல்லி வாழ்த்துவேன், சொல் இல்லை, வணங்குகிறேன் தாயே! மனிதர்கள் கடவுளாக மாட்டார்கள்; ஆம், நிச்சயம் முடியாது. ஆனால், கடவுள்கள் மனித உருவில் அவதரிப்பார்கள். ஆம், கடவுளே எங்கள் அன்னையின் உருவிலே வந்து, நம்மையெல்லாம் காத்து, நல்லாட்சி செய்து, தமிழரின் குலம் காத்து, அவர்தம் உரிமைகளை மீட்டு, தமிழினத்தை தரணியிலே தலை நிமிரச் செய்திட, தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக மாற்றிட, வரும் இன்னல்களையெல்லாம் இன்முகத்துடன் தானே ஏற்று, அனுதினமும் மக்களுக்கு ஏற்றம் தந்திடும் பல நல்ல திட்டங்களை வழங்கி, அகிலத்தில் ஆளும் அரசுகளுக்கெல்லாம் முன்மாதிரியாக மக்களாட்சி செய்துவரும் எங்கள் அன்னையைத் தொழுகிறேன். என்போன்ற எளியோனையும் இந்த அவைக்கு மூன்றாம் முறையாக அடியெடுத்து வைத்திட அடித்தளம் அமைத்துத் தந்து இன்று நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் பங்கேற்கும் வாய்ப்பினையும் நல்கிட்ட, நான் அனுதினமும் வணங்கும் எங்கள் குலதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்நன்னாளில் வணங்கி, எனது நன்றியினை அவர்தம் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வெற்றியினை ஈட்டித் தந்த மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி வாக்காள பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 35 ஆண்டு காலம் தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு மாபெரும் வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தி, தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்று, இன்று ஆறாம் முறையாக தமிழக முதலமைச்சராக அரியணையில் அமர்ந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 21 ஆம் தேதி இம்மாமன்றத்தில் தாக்கல் செய்த திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாத்திற்குள் செல்லும்முன்பு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை நாம் சற்றே உற்று நோக்க வேண்டும்.

உலக பொருளாதாரத்தில் மாபெரும் தேக்கநிலை உண்டாகி உள்ளதால், அதன் பாதிப்பு நமது நாட்டின் பொருளாதாரத்தின் மீதும், குறிப்பாக, நமது மாநிலத்தின் பொருளாதாரத்தின் மீதும் வெகுவான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பது நிதர்சனமான உண்மை. இந்தத் தாக்கத்தின் காரணமாக நம் மாநிலம் அதன் சொந்த வரி வருவாய் வளர்ச்சியில் சரிவை சந்தித்துள்ளது. மேலும், தேர்தலுக்காக எதை வேண்டுமானாலும் சொல்லலாம், எப்படியாவது ஆட்சியைப் பிடிக்கலாம், அதற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம், யாருடன் வேண்டுமானாலும் கூட்டு வைத்துக்கொள்ளலாம், கேடில் முடிந்த கூடா நட்புடன் கூடி குலாவலாம், பழம் கனியுமென்று அது பாழாய் போகும் வரையும் காத்திருக்கலாம் என்று அலைந்தவர்கள் மத்தியிலே, சொன்னதைச் செய்வோம், சொல்லாததையும் செய்வோம் என, மக்களின் பேராதரவுடன் ஆட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) அமைத்து, அரை மணி நேரத்திற்குள்ளாக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எந்த நிலையிலும் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதுதான் தனது குறிக்கோள் எனும் இலட்சியத்தைக் கொண்டுள்ளவர் நமது மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

“ஏழை மக்கள் மீது வரி போட்டுத்தான் நாட்டை ஆள வேண்டுமென்றால், சர்க்காருக்கும், சத்திரம் சாவடிக்கும் வித்தியாசமொன்றுமில்லை” எனச் சொன்னவர், “ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான்” என்ற உண்மையை உலகுக்கு

*உணர்த்தியவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அவர் வழியில், ஏழை மக்களுக்காகவே வாழ்ந்து, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதை விட்டு மறையாமல் அவர்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மனித புனிதர், எட்டாவது வள்ளல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாரிசாக வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கண்ட கனவை மெய்ப்பிக்கும்விதமாக, அவர்கள் விட்டுச் சென்ற மக்கள் பணிகளை முன்னெடுத்துச் சென்று, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என தன் வாழ்க்கையை இம்மாநில மக்களுக்காக அர்ப்பணித்து, தவ வாழ்வு மேற்கொண்டு வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தாக்கல் செய்திட்ட "வரி எனும் வரியே இல்லாத" இந்த நிதிநிலை அறிக்கையினை நான் நல்ல மனதோடு பாராட்டுகிறேன். நான் ஏன் இதைச் சொல்கின்றேன் என்று சொன்னால், எந்த ஒரு நல்ல விஷயத்தையும் பாராட்ட நல்ல மனம் வேண்டும், பாராட்ட மனமில்லையென்றாலும், குறைந்தபட்சம் நல்ல விஷயங்களை ஏற்றுக்கொள்கின்ற மனப் பக்குவமாவது வேண்டும். ஒரு சிலருக்கு ஏனோ அதுவுமில்லை. எது நடந்தாலும், குறை சொல்வதிலேயேதான் நிறைவடைந்து கொள்கின்றனர். என்ன செய்ய, அவர்களின் வாழ்வே பெரும் பிழையாகிவிட்டது.*

*மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், "இது வெத்து வேட்டு பட்ஜெட்" என்று. ஆனால், நாட்டு மக்கள் நன்றாக சிந்திக்கத் தெரிந்தவர்கள். அவர்களுக்கு கெத்து எது? வெத்து எது? என்று தெரிந்துதான் கெத்தான நம் மாண்புமிகு அம்மாவிற்கு ஆட்சியை மீண்டும் வழங்கிவிட்டு, வெத்தான அவர்களுக்கு தேர்தலிலே வேட்டு வைத்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலம் வளர்ச்சி பெற வேண்டுமெனில், அந்த மாநிலத்தின் மக்கள் வளம் பெறவேண்டும். மக்கள் வளம் பெற வேண்டுமெனில், மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி அடையவேண்டும். பொருளாதாரம் வளர்ச்சி அடைய பல்வேறு காரணிகள் உள்ளன. மனித வளம் மேம்பட்டால், அந்த மாநிலத்தின் வளர்ச்சி அதிகமாக இருக்கும். மாணவ, மாணவியருக்கு சிறப்பான கல்வியை அளிப்பதாலும், மக்களின் உடல் நலத்தைப் பேணிக் காப்பதாலும், மனித குலம் மேம்பாடு அடைய முடியும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா*

அவர்களின் கூற்றினை மெய்ப்பிக்கும் விதமாக இந்த மாநிலத்தில் உள்ள அனைத்து குழந்தைகளும் தரமான கல்வியை எளிதில் பெற்றிடும் வகையில், கல்வித் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதனை உலகறியும். மாணவ, மாணவியர்களுக்கு, விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், நான்கு செட் சீருடைகள், புத்தகப் பை, பேருந்து கட்டணச் சலுகை, மிதிவண்டிகள் போன்றவற்றோடு உலகில் எங்கும் இல்லாத உன்னத திட்டமான மடிக்கணினி வழங்கி, மாணவ சமுதாயத்தின் திறமையை உலக நாடுகள் வியக்கும் வண்ணம் உருவாக்கியவர் நமது அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2007–2008 ஆம் நிதியாண்டில் தி.மு.க. ஆட்சியில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.7,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் ஒதுக்கியுள்ள தொகை ரூ.24,130 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், உயர் கல்வித் துறைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.3,679.01 கோடியாகும். ஆக, தமிழக வரலாற்றில் கல்வித் துறைக்கென அதிகப்படியான தொகையினை ஆண்டுதோறும் வழங்கி, மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்தவர் நம் அம்மா அவர்கள் என்பதனை நான் பெருமிதத்தோடு இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், மனித வள மேம்பாட்டின் அடுத்த காரணி மக்களின் சுகாதாரம். சுகாதாரத் துறைக்கு 2007–2008 ஆம் நிதியாண்டில் தி.மு.க. ஆட்சியின் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2,200 கோடியாகும். இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.9,073 கோடி ஒதுக்கீடு செய்ததோடு, இந்த ஆண்டில் புதிதாக 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும், 24 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட நிலையங்களாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடுத் திட்டத்தின்மூலம் தமிழகத்தில் ஒரு கோடியே 58 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். அதோடுமட்டுமல்லாமல், இந்தத் துறையிலே புதுமையான திட்டங்களான அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம்,

அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா ஆரோக்கியத் திட்டம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியதோடு, அவை தொடர்ந்து செயல்பட இந்த நிதிநிலை அறிக்கையிலே வழிவகை செய்யப்பட்டுள்ளதை இங்கே பெருமிதத்தோடு சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11–40*

ஆக, தரமான கல்வி, ஆரோக்கியம் மட்டுமல்லாமல், தனி மனிதனின் பொருளாதாரமும் உயர்ந்திட வேண்டுமென்ற உயரிய சிந்தனையில், கிராமங்களில் வறுமை ஒழிப்பிற்காக 355.81 கோடி ரூபாயும், நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டங்களுக்காக 350 கோடி ரூபாயும், படித்த இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக 150 கோடி ரூபாயும் ஒதுக்கியதோடு, கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட மிகவும் உயரிய வழியினைக் கண்டுபிடித்து, முன்னோடி திட்டமான விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து, அதனைத் தொடர்ந்து செயல்படுத்திட ஏதுவாக இந்த நிதிநிலை அறிக்கையில் 707.33 கோடி ரூபாயினை ஒதுக்கி, மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நான் இங்கு குறிப்பிட்டுள்ளவை தவிர, முக்கியமானது மாநிலத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பது. அமைதி குன்றிய சூழ்நிலை இருந்தால், அம்மாநில மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளவே நேரத்தினை, ஆற்றலினைச் செலவிடும் நிலை ஏற்படும். அதனால், மனித வளம், பொருளாதார மேம்பாடு அடைய முடியாமல் போகும். எனவே, நாட்டின் பொருளாதாரமும் சீர்கெடும். அந்த வகையில், மாநிலத்தில் அமைதியை நிலைநாட்டுவதில் முழுப் பங்காற்றுவது காவல் துறை. அந்தக் காவல் துறையை செம்மைப்படுத்திய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுக்கே உரியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சியின் தொடக்கத்தில் காவல் துறைக்கு ஒதுக்கிய தொகை 1,900 கோடி ரூபாய். அந்த ஆட்சியின் முடிவில், அதாவது, 2010–2011 ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 2,900 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு அம்மா

அவர்களின் ஆட்சியில், இந்த நிதிநிலை அறிக்கையில், காவல் துறைக்கு கடந்த ஆட்சியாளர்கள் ஒதுக்கிய தொகையைவிட சுமார் இரண்டு, மூன்று மடங்குகள் அதிகரித்து, 6,102.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள்தான், காவல் துறைக்கு முழு சுதந்திரம் வழங்கியுள்ளார்கள். காவல் துறையில் யார் தலையீடும் நிச்சயம் இருக்காது என்று பொதுமக்களே சொல்லும் அளவிற்கு காவல் துறை செயல்படும் காரணத்தினால்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலெல்லாம் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்பதனை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய ஆட்சியாளர்கள் காணாமல் செய்துவிட்ட மின்சாரத்தைக் கண்டுபிடித்ததோடு, 2011 ஆம் ஆண்டு முதல் மின் உற்பத்தியில் தனிக் கவனம் செலுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) புதிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டி, ஏற்கெனவே உள்ள மின் உற்பத்தி நிலையங்களில் அதன் முழு அளவிலான உற்பத்தியையும் பெற்றிட வழிவகை செய்து, மின்வெட்டை ஒழித்து, மிகை மின் மாநிலமாக தமிழகத்தை மாற்றி, இன்று உபரி மின்சாரத்தை அண்டை மாநிலங்களுக்கு வழங்கும் நிலைமையை ஏற்படுத்தியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், எதிர்கால மின் தேவையினைக் கருத்திற்கொண்டு, அடுத்த 5 ஆண்டுகளில் 18,500 மெகா வாட் கூடுதல் மின்சாரம், அனல், புனல் மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திமூலம் பெறப்படும் என்றும், மின் விநியோகத்தினை சீரமைத்திட 1,593 கோடி ரூபாய் மதிப்பில் ஜெர்மன் வங்கி உதவியுடன் ‘பசுமை ஆற்றல் மின் தொடர் திட்டமும்’, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை உதவியுடன் 5,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருவது குறித்து இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அனைத்து மின் நுகர்வோருக்கும் விலையில்லா 100 யூனிட் மின்சாரம், கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா 200 யூனிட் மின்சாரம், விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா 750 யூனிட்

மின்சாரம் வழங்கப்படும், இதுபோன்ற (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வாக்குறுதிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் மின்சாரத்தைவிட மிக வேகமாக நிறைவேற்றி, அந்தத் திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திட ஏதுவாக இந்த திருத்திய நிதிநிலை அறிக்கையிலே எரிசக்தித் துறைக்கு மொத்தமாக 13,856 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை தமிழக மக்கள் அனைவரும் மனதார வாழ்த்திப் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்னும் தாரக மந்திரத்தோடு செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, தொழில் துறையில் பல வியத்தகு சாதனைகளைச் செய்துள்ளது. கடந்த ஆட்சியாளர்களின் நிருவாக சீர்கேட்டால் நாட்டில் சட்டம்–ஒழுங்கு கெட்டு, அமைதியற்ற சூழல் நிலவியது. மின்சாரத் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் கடந்த 2006 முதல் 2011 வரையிலே தொழில் துறை முடங்கிக் கிடந்தது. 2011–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இவை அனைத்தையும் சீர் செய்ததன் விளைவாக தொழில் துறை ஏற்றம் கண்டது. பல முதலீட்டாளர்கள் தொழில் துவங்க தமிழகத்தை நாடி வரும் நிலை ஏற்பட்டது.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையிலே கடந்த ஆண்டு சென்னையிலே 'சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு' வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. அந்த மாநாட்டின் மூலமாக 2,42,160 கோடி ரூபாய் முதலீடு பெறுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று ஓராண்டு முடிவதற்குள்ளாகவே 23,758 கோடி ரூபாய் முதலீட்டில் தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. அதன் மூலமாக 48,145 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள்.

மேலும், அடுத்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு அடுத்த ஆண்டு நடைபெறும் என்றும், தொழில் துறையின் வளர்ச்சிக்காக 2,104.49 கோடி ரூபாய் நிதியும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு 348.22 கோடி ரூபாய் நிதியும் திருத்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை இங்கு நான் பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கேற்ப, எண்ணியவற்றையெல்லாம் எண்ணியவாறு பெறக்கூடிய மன வலிமை, அறிவாற்றல் பெற்ற ஒரே தலைவி நம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 2007–2008 ஆம் நிதியாண்டிலே தி.மு.க. ஆட்சியின் நிதிநிலை அறிக்கையில் உணவு தானிய உற்பத்தி இலக்கு 100 இலட்சம் மெட்ரிக் டன் எனக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், அவர்களது 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் அவர்களால் அந்த இலக்கினை அடைய முடியவில்லை. அவர்கள் ஆட்சிக் காலத்தில் இறுதியாக தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் இலக்கினை 90 இலட்சம் மெட்ரிக் டன்னாகக் குறைத்தார்கள். ஆனால், அந்த இலக்கையும் அவர்களால் அடைய முடியவில்லை. இறுதியாக, அவர்கள் அடைந்தது 85 இலட்சம் மெட்ரிக் டன் மட்டுமே. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2011–2012 ஆம் ஆண்டிலே உணவு தானிய உற்பத்தி 115 இலட்சம் மெட்ரிக் டன் என இலக்கு நிர்ணயித்தார்கள். இன்று 115 இலட்சம் மெட்ரிக் டன் இலக்கினைத் தாண்டி, இதுவரை யாரும் செய்திடாத சாதனையாக 125 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசினுடைய 'கிருஷி கர்மான்' விருதினை தொடர்ந்து நம் மாநிலத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த இலக்கினை 147 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தியுள்ளார்கள். அம்மா அவர்களது சீரிய தலைமையில் செயல்படும் இந்த அரசு இந்தச் சாதனையையும் செய்யும் என்பதனை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், வேளாண்மைத் துறையின் மேம்பாடு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம், 27.50 இலட்சம் ஏக்கரில் திருத்திய நெல் சாகுபடி, 43,688 ஏக்கர் பரப்பிலே நீடித்த நவீன கரும்பு சாகுபடி, மானாவாரி பயிருக்கான புதிய திட்டம், 319 கோடி ரூபாய் செலவில் நுண்ணீர் பாசன முறை, 100 கோடி ரூபாய் செலவில் பண்ணை

இயந்திரமயமாக்கும் திட்டம், இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் இழப்புகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க பயிர் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததோடு, தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதியான கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் பெற்றிருந்த கடனைத் தள்ளுபடி செய்வது தொடர்பாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே 5,780.92 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, 16,94,145 வேளாண்மைப் பெருங்குடி மக்கள் வாழ்வில் ஒளியேற்றியவர் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முதல்முறையாக வெகுஜன ஆட்சியை ஏற்படுத்தியவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். இம்மாநில மக்கள் பசிப் பிணியிலிருந்து விடுபடவேண்டும். அதற்காக படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வர அரும்பாடுபட்டார் என்பதனை நாடு அறியும். இந்த அவையிலே படி அரிசியைப் போட முடியாமையால் நான் உள்ளபடியே மிகுந்த வருத்தப்படுகிறேன் என்றுகூட கூறியுள்ளார். அதைப்பற்றி மேலும் அவர் பேசுகையில், சொக்கப்பர் எங்கே இருக்கிறார் என்று கேட்டால், சொக்கப்பர் சோற்றிலே இருக்கிறார் என்றுதான் சொல்வார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆக, மாநில மக்களின் பசிப் பிணியை அறவே அகற்றிட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய குறிக்கோள் என செயல்பட்டு வந்தார். அவர் வழி வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், ஏழை மக்கள் வயிறார உண்ண வேண்டும் என்பதற்காக சரித்திரம் போற்றும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பேரறிஞர் அண்ணா, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் இலட்சியங்களை, கனவுகளை நிறைவேற்றும் வகையிலே, 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தினை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுவரை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மானிய விலையில் பல்வேறு அத்தியாவசியப் பொருள்களையும் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக வழங்கி வருவதோடு மட்டுமல்லாமல், வெளிச் சந்தையிலே பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், 20 ரூபாய் விலையிலே தரமான அரிசி, பண்ணை பசுமைக் காய்கறி அங்காடிகள், அம்மா உப்பு, மருந்தகம், குடிநீர், சிமெண்ட் போன்ற அற்புதத் திட்டங்களையும் கொண்டுவந்து, விலைவாசி உயர்விலிருந்து மக்களைப் பாதுகாத்து வருகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், உலக நாட்டவர் அனைவரும் வியந்து போற்றும் 'அம்மா உணவகத் திட்டம்', திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம், இந்த நிதியாண்டிலே மேலும் 30 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு, *(மேசையைத் தட்டும் ஒலி)* சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 1,644 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பு போன்றவற்றை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக, பேரறிஞர் அண்ணா, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் கனவுகளை நிறைவேற்றி, தமிழகத்திலே பசிப் பிணியைப் போக்கிய ஒரே தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதை இங்கே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என அரசுக்கு இலக்கணம் வகுக்கிறார் வள்ளுவப் பெருந்தகையார். ஆனால், நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான அதிகாரங்கள் மத்திய அரசிடம் உள்ள நிலையில், மாநில திட்டங்கள், மக்களின் அத்தியாவசிய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி, மக்களின் நலம் காத்து, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் பொறுப்பு முழுவதுமாக மாநில அரசுக்கு உள்ளது. மாநில அரசின் சொந்த வருவாயை உயர்த்திய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2005–2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே வருவாய் உபரி ரூ.1,951 கோடி. அடுத்து வந்த ஆட்சியாளர்களின் நிருவாகச் சீர்கேட்டால், 2010–2011 ஆம் நிதியாண்டிலே வருவாய் பற்றாக்குறை ரூ.3,129 கோடி. ஆக, நிதிநிலை பற்றாக்குறை நிர்ணயிக்கப்பட்ட 3 சதவீதத்திற்கு மேலாக உயர்ந்தது அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான்.

2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு பிள்ளையார் சுழி போட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 2003 ஆம் ஆண்டு சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23 கி.மீ. வழித்தடமும், சென்னை சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை 22 கி.மீ. வழித்தடமும் தேர்வு செய்யப்பட்டன. அதற்குப் பின்பு, 2006–2011 ஆம் ஆண்டிலே தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவர்களுடைய மெத்தனப் போக்கால் வெறும் 3 சதவீதப் பணிகள் மட்டுமே முடிவடைந்திருந்தன.

ஆனால், 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு தேவையான அளவிற்கு நிதிகளை ஒதுக்கி, பணிகளை முடுக்கி விட்டதன் காரணமாக, முதல் கட்டப் பணிகளை கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான மெட்ரோ இரயில் சேவை, கடந்த 29–6–2015 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சிய பணிகள் படிப்படியாக முடிக்கப்பட்டு, அந்தந்த வழித்தடங்களில் மெட்ரோ இரயில் சேவை தொடங்கப்படும் எனவும், பணிகள் அனைத்தும் வருகிற 2017 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் எனவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

மேலும், இரண்டாம் கட்டமாக, வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர், விம்கோ நகர் வரையிலான வழித்தடங்களில் மெட்ரோ இரயில் சேவையைத் துவக்கிட மாண்புமிகு அம்மா

அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியினாலே, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, கடந்த 23–7–2016 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, 104.5 கிலோ மீட்டர் நீளமுடைய 2 வழித்தடங்களை உள்ளடக்கிய இரண்டாம் கட்டப் பணி விரைவிலே செயலாக்கத்திற்கு கொண்டுவரப்படும் என இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது பாராட்டுக்குரியது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) பாயின்ட் ஆப் ஆர்டர், இதில் ஒன்றுமில்லை, உட்காருங்கள். நான் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள். நான் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** உலகத் தரம்வாய்ந்த போக்குவரத்து அமைப்பை சென்னை மாநகரில் செயலாக்கி வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், உங்கள் கட்சி உறுப்பினர் அடுத்து பேசவிருக்கிறார். அப்போது பேசலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இப்போது பேச வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது பேச வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கும் வரையில், நான் உங்களைப் பேச அனுமதிக்க முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதில், பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. (குறுக்கீடுகள்) இதில், பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது. பேசலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இவை எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சி பெற்று, தமிழகம் தலை நிமிர்ந்து தன்னிகரில்லா மாநிலமாகத் திகழ்ந்திட

*வழி செய்யும் வகையில் 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்னும் மாபெரும் திட்டத்தினை அறிவித்துள்ளார் மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தை தொய்வின்றி செயல்படுத்தும் (குறுக்கீடுகள்) நோக்கத்தோடு, மாநில அளவில் 5 இயக்கங்களையும், வளர்ச்சிக்கான பதினெட்டு சிறப்பு நோக்கு (குறுக்கீடுகள்) பெருந்திட்டங்களையும் அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள். (குறுக்கீடுகள்) அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கும் தலைவர்கள் மத்தியில், அடுத்த தலைமுறையின் தேவைகளைப் பற்றி சிந்தித்து செயலாற்றுபவர் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்படி குறுக்கிடுவதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களைத்தான் உரையாற்ற நான் அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது பதில் பேசலாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஓர் உறுப்பினர் பேசும்போது, நீங்கள் குறுக்கிட முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். நான் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களைத்தான் அழைத்திருக்கிறேன். அவர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் ஏதாவது பேசவேண்டுமென்றால், அடுத்தது, உங்கள் கட்சி உறுப்பினர் பேசவிருக்கிறார். அவர் பேசும்போது பேசலாம். அதற்கிடையில் நான் பாயின்ட் ஆப் ஆர்டரை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு அனுமதி தரவில்லை. (குறுக்கீடுகள்) நான் அனுமதி தராமல், நீங்கள் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மேலும், எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு 104.5 கிலோ மீட்டர் நீளமுள்ள இரண்டு வழித்தடங்களை உள்ளடக்கிய இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் செயலாக்கத்திற்குக் கொண்டுவரப்படும் என இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகத்தரம் வாய்ந்த*

போக்குவரத்து அமைப்பை சென்னை மாநகர் பெற்றிட (மேசையைத் தட்டும் ஒலி) வித்திட்டு, செயலாற்றி வருபவர் நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சி பெற்று, தமிழகம் தலைநிமிர்ந்து தன்னிகரில்லா மாநிலமாகத் திகழ்ந்திட வழி செய்யும் வகையிலே 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்னும் மாபெரும் திட்டத்தினை அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தைத் தொய்வின்றி நிறைவேற்றும் விதமாக ஆண்டுதோறும் நிதியை ஒதுக்கியதோடு, இந்தத் திருத்திய நிதிநிலை அறிக்கையில் அந்தத் திட்டத்தினை விரைந்து நிறைவேற்றும் நோக்கோடு மாநில அளவிலான 5 இயக்கங்களையும், வளர்ச்சிக்கான பதினொன்று சிறப்பு நோக்கு பெரும் திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்தி வருவது என்பது, அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கும் தலைவர்கள் மத்தியில், அடுத்த தலைமுறையின் தேவைகளைப் பற்றி சிந்தித்து, (மேசையைத் தட்டும் ஒலி) செயலாற்றும் ஒரே ஒப்பற்ற தலைவி நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதற்கு சான்றாக அமைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்து செல்வதோடு மட்டுமல்லாமல், தமிழினத்தைக் காத்து, தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுத்த ஒரே தலைவி நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சியாளர்கள் மாநிலத்தில் ஆட்சி செய்தபோதும், 16 ஆண்டுகள் மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதும், மாநில மக்களின் நலனுக்காகவோ, மாநிலத்தின் உரிமைகளுக்காகவோ எதுவும் செய்யவில்லை. ஏன் ஈழத்தில் உச்சக்கட்ட போர் நடந்தபோதுகூட தமிழினத் தலைவர் என சொல்லிக்கொண்டவர்கள் (குறுக்கீடுகள்) போரை நிறுத்துவதற்கோ, ஈழ மக்களைக் காப்பாற்றுவதற்கோ எதுவும் செய்யவில்லை. (குறுக்கீடுகள்) ஈழத் தமிழர் பிரச்சினையில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். திரு. சின்னராஜ், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

*(குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா? பேரவைத் தலைவர், நான் நிற்கிறேன், நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். இலங்கை நட்பு நாடு என்று சொல்வதை இந்தியா நிறுத்திக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடுகள்)* போர்க் குற்றங்கள், இனப் படுகொலை நடத்தியவர்கள்மீது சர்வதேச விசாரணை நடத்தி, அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். *(குறுக்கீடுகள்)* ஈழத் தமிழர்களின் கனவான தனி ஈழம் உருவாக்குவது குறித்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் போன்ற தீர்மானங்களை நிறைவேற்றி, இன்று வரை ஈழத் தமிழர்களை. . . *(குறுக்கீடுகள்)*

நண்பகல் *12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் யார் பெயரையும் குறிப்பிடவில்லை. உட்காருங்கள் நீங்கள் அனைவரும். (குறுக்கீடுகள்) அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) குறிப்பிட்டுப் பேசவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. குறிப்பிட்டுச் சொல்லாததால் நான் யாரையும் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்கள் பேசும்போது எவ்வளவு அமைதியாக எல்லோரும் கேட்டார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏன் ஓர் உறுப்பினர் பேசும்போது இவ்வளவு தூரம் ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள். அடுத்து உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு எல்லாம் இல்லை. அவர் பொதுவாகத்தான் சொன்னார். உங்கள் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் அவர் குறிப்பிடவில்லை, அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், யாருடைய பெயரையும் அவர் குறிப்பிடவில்லை. அவர் யார் பெயரையும் குறிப்பிடாததாலே நீங்கள் எழுப்புகிற எந்த* point of order*–ஐம் நான் அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் பேசி*

முடிப்பார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். இலங்கை நட்பு நாடு என்று சொல்வதை இந்தியா நிறுத்திக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) போர்க் குற்றங்கள், இனப் படுகொலை நடத்தியவர்கள்மீது சர்வதேச விசாரணை நடத்தி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். தமிழ் ஈழம் குறித்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் போன்ற தீர்மானங்களை நிறைவேற்றி, இன்றுவரை ஈழத் தமிழர்களின் பாதுகாவலராகத் திகழ்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதிநீர் பிரச்சினையில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் நேற்றைக்கே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) பலமுறை சொல்லிவிட்டேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து இதேமுறையில் அவையை நடத்தவிடாதபடி நீங்கள் ஏற்பாடு செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது. நான் அனுமதித்தால்தான் நீங்கள் பேசமுடியும். Point of order–ஐ நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) Point of order–ஐ நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான் நீங்கள் பேசமுடியும். நீங்கள் இப்படி எல்லோரும் ஒருசேர எழுந்து நின்று வற்புறுத்தினால்கூட என்னுடைய முடிவை நான் மாற்றமாட்டேன். என்னுடைய முடிவு தெளிவான முடிவு. அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) Point of order நீங்கள் கேட்டாலும் நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷம் போடுவது என்பது இந்த அவையினுடைய நடவடிக்கைகளை இடையூறு செய்வதாகத்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் அனைவரும் உட்காருங்கள். அதை

நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்கும்போது எல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறில் கேரள அரசின் புதிய அணை கட்டும் முயற்சியைத் தடுத்து நிறுத்தி, சட்டப் போராட்டம் நடத்தி, முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்தி, தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் காத்திட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

என்.எல்.சி. நிறுவன பங்குகளை தனியாருக்குத் தாரைவார்ப்பதைத் தடுத்து, தொழிலாளர்கள் நலன் காத்திடும் வகையிலே, அந்நிறுவனத்தின் பங்குகளைத் தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்களின். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது விதிகளை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர், நான் நிற்கிறேன். நீங்கள் அனைவரும் உட்காருங்கள். எங்கே விதிகளை மதிக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) விதிகளை மதிக்கமாட்டேன் என்கிறீர்களே! நான் உங்களை பலமுறை எச்சரித்துவிட்டேன். விதிகள் புத்தகத்தை எல்லாம் படித்துக்கொண்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) படித்துவிட்டு வந்து விதிகள்படி இந்தச் சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்கிறேன். யாரும் எனக்கு ஒத்துழைக்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினர்கள் பேசும்போது மற்ற உறுப்பினர்கள் அமைதியாக இருந்து உரையைக் கேட்கிறார்கள். பதில் சொல்ல வேண்டுமென்றால்கூட நீங்கள் பேசி முடித்தபிறகு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அவ்வளவு ஒழுக்கக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கிறார்கள். ஆனால், நீங்கள் ஓர் உறுப்பினர் பேசுகிறபோது இடையூறு செய்வதையே, குழப்பம் விளைவிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) சபை நடவடிக்கைகளை ஒழுங்காக நடத்தவிடாமல் நீங்கள் தடுக்கிறீர்கள். நான் இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதற்கு மேலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நான் அனுமதிக்க

முடியாது. Point of order இதில் யாருக்கும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 12–05*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.எல்.சி. நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்குத் தாரை வார்க்கின்ற நிலைமையைத் தடுத்து, தொழிலாளர் நலம் காத்திடும்வகையில், அந்த நிறுவனத்தின் பங்குகளை தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்களால் வாங்கச் செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களைப் பாதிக்கும் திட்டங்களான கெயில் மற்றும் மீத்தேன் திட்டங்களை தமிழகத்திலே வரவிடாமல் தடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னலத்திற்காக தாரைவார்க்கப்பட்ட கச்சத் தீவினை மீட்டு, மீண்டும் தமிழகத்தோடு இணைத்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற சபதமேற்று செயலாற்றிவரும் ஒரே உத்தமத் தலைவி, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அனுதினமும் மக்கள் நலத் திட்டங்களைத் தந்து, தன்னலம் கருதாது மக்கள் நலம் பேணிக் காத்திட, அயராது, கண் துஞ்சாது உழைத்திடும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகப் பொதுமறையாம் திருக்குறளில் குறிப்பிட்டுள்ள,

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்”

என்பதற்கேற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் மனித தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவர் ஆவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் எனது தொகுதியின் ஒரு பகுதியில் அமைந்துள்ள 30 கி.மீ. நீளமுள்ள மேட்டுப்பாளையம்–ஈரோடு நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலையாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டமைக்கும், மேட்டுப்பாளையம் நகரத்திற்கு சுற்றுச் சாலை அமைத்திட ஆணை பிறப்பித்தமைக்கும்,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதன் முதற்கட்டப் பணிக்காக 99.39 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளமைக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை—மேட்டுப்பாளையம் வரையிலான சாலை போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையாகும். இந்தச் சாலையின் ஒரு பகுதியான கோவை முதல் நரசிம்மநாயக்கன்பாளையம் வரையிலான சாலை நான்கு வழிச் சாலையாக உள்ளது. உலகப் புகழ் வாய்ந்த சுற்றுலாத் தலமாக உள்ள நீலகிரி மாவட்டத்திற்குச் செல்ல அனைவரும் இந்தச் சாலையை மட்டுமே பயன்படுத்துவதால், ஆண்டு முழுவதும் இந்தச் சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, இந்தச் சாலையை நரசிம்மநாயக்கன்பாளையம் முதல் கல்லார் வரை நான்கு வழிச் சாலையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

காரமடை—வெள்ளியங்காடு—மஞ்சூர் சாலை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கட்டுப்பாட்டிலிருந்து தற்போது வனத் துறைவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறைவசம் ஒப்படைக்க மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. இதுகுறித்து, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, மிகவும் அத்தியாவசியமான இந்தச் சாலையை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கின்ற மாவட்டம். அனைத்து தொழில் நிறுவனங்களையும் கொண்டிருக்கின்ற மாவட்டம். குறிப்பாக, கல்விக்கூடங்கள் மிக அதிகமாக இருக்கின்ற மாவட்டம். ஆனால், எனது தொகுதியான மேட்டுப்பாளையம் பகுதி மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருக்கிறது. அவர்கள் உயர் கல்வியைக் கற்க வேண்டுமென்று சொன்னால்,

ஏறத்தாழ 80 கி.மீ. தூரத்தில் உள்ள கோவை மாவட்டத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. மலைவாழ் மக்கள், கோவையில் இருக்கின்ற அரசுக் கல்லூரிக்குச் சென்று படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், அவர்கள் நகரப் பகுதியில் இருக்கின்ற மாணவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு அந்தக் கல்லூரியில் இடம் பெறுவதும் மிகவும் கடினமான சூழ்நிலையாக இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உயர் கல்வித் துறையின்மூலம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12–10

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வெள்ளம் போல் தமிழர் கூட்டம்,
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவ ரேமற்
றுடலினால் பலராய்க் காண்பார்;
கள்ளத்தால் நெருங்கொ ணாதே;
எனவையம் கலங்கக்கண்டு
துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும் நாள் எந்த நாளோ?”

என புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏக்கம் கொண்டு கண்ட கனவினை, தன் அறிவால், ஆற்றலால், தன்னலமில்லா கொள்கையினால், மக்கள் நலன் ஒன்றே தம் உயிர் மூச்சென அனுதினமும் மக்களுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்து, நம்மை ஆண்டு வரும் நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயம் நம் கனவை நனவாக்குவார்கள். அவர்தம் சீரிய தலைமையின்கீழ் தமிழகம் அரிய பல சாதனைகளைப் படைப்பது திண்ணம் எனக்

கூறி, இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பங்கு கொண்டு பேசுகிற வாய்ப்பைத் தந்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி பாராட்டி, தமிழ்நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்று, பேராதரவைப் பெற்று, நாட்டு மக்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற மாசற்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொன் நிறமும், பொன் மனமும் தன்னகத்தே கொண்ட தன்னிகரில்லா தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) “முடியாது”, “இல்லை” என்கின்ற வார்த்தையை தம் வாழ்நாளில் பயன்படுத்த அவசியமே இல்லாத வாழ்க்கைச் சூழலைப் பெற்று, தன் அரிய வகை அறிவாற்றலால் நாட்டிற்கே, ஏன் உலகத்திற்கே வழிகாட்டியாக இருக்கிற பேராற்றல் மிக்க அரசியல் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குற்றம் குறை இல்லாத ஆட்சி, சுட்டு விரல் நீட்டி உலகத்து மானிடர் எவரும் தன் தாய் தமிழ்நாட்டில் தம் ஆட்சியை, அதிகாரத்தை, அரசு நிருவாகத்தை கடுகளவும், முடியளவும் குறுக்கி குறை கூற முடியாத அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நீதி, நெறி சார்ந்த ஆட்சியை தம்முடைய வாழ்நாள் எல்லாம் கனவு கண்ட தாய் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு செழிக்க, நாளும் திட்டம் தருகிற ஒப்பற்ற தலைவி முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

நாளும், நாளும் திட்டம், உலகம் வியந்து பாராட்டுகிற திட்டம். 5 ஆண்டுகளிலே எண்ணற்ற திட்டங்களைத் தந்ததனால், நாட்டு மக்கள் தம்முடைய பேராதரவை வாக்குகளாக அள்ளித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில், வேறு எந்த அரசியல் கட்சிகளோடும், இயக்கங்களோடும் தோழமை பாராட்டாமல், அணி சேர்க்காமல், கூட்டணி சேர்க்காமல், தமிழ்நாட்டு மக்களுடைய பேரன்பை, ஆதரவை, நம்பிக்கையை ஒரே

நம்பிக்கையாகக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தன்னந்தனியாக களத்திலே நின்று தமிழ்நாட்டில் ஓர் அரசியல் கட்சி தனிப்பெரும்பான்மையோடு ஆட்சி அதிகாரத்தை இரண்டாவது முறையாக தொடர்ந்து தக்க வைத்த அரசு, மக்களை நம்பியே தேர்தலை சந்தித்த ஒரே கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அதனுடைய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தேர்தலில் நாங்கள் வாக்கு கேட்டு கிராமப் பகுதிகளுக்குச் சென்றோம். மருத்துவருடைய எந்த அறிவுறுத்தலுக்கும்கூட, நோயாளிகள் எழுந்து நடப்பதற்கு முடியாத சூழ்நிலை இருக்கும். நாங்கள் பிரச்சாரம் செய்யும்போது, 'இரட்டை இலை', 'என் அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே', என்று நாங்கள் சொல்வோம். 'மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வெற்றிச் சின்னமாம் இரட்டை இலைச் சின்னம்' என்று சொன்னவுடனே, முதியவர்கள், வயோதிகர்கள், நோய்வாய்பட்டவர்கள், தடியை ஊன்றிக் கொண்டு கிராமப்புறங்களிலே மக்கள் வசிக்கிற இடங்களில் எல்லாம் நிற்பார்கள். அம்மா, இரட்டை இலை என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே ஊன்றுகோலைக் கீழே போட்டுவிட்டு கும்பிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நானே ஆச்சரியப்பட்டேன். நான் ஓடிப்போய் அவர்களைத் தடுப்பேன், அய்யய்யோ, நீங்கள் கீழே விழுந்திடுவீர்களே என்று. மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 90 விழுக்காடு முதியர்கள் ஊன்றுகோலைக் கீழே போட்டுவிட்டு கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். இரட்டை இலை என்று கையைக் காட்டுகிறார்கள். அவர்கள் இரட்டை இலையைக் காட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்த வெளிநாட்டு மருத்துவர்கள்கூட நீங்கள் தாராளமாக நடக்கலாம், நின்று கொள்ளலாம்; குச்சி வேண்டாம் என்று சொன்னபோதுகூட அவர்களுக்குக் கிடைக்காத அந்த energy, ஆற்றல், புரட்சித் தலைவி அம்மா என்று சொன்னவுடனே எங்கிருந்து வந்தது? (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

நான் வணங்குகின்ற தெய்வம், அதுகூட அந்த ஆற்றலை, அந்த சக்தியைத் தராதபோது, கையில் கயிறு கட்டி, நிறைய தாயத்து கட்டி, எத்தனையோ சாமியார்கள் மந்திரித்தபோதுகூட அவர்கள் உச்சரித்த வார்த்தைகளாலும், அறிவியலில் உச்சத்திலிருக்கிற

மருத்துவர்கள் தந்த மருந்தினாலும்கூட அவர்களுக்குக் கிடைக்காத ஆற்றல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்று சொன்னால் கிடைக்கிறது. நான், என் கண் முன்னால் பார்த்து வியந்து போனேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் எந்தத் தலைவிக்கு அப்படியொரு ஆற்றல் இருக்கிறது? எந்தத் தலைவியை மக்கள் நேசிக்கிறார்கள் என்ற பண்பியலை ஆராய்ந்து பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் வளர்த்தெடுத்த மாசற்ற தலைவி, மக்களை நேசிக்கின்ற தலைவி, மக்களின் கண்ணீரை, துன்பத்தை, துயரத்தைத் துடைக்கவல்ல தலைவி, அப்படி மக்களின் உணர்வுகளோடு இரண்டறக் கலந்த தலைவி, தாய் தமிழ் மண்ணை, தாய் தமிழ் மொழியை, தாய் தமிழ் நிலமெல்லாம் பரவி வாழ்கிற ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தை, ஏன்? உலகம் முழுவதும் பரவி வாழ்கின்ற என் தாய் தமிழினத்தினுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கிற ஒரே தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா என்கின்ற அந்தப் பேராற்றல். அந்த ஆற்றலை நம்பி, யாருடைய ஆதரவும் இல்லாமல் போட்டியிட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த திட்டங்களால், மக்கள் தந்த பரிசுதான் இரட்டை இலை, இரட்டை இலை. குடும்பம், குடும்பமாய், (மேசையைத் தட்டும் ஒலி) கொத்துக் கொத்தாய் இரட்டை இலைக்கு வாக்குகளை அள்ளித் தரும் மனநிலைக்கு மக்கள் வந்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்குத் தந்த மக்கள் நலத் திட்டங்கள். அப்படிப்பட்ட திட்டங்களைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் மட்டுமல்ல, இப்போதும் மீண்டும் தந்திருக்கிறார்கள். 3 இலட்சத்து 50 ஆயிரம் ஏழை கிராமப்புற மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சிகளில் 5 ஆண்டுகளில் தராததை, நடப்பு ஆண்டிலேயே 3 இலட்சத்து 50 ஆயிரம் ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா. வீட்டுமனைப் பட்டா கொடுப்பதோடு மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. அதாவது நிலம் இல்லை, நாங்கள் பல கிராமங்களுக்குச் செல்வோம். ஏழையெளிய உழைக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓரிடத்தில் 25 வீடுகள், 50 வீடுகள், 100 வீடுகள் என்று இருக்கும். அவர்களுக்கு 20 ஆண்டுகள், 50 ஆண்டுகளுக்கு முன்பு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் பட்டா கொடுக்கப்பட்டிருக்கும். அவர்கள் வீட்டுமனைகளில்

பசுமை வீடுகளோ அல்லது மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் அல்லது இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகளோ கட்டி வாழ்வார்கள். அவர்கள் சொல்வார்கள், ஐயா, 25 வருடங்களுக்கு முன்பு, 50 வருடங்களுக்கு முன்பு நாங்கள் 50 குடும்பங்கள் இருந்தோம். இப்போது இங்கு 150, 200 குடும்பங்கள் என்றிருக்கிறோம். புதியதாக வீடுகள் வேண்டும், வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று கேட்பார்கள். கிராமத்தில் பேசுவது, இங்கு அம்மாவிற்கு எப்படித் தெரிகிறது என்று பாருங்கள். நாங்களே நினைக்காத திட்டம், அங்கே நிலம் இல்லை, கையகப்படுத்த முடியவில்லை, நிலத்தின் மதிப்பு உயர்வாக இருக்கிறது என்று அந்தப் பகுதி வருவாய்த் துறையினர் சொல்வார்கள். நிலம் குறைவாக இருக்கின்ற பகுதிகளில், நிலத்தின் மதிப்பு கூடுதலாக இருக்கின்ற பகுதிகளில், ஊராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஏழையெளிய உழைக்கும் மக்களினுடைய சொந்த வீடு என்கின்ற கனவை, நனவாக்கிய தலைவி இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் மிகைப்படுத்தி அம்மாவைச் சொல்லவில்லை. இப்போது நாம் யாராவது இதுபோல் சிந்தித்தோமா? ஊரகப் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி, ஏழை மக்களின் வீடு என்கின்ற அந்தக் கனவை, அவர்களுடைய தேவையை நிறைவேற்ற வேண்டுமென்று இந்தியாவில் வேறு எந்த முதலமைச்சராவது நினைத்தார்களா? வேறு எந்த ஆட்சியாளராவது திட்டங்களைத் தந்தார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட திட்டங்களைத் தந்த தலைவியல்லவா புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், இறை நம்பிக்கை எங்களுக்கு இல்லையென்றாலும், இறைவனுக்கு இணையாக, உயர்வாக புரட்சித் தலைவி அம்மா அவர்களை தமிழ்நாட்டு மக்கள், தமிழர்கள் நம்புகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த இடத்தில் குறை சொல்ல முடியும்?

அதேமாதிரி மீனவர்கள். இப்போது நாம் யாராவது மீன்பிடி தடைக் காலத்தில் உதவித் தொகையை உயர்த்திக் கேட்டோமா? புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் மீன்பிடி தடைக் காலத்தில் மீனவ சமுதாயத்தினரின் வாழ்வாதாரத்திற்கு நிதியை ஒதுக்கியுள்ளார்கள். ஏற்கெனவே ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக ரூ,. 30 இலட்சம், ரூ. 35 இலட்சம் என்று மிகப் பெரிய படகுகளைக்கூட மானியத்தோடு

*வாங்குவதற்கு கடனுதவி அளித்துள்ளார்கள். மீனவ மக்களுடைய மீன்பிடி ஆற்றலை, வாய்ப்பை, வசதியைப் பெருக்குவதற்கு ஏராளமான படகுகளைத் தந்ததோடு மட்டுமல்ல, மீன்பிடி தடைக் காலத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 5,000 ரூபாயாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கையில் மட்டுமல்ல, உலகத்தின் எந்த நாட்டிலும் மீனவர் ஒருவர் தெரிந்தோ, தெரியாமலோ தவறுதலாக சிறைபிடிக்கப்பட்டால், அதனைத் தடுத்து நிறுத்தக் கூடிய ஆற்றல் படைத்தவர் அம்மா அவர்கள். ஒரு மீனவர்கூட அயல் நாட்டு சிறைக்கூடங்களிலே அடைபட்டுக் கிடக்கக்கூடாது என்பதற்காக எல்லா வகைகளிலும் தன்னுடைய ஆற்றலைப் பயன்படுத்தி, கடைசி மீனவனையும் மீட்டெடுத்து, அவனுக்கு நிவாரணம் தந்து, அவன் குடும்பத்திற்கு உதவி செய்து, மீனவர்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற மீனவர்களுடைய தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக் காலையிலே இனிப்பான செய்தி ஒன்றைப் படித்திருப்போம். இலங்கையிலேயிருந்து 77 மீனவர்களின் படகுகள் இன்றைக்கு விடுதலை. இது எவ்வளவு பெரிய செய்தி. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முயற்சியால், இலங்கையிலேயிருந்து 77 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவ்வளவு மீனவர்கள்தான் அங்கு இருந்தார்கள். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். மீனவ சமுதாயத்தினர் இதைத்தான் எதிர்பார்த்தார்கள்.*

*பிற்பகல் 12–20*

*அடுத்து, நுண்ணீர்ப் பாசனத்திற்கு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியம் தந்துள்ளார். தமிழ்நாட்டினுடைய உணவு உற்பத்தியை, காய்கறி, பழங்களினுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியம் தந்த ஒப்பற்ற அரசு, விவசாயிகளின் நலன் காத்த அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி ஏற்பட்ட காலங்களில் நுண்ணீர்ப் பாசனத்திற்கு 100 விழுக்காடு நிவாரணம் தந்த அரசு, இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளினுடைய பாசன வசதியைப் பெருக்க, பாசன வாய்ப்பைப் பெருக்க, பாதுகாக்க,*

மக்களுடைய குடிநீர்த் தேவையைப் பாதுகாக்க, வரலாறு படைத்தவர் அம்மா அவர்கள். தமிழ்நாட்டினுடைய ஆற்று நீர்ப் பிரச்சினைகளிலே எவ்வளவோ துரோகங்கள், சதிகள் நடந்துள்ளன. தமிழ்நாட்டு விவசாயிகளுடைய உரிமைகள் மறுக்கப்பட்டபோது, ஒரு சொட்டு நீரைக்கூட தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக எவர் ஒருவரிடத்திலும் இழக்கமாட்டேன் என்று சொல்லி, காவேரி, முல்லைப் பெரியாறு, பாலாறு உள்ளிட்ட ஜீவ நதிகளினுடைய ஒரு சொட்டு நீரையும் அன்னியரிடத்திலே இழக்காமல் மீட்டெடுத்து, தமிழ்நாட்டு மக்களுக்கு குடிநீரைப் பெற்றுத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாத்த உத்தமத் தலைவிதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்போதுகூட தேர்தலிலே தந்த உறுதிமொழிப்படி, சிறு, குறு விவசாயிகளுடைய கடன் தள்ளுபடிக்கு சுமார் 6,000 கோடி ரூபாயை அள்ளித் தந்து, அந்த ஏழை விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைத்த அரசு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புறத்திலே பெரிய பாரம்பரியச் சொத்து என்று கால்நடைகளைச் சொல்வோம் நாம். 'அவனுக்கு ஒன்றும் இல்லை, வெறும் பயல் என்று' சொல்வதை மாற்றி, அம்மா அடுக்குமாடிக் குடியிருப்புக்கு பட்டா கொடுத்ததோடு மட்டும் நிற்கவில்லை, கிராமப்புறத்திலே அந்த மக்களுடைய வாழ்வியல் தொழிலோடு பழக்கப்பட்ட கால்நடைகளை 12,000 ஏழைத் தாய்மார்களுக்கு வழங்கியுள்ளார்கள். 4 இலட்சம் வெள்ளாடுகளைத் தருகிற திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புற வாழ்வாதாரத்தைப் பெருக்க, ஏழை உழைக்கும் விவசாயத் தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாக்க திட்டம், 2,000 அரசு புதிய பேருந்துகள், 'e' சேவை மையம் இவை அனைத்தும் அம்மாவினுடைய திட்டம். நாங்கள்கூட கிராமங்களுக்கும் போவோம். குடும்ப அட்டைகளில் திருத்தம் வேண்டுமா? இட மாறுதலா? உடனுக்குடன் வருவாய் அதிகாரிகள் அந்த முகாமிலேயே செய்து தருகிற திட்டம். இவற்றையும் மீறி, கோட்டையின் கதவுகளை மூடாமல் 24 மணி நேரமும் திறந்தே வைத்து, இந்த நாட்டு மக்களுக்கு சேவையாற்றுகிற, அம்மாவின் அழைப்பு மையம் உலகத்திலேயே சிறந்த திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) கோட்டையின் கதவுகள் மூடப்படாத ஒரே கோட்டை தமிழ்நாட்டினுடைய ஆட்சி அதிகாரத்தை கையில் கொண்டுள்ள புரட்சித் தலைவி அம்மாவின் கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) 24 மணி நேரமும்

செயல்படுகிற அம்மா அழைப்பு மையத்தை நடத்தி, மக்களின் குற்றங்களை, குறைகளைத் தீர்ப்பதற்கு, கேட்பதற்கு அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு, கடைசிக் குடிமகனுக்கும் 24 மணி நேரமும் வாய்ப்பைத் தருகிற நீதிநெறி சிறந்த அரசு, வெளிப்படையான அரசு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவச் செல்வங்களுக்கு மடிக்கணினியை வழங்கி, இந்தியாவிலேயே 45 விழுக்காடு உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை வழங்கியவர் அம்மா அவர்கள். 'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று கவிஞன் பாடியதற்கு ஒப்பாக, கல்வி சிறந்த தமிழ்நாடு என்கின்ற பாரதியின் கனவை நனவாக்கிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12–25

மாற்றுத் திறனாளிகளுக்கும் விலையில்லா 1,000 ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டம். 1000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்படி மாற்றுத் திறனாளிகளுக்கு, விவசாயிகளுக்கு, நெசவாளர்களுக்கு என்று எல்லாப் பிரிவு மக்களுடைய அன்பையும் பெற்ற அரசு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, அன்பைப் பெற்று, மக்கள் ஆட்சி அதிகாரத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தந்தார்கள். வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி சொல்வதற்காக எல்லோருக்கும் உத்தரவு போட்டார்கள் அம்மா. நாங்கள் நன்றி சொல்வதற்காகப் போனோம். வாக்கு கேட்கும்போதுகூட வாகனங்களிலேயிருந்து கொண்டு வாக்கு கேட்டோம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நம்பி வாக்களித்த மக்களுக்கு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, அமைச்சர் பெருமகனார்கூட நடந்து சென்று நன்றி சொன்னோம் வீதிகளில் நடந்து வீடு, வீடாகச் சென்று, நன்றி சொன்னதை சென்ற வாரம் பார்த்தேன். வேறு எந்த அரசாங்கத்திலாவது யாராவது தேர்தலில் ஜெயித்தால் மக்களைப் போய்ப் பார்ப்பார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) நாமக்கல் மாவட்டத்தில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஐயா அவர்கள், நான் 9–30 மணிக்குச் சென்று காத்திருக்கின்ற நேரத்தில், வீடு, வீடாக, தெருத் தெருவாகச் சென்று, நன்றி சொல்லும்போது, மக்கள் திருவிழா மாதிரி கூடியிருந்து வரவேற்பதைப் பார்த்தேன்.

இப்படியெல்லாம் வாக்களித்த மக்களுக்கு நன்றியுள்ள அரசு, நன்றியுள்ள கட்சி. வாக்களித்த மக்களுக்கு நாளும் திட்டம் தந்து, தமிழ்நாட்டு மக்களின் வாட்டம் போக்க நாளெல்லாம் உயிருக்கு உயிராக நேசிக்கிற அரசை வழிநடத்துகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் இந்த நிதிநிலை அறிக்கையை நான் மிகுந்த மனமகிழ்வோடு பாராட்டி, வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு போற்றும் அன்னையே, நற்குடி தோன்றலே, அருள் உணர்வு மிக்கவரே, தெய்வச் சிந்தனையில் திளைப்பவரே, பெண் இனத்தின் பெருமைப் பெட்டகமே, அறிவாற்றலில் கலைவாணியின் மறு பிறவியே, புனித நதியாம் காவேரியின் தலைமகளே, எட்டுக்கோடி தமிழ் மக்களின் பாசமிகு அன்னையே அம்மா, 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லை எனும் நிலை வேண்டும்' என்ற தெளிந்த சிந்தனையோடு ஆட்சி செய்யும் எங்கள் தாயே, தாங்கள் இத்திருநாட்டை வழி நடத்துவது இத்தமிழகம் செய்த புண்ணியம். நாங்கள் இக்காலத்தில் வாழ்வதோ எங்களுக்குக் கிடைத்த அரும் பாக்கியம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலான பண்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்ற எங்களின் குல தெய்வமே அம்மா, இம்மாமன்றத்தில் தாங்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி தங்கள் கமல மலர்ப் பாதம் வணங்கி, எனது கன்னி உரையைத் துவக்குகின்றேன், தாயே.

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தங்களின் தாரக மந்திரத்தால்தான் தாயே, வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாம் மாபெரும் வெற்றிக் கனியை மக்களின் மகராசியாம் அம்மாவுக்கே தந்திட்டர் தமிழக மக்கள்.

தமிழகத்தின் கடைக்கோடி கிராமத்தில் பிறந்து, 1977—ல் கழகத்தின் முதல் ஒன்றியச் செயலாளராகப் பணிபுரிந்த இ.எம். ராமசாமியின் மகனாக வளர்ந்து, 1984—ல் அந்தியூருக்கு வருகை தந்த பேசும் தெய்வம் அம்மா அவர்களை முதன்முதலாக அருகில் பார்த்து, அன்னையின் அற்புதமான பேச்சாற்றலால் ஈர்க்கப்பட்டு,

அரசியலுக்கு ஒப்பற்ற தலைவியாக அம்மாவை மட்டுமே ஏற்று, 1986–ல் அம்மாவின் திருநாமத்தால் அன்றே அம்மாவின் விசுவாசியாக மன்றம் ஆரம்பித்து, அம்மாவின் தலைமையிலான கழகத்தில் கிளைக் கழகச் செயலாளராகப் பணியைத் துவக்கி, அந்தியூர் ஒன்றிய அம்மா பேரவை இணைச் செயலாளராகவும், அந்தியூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டு, அம்மா அவர்களால் 2000 ஆம் ஆண்டில் வாழ்த்து மடலும் பெற்று, 2001–2006 ஆம் ஆண்டு வரை அந்தியூர் ஒன்றியக் குழுத் தலைவராக அம்மாவின் ஆசியோடு மக்கள் பணி செய்தும், 2006–2011–ல் அந்தியூர் ஒன்றியக் கவுன்சிலராக அம்மாவின் ஆசியோடு தொடர்ந்து மக்கள் பணியாற்றியும், ஈரோடு புறநகர் மாவட்ட அம்மா பேரவை தலைவராகவும், அம்மாவின் எளிய தொண்டனாக இருந்த என்னை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினராக வரம் அளித்த மாண்புமிகு அம்மாவின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது முதல் நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தமிழகத்தில் அம்மாவின் பொற்கால ஆட்சி தொடரவேண்டும், மீண்டும் அம்மாதான் தமிழக முதல்வராக வரவேண்டும் என வாக்களித்து வெற்றிபெறச் செய்த அந்தியூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அகிலமே போற்றும் வகையில் ஆறாவது முறையாக வெற்றி பெற்று, 32 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழக வரலாற்றில் ஆளுகின்ற அரசே தொடர்ந்து அரசாட்சி செய்திடும் அம்மாவின் சாதனைகளை (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையாய் இம்மாமன்றத்தில் எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பளித்த என் குல தெய்வத்திற்கு பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

என்ற வள்ளுவரின் வரிகளுக்கு உயிரோட்டமாய், ஏர்முனையில் போர் செய்து, பார்முனையில் பசியாற்றும் விவசாயிகளின்

முன்னேற்றமே தமிழகத்தின் சுவாசக் காற்று என்றுணர்ந்து, தமிழக விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களில் வேளாண் கடன்களைப் பெற்ற 8,35,360 குறு விவசாயிகள் மற்றும் 8,58,785 சிறு விவசாயிகள் பயனுறும் வகையில், ரூ.5,780.92 கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்தும், ரூ.6,000 கோடி புதிய பயிர்க் கடன் நடப்பாண்டில் பெற வழிவகை செய்தும், விவசாயிகளின் துயர் துடைத்திட்ட தாயை, இந்த உலகமே வியந்து பார்க்கின்றது.

பிற்பகல் 12–30

மாண்புமிகு அம்மாவின் முன்னோடித் திட்டமான விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தில் அலகுத் தொகையை ரூ.30,000/–லிருந்து ரூ.35,000/– ஆக உயர்த்தியுள்ளார்கள். 2016–2017 ஆம் ஆண்டில் 12,000 ஏழைப் பெண்களுக்கு 12,000 கறவைப் பசுக்களும், ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு 4 இலட்சம் வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும் வழங்கி, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திட, ரூ.182.33 கோடி ஒதுக்கீடு செய்ய ஆணையிட்ட தாயே, ஏழைகளின் குல விளக்கே, அம்மா இது உங்களால் மட்டுமே முடியும்.

“அன்னச்சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாறாயிரம் நாட்டல்
அன்னையராகினும் புண்ணியம்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் வேண்டும்”

என்ற பாரதியின் கூற்றுக்கு உயிர் கொடுத்த உத்தமத் தலைவியே அம்மா.

பட்டிதொட்டி எங்கும் வாழும் ஏழை பாமர குழந்தைகளும் தடையில்லா கல்வி பயின்றிட ஏதுவாக விலையில்லா பாட நூல்கள், சீருடைகள், புத்தகப் பை, எழுதுபொருட்கள், காலணிகள், மிதிவண்டி, பஸ் பாஸ் ஆகியவற்றை பள்ளிக் கல்வித் துறைமூலம் வழங்கிட கல்வித் துறைக்கு ரூ.24,130 கோடி ஒதுக்கினீர்கள் அன்னையே. (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமா தாயே! பணக்கார வீட்டுக் குழந்தைகளின் மடியில் தவழ்ந்த மடிக்கணினியை ஏக்கத்தோடு பார்த்துவந்த ஏழைக் குழந்தைகளும் தொடர்ந்து பெற்றிடும் வகையில், இதற்கென ரூ.890.00 கோடி வழங்கிட ஆணையிட்டு மகத்தான சாதனை புரிந்த அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களும் போற்றிப் பாராட்டும் இத்திட்டமே தங்கள் ஆட்சியில் ஒரு மணிமகுடம் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையில் 1,000 கிலோ மீட்டர் சாலைகளை அகலப்படுத்திடவும், 3,000 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்திடவும் ரூ.2,800 கோடி ஒதுக்கீடு செய்து, விபத்தில்லா தமிழகமாகத் திகழ்ந்திடவும், நான்குவழிச் சாலைகளைத் தரம் உயர்த்திட ரூ.1,220.28 கோடி ஒதுக்கீடு செய்தும், இதன்மூலம் நகரங்களில் தொழில் வளர்ச்சி பெருகிடவும் ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வரே, அம்மாவே, தங்களைத் தமிழகமே போற்றி வணங்குகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதந்தோறும் 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் அனைத்து வீடுகளுக்கும் வழங்கி, பஞ்சை நூலாக்கி, நூலை உடையாக்கி, தமிழர்களின் மானம் காத்திடும் நெசவாளர்கள் குடும்பங்களுக்கு கட்டணமில்லா 200 யூனிட் மின்சாரமும், விசைத்தறியாளர்களுக்கு கட்டணமில்லா 750 யூனிட் மின்சாரமும் வழங்கி, நெசவாளர் குடும்பங்களை நெகிழ வைத்த ஒப்பற்ற தாயே. இத்திட்டத்திற்கென மானியமாக ரூ.9,007 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்ட தாயே, நீங்கள்தான் நெசவாளர் குடும்பங்களின் விடிவெள்ளி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமம் நாட்டின் முதுகெலும்பு என்பதற்காக, ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் வீட்டு வசதி, இணைப்புச் சாலைகள், குடிநீர், பொதுக் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் போன்ற திரளான திட்டங்களின்மூலம், தமிழகத்தின் உட்கட்டமைப்புத் தரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டத்திற்காக, 2016–2017 ஆம் ஆண்டிற்கு ரூ.21,186.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றுவதாக அமையும் என்றால் அது மிகையாகாது.

பெண்களின் வளர்ச்சியே நாட்டின் முன்னேற்றம் என்ற உயரிய சிந்தனைக்கு உயிரோட்டமாய், ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் திறமையை வெளிப்படுத்தும் வண்ணமும், நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்களுடைய பங்களிப்பு அமையும் வகையிலும், தேசமே வியக்கும்வண்ணம், 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கியதற்காக, ஒட்டுமொத்த பெண் குலமே போற்றும் அன்னையே, உலகமே உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்] [2016 ஜூலை 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மக்களும் பொது சுகாதார சேவையை எளிதில் பெறுவதை உறுதிப்படுத்திட, மக்கள் நல்வாழ்வுக்காக சுகாதார சேவை மையங்களை ஏற்படுத்தி, மருத்துவக் காப்பீடு, அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா பெட்டகம் போன்ற திட்டங்களைத் தொடர்ந்து வழங்கிட, ரூ.9,073 கோடி ஒதுக்கீடு செய்த பார் போற்றும் தலைவியே, நீர் வாழ்க.

சமூக நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முன்னோடித் திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டம்மூலம் கைவிடப்பட்ட குழந்தைகளைப் பாதுகாப்பு அறன்கொண்டு காத்துவரும் தாயே.

பெண்கள், குழந்தைகள், முதியோர், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்றோர் போன்றோரின் வாழ்வாதாரத்தை சிறப்படையச் செய்ய, மாண்புமிகு அம்மா வகுத்திட்ட திட்டங்களோ ஏராளம். இத்திட்டத்தின்படி, படித்த பட்டதாரி பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூ.50,000/– மற்றும் தாலிக்குத் தங்கம் 4 கிராம் என்றிருந்ததை 8 கிராம் என உயர்த்தி வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் பெண்கள் உயர் கல்வி பயில்வதை ஊக்குவித்தும், இளம் வயது திருமணத்தைத் தடுத்தும், பொருளாதார பின்னடைவிலிருந்து மேம்பாடு அடையவும் வழிவகுக்கும் இத்திட்டங்களுக்காக, ரூ.703.16 கோடி ஒதுக்கீடு செய்திட்ட தாயே, உங்களது கருணையால் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1989–ல் சிலரது சூழ்ச்சியின் காரணமாக கழகம் பிளவு பட்டு தேர்தலைச் சந்தித்தபொழுதுகூட, அந்தியூர் தொகுதி என்றென்றும் மாண்புமிகு அம்மாவின் பக்கமே என நிரூபித்து, சேவல் சின்னத்தை வெற்றி பெற வைத்த தொகுதியாகும்.

பிற்பகல் 12–35

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, விவசாயம் மற்றும் கிராமப்புற மக்களைக் கொண்டதாகும். மலைக் கிராமங்களை உள்ளடக்கி, வளர்ச்சிப் பாதையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தொகுதியாகும். இத்தொகுதியின் இடதுபுற ஓரத்தில் சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் மேட்டூர் வாய்க்காலும், வலது புறத்தில் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் பவானிசாகர் வாய்க்காலும் பாய்ந்தோடி வளம் செய்திட்டபோதும், நடுவிலே உள்ள பகுதி

எந்த பாசன வசதியும் இல்லாமல் வானம் பார்த்த பூமியாய், ஏரி, குளம் நிரம்பினால் மட்டுமே செழிக்கும் சூழ்நிலையில் உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் எஃகுக் கோட்டையாய் உள்ள இத்தொகுதி மக்களின் விவசாயம் செழிக்கவும், தொகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நிலத்தடி நீரை உயர்த்தியும், மலைப்பகுதியாம் மணியாட்சியில் உற்பத்தியாகி உபரியாகச் செல்லும் நீரை மலையடிவாரத்திலுள்ள வரட்டுப்பள்ளம் அணையில் இணைக்க வழிவகை செய்து, இதன்மூலம் இத்தொகுதியிலுள்ள ஏழு ஏரிகள் நிரம்பிட வழிவகை செய்திட மற்றொரு திட்டம் வேண்டும். மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் வெளியேறும்பொழுது, அந்த உபரி நீரை மேட்டூர் வலதுகரை வாய்க்கால் திட்டத்தின் மூலமாக அந்தியூர் பகுதியிலுள்ள ஏரிகளில் இணைத்து, உபரி நீரை சேமித்து, நிலத்தடி நீரை உயர்த்திடவும், விவசாயம் செழித்திடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு கருணை காட்டி, இத்தொகுதி மக்களின் ஏக்கத்துடன்கூடிய நீண்ட நாள் கனவை நனவாக்கி, அருள்புரிய வேண்டுமாய் அந்தியூர் தொகுதி மக்களின் சார்பாக பொற்பாதம் தொட்டு, எனது முதல் கோரிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியையும், பொன்னான திட்டங்களையும், கட்டுக்கோப்பான நிருவாகத்தையும், துணிச்சல் மிகுந்த நடவடிக்கைகளையும், (மேசையைத் தட்டும் ஒலி) அமைதிப் பூங்காவாக தமிழகத்தைத் திகழச் செய்வதையும், வியந்து பார்க்கும் இந்தியாவிலுள்ள பிற மாநில மக்கள் 'ஏன் நமக்கும் இதுபோன்ற பொற்கால ஆட்சிபுரியும் தலைவர்கள் அமையமாட்டார்களா' என்று எண்ணுகின்ற நிலையில், மாண்புமிகு அம்மாவின் சிறப்பான ஆட்சியை இவ்வுலகமே வியந்து பார்க்கின்றது.

வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையின்மூலம் குறையே இல்லாத திட்டங்களையும், நிதியையும் அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எளியவனான என்னை இந்த சிறப்புமிகு மாமன்றத்தில் பேச வைத்து அழகு பார்த்த அம்மாவின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, நன்றி கூறிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதி, டி.என். பாளையம் ஒன்றியம், கணக்கம்பாளையம் கிராமத்து மக்களின் நீண்டநாள் கோரிக்கையான வேதபாறை நீர்த்தேக்கத் திட்டத்தை அம்மாவின் அருள் ஆசியால் நிறைவேற்றி, விவசாயிகளின் வாழ்வில் ஒளி வீசிடச் செய்யுமாறு தங்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதி அம்மா அவர்களால் தனி தாலுகாவாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டுவரும் நிலையில், பொதுமக்களின் நலன் கருதி, அந்தியூர் அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, உரிய வசதிகள் ஏற்படுத்தியும், போக்குவரத்து காவல் நிலையம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், நீதிமன்றங்கள் ஆகியவற்றை வழங்க வேண்டுமாயும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையான அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திடவும், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் மலைப் பிரதேசமாக உள்ள பர்கூர் ஊராட்சியை பர்கூர், மேற்குமலை, கிழக்குமலை என மூன்று கிராம ஊராட்சிகளாகப் பிரித்து, உரிய உத்தரவு வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலுள்ள மலையாள கவுண்டர்கள் வகுப்பினருக்கு பழங்குடியினர் என சான்று வழங்கிவந்த நிலையில், அதே வகுப்பைச் சார்ந்த ஈரோடு மாவட்டத்தில் வசித்துவரும் அனைத்து மலையாள கவுண்டர்களுக்கும் பழங்குடியினர் என சான்று வழங்காமல் உள்ளதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதால், பழங்குடியினர் என உத்தரவு வழங்கியமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு விரைவாக ஜாதிச் சான்று கிடைத்திட உரிய உத்தரவு வழங்கிட வேண்டி மாண்புமிகு அம்மா அவர்களது பொற்பாதங்கள் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய மாநிலங்களை இணைக்கும் சாலையான வரட்டுப்பள்ளம் முதல் கர்கேகண்டி வரையிலான ஒரு வழிச் சாலையை இரு மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து நலன் கருதி இருவழிச் சாலையாக மாற்றிட கேட்டுக்கொள்கிறேன். மேலும், சத்தியமங்கலத்திலிருந்து திம்பம் வழியாக கர்நாடகாவிற்குச் செல்லும் சாலையானது 27 கொண்டைஊசி வளைவு கொண்டுள்ளதால் அடிக்கடி வாகன விபத்து மற்றும் வாகன பழுதால், போக்குவரத்து தடைபடும்போது ஒரே மாற்று வழியான இச்சாலையினை மாநில நெடுஞ்சாலையாக மாற்றிட கருணை உள்ளம் கொண்ட காவேரி தாயே, தங்களை மண்டியிட்டு வேண்டுகிறேன்.

அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடமானது பச்சம்பாளையம் கிராமம், அண்ணாமடுவில் பாதுகாப்பற்ற, போக்குவரத்து வசதியற்ற இடத்தில், மயானத்தின் நடுவிலே தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. அந்தியூர் நகரில் தேவையான இடவசதி இருந்தும் அப்போதைய தி.மு.க. அரசு ஏன் இப்படிச் செய்தார்கள் எனத் தெரியவில்லை. எனவே, பொதுமக்கள் எளிதில் சென்றுவரும் வகையில், அந்தியூர் நகரிலேயே சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமாய் பணிவோடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கிற தாரக மந்திரத்தை வழங்கிட்ட திராவிட லெனின், காஞ்சி தந்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, தன்மான உணர்வு தந்த தந்தை பெரியார் அவர்களை வணங்கி, தமிழையும், தமிழ் இனத்தையும் காக்க ஓய்வறியாமல் உழைக்கும் ஒப்பற்ற தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த என்னையும் இந்த அவையில் அமர வைத்து அழகு பார்க்கும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் வணங்கி, நெருக்கடி நிலை காலகட்டத்தில் பல முக்கிய தலைவர்களை இந்திய வரலாறு இனம் கண்டுள்ளது. அந்த வரிசையில், இந்திய அளவில் அடையாளம் காணப்பட்ட தலைவராய், எனக்கு தாயின்

அரவணைப்பாய், (மேசையைத் தட்டும் ஒலி) தந்தையின் வழிகாட்டுதலாய், எனக்கு அரசியல் முகம் காட்டி, நாளைய நம்பிக்கை நட்சத்திரமாய், ஏன் இன்றைய நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் பொருளாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களை வணங்கி, நீதிக் கட்சியினுடைய தலைமை செயற்குழு உறுப்பினராய் விளங்கி, பெரியாரின் சீடனாய், மொழி காக்கும் போராட்டத்தில் 1938–லே தந்தை பெரியாரோடு இந்தி எதிர்ப்புப் போராட்டக் களம் கண்டு, பெல்லாரி சிறையிலே கடுங்காவல் தண்டனையைப் பெற்றிட்ட அண்ணாவின் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பராய் விளங்கி, இந்த மாமன்றத்தின் உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றிய எனது பாட்டனார், தாத்தா செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களையும் வணங்கி, எனை ஈன்றவர்களையும், தன் வீட்டுப் பிள்ளையாகவே ஏற்று, இந்த அவைக்கு என்னை அனுப்பி வைத்திருக்கும் காஞ்சிபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களையும் வணங்கி, என் வெற்றிக்கு உழைத்திட்ட கழக நிருவாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், தோழமைக் கட்சியினருக்கும், நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதத்தில் உரையாற்றக்கூடிய வாய்ப்பினை, அதுவும் எனது முதல் உரையாக அமைந்திருக்கக்கூடிய இந்த வாய்ப்பினை வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

நிதிநிலை அறிக்கைமீதான இந்த விவாதத்தில் பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்திருக்கக்கூடிய சூழ்நிலையில், முதல் உரை என்கின்ற காரணத்தால், என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை இந்த அவையின் மூலமாக, உங்கள் மூலமாக, அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கின்றேன்.

காஞ்சிபுரத்தில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையினை பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

செங்கல்பட்டிலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய அரசு மருத்துவக் கல்லூரிக்கான இணைப்பு மருத்துவமனையாக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையை அறிவிக்க வேண்டுகிறேன்.

2016–2017 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பத்தி 112–ல் அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற மருத்துவக் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட தலைமை மருத்துவமனையில் உலகத்தரம் வாய்ந்த நோய் கண்டறியும் கருவிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படும் என்ற திட்டத்தினை காஞ்சிபுரம் தொகுதிக்கும் வழங்கிடவேண்டும் என்ற வேண்டுகோளை தங்கள்மூலம் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னையிலிருந்து பல்வேறு பகுதிகளுக்குச் செல்லக்கூடிய சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் காஞ்சிபுரம் அருகில் இருக்கக்கூடிய பகுதியிலே, அதிக அளவிலே விபத்துகள் ஏற்பட்டு, அதிக உயிர்ச் சேதம் ஏற்படுகின்ற அந்தப் பகுதிக்கு, உயிர் காக்கும் திட்டமாக, காஞ்சிபுரம் தேசிய நெடுஞ்சாலையையொட்டி இருக்கக்கூடிய காரைப்பேட்டையில், பேரறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை வளாகத்தின் அருகிலே, விபத்து சிகிச்சை மையம் ஒன்றினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று உங்கள் மூலமாக இந்த அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவுத் திட்டமாய், காஞ்சிபுரம் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் வேண்டுகோளாய் இருக்கக்கூடிய, பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, நீர் ஆதாரத்தைப் பெருக்கி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய திட்டத்தினை, இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாகவே நிறைவேற்றித் தந்திட வேண்டுமென்ற வேண்டுகோளையும் உங்கள்மூலமாக இந்த அரசிற்கு முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சிபுரம் தொகுதி பெருவாரியான ஏரிகளை நம்பி விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடிய தொகுதி. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஏரிகளில் சுற்றுச்சூழலைப் பாதிக்கக்கூடிய அளவில் வளர்ந்திருக்கக்கூடிய கருவேல மரங்களையும், புதர்களையும் அகற்றி, ஆழப்படுத்தி, கரைகளைச் செப்பனிட்டு, நீரின் இருப்பை உயர்த்தித் தருமாறு நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் விளைபொருட்களை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்யக்கூடியவகையில், கொள்முதல் நிலையங்களை ஆங்காங்கே அமைத்து, அதனைப் பாதுகாக்கக்கூடிய தானியக் கிடங்குகளையும் அமைத்துத் தரவேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, காஞ்சிபுரம் என்று சொன்னால், பட்டு நகரம் என்று பொருள்; அது தொன்மையான நகரம். அந்தப் பட்டுக்கு, பாரம்பரியம் மிக்க பெருமைகளும் உண்டு. ஆனால், அந்தப் பட்டுச் சேலைகள் தேக்கம் அடையாமல், நெசவாளர்களுக்கு வாழ்வாதாரத்தினைத் தருகின்ற, அவர்களுக்கு வேலையைத் தொடர்ந்து தரக்கூடிய திட்டமான, தள்ளுபடி விற்பனைத் திட்டத்தினை ஆண்டு முழுவதும் வழங்கிட வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கிறேன்.

அதேபோன்று, தள்ளுபடி மானியத் தொகையினை ஒவ்வொரு மாதமும் அரசே அந்தச் சங்கத்திற்கு வழங்கும்பட்சத்தில், அந்தச் சங்கம் தொடர்ந்து இயங்குவதற்கான வாய்ப்பாக அது அமையும் என்பதனால், அந்த மானியத்தைத் தொடர்ந்து வழங்கிடவேண்டும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். கடந்த மூன்று ஆண்டுகாலமாக தள்ளுபடி மானியத் தொகை அந்தந்தச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதனால், அவை பாதிப்புக்குள்ளாகி, அதனால் நெசவாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதனை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று, நெசவாளர்களுடைய பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் தீர்வு காண்பதற்காக, நெசவாளர்களுக்கென தனி வங்கியினையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற வேண்டுகோளினையும் வைக்கிறேன்.

அதேபோன்று, உயர் கல்வித் துறையில், குறிப்பாக, பொறியியல் கல்லூரி மற்றும் சட்டப் படிப்பு சேர்க்கையின்போதும், 12 ஆம் வகுப்பில் பெறுகின்ற மதிப்பெண்களில் மொழிப் பாடங்களுக்கான மதிப்பெண்கள் தவிர்த்து, பிற பாட மதிப்பெண்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் பொய்த்தாலும், காவேரியே காய்ந்தாலும், சுனாமியானாலும், வெள்ளம், புயல், வறட்சி எதுவானாலும் அத்தனையையும் வென்று நாட்டுக்கு அல்ல, உலகத்திற்கே முன்னுதாரணமாகத் திகழும் என் அன்னை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என் உரையைத் துவங்குகின்றேன். கழகத்தின் உட்சபட்சம் வரை அனைத்து பொறுப்புகளையும் தொடர்ந்து வழங்கியதோடு, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வாரியத் தலைவராக, நிருவாக இயக்குநராக ஒரு முறை அல்ல, 3 முறை, 3 ஆண்டுகள் பணி செய்ய உத்தரவு பிறப்பித்தவர் என் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக்கி, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக்கி என்னை அழகு பார்த்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். என்னை வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்து, அமைச்சராகவும் இந்த அவையில் அமரச் செய்து, பணியாற்றச் செய்திருக்கிற என் தாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்றும் எனது பரம்பரையே விசுவாசத்தோடு இருப்போம் என்று வணங்கி தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுச் சேலைகளின் விற்பனையை அதிகரித்து தேக்கத்தைக் குறைக்க, 30–12–2015 ஆம் தேதி முதல் பட்டுச் சேலை விற்பனைக்கு உச்சவரம்பின்றி 15 சதவீதம் தள்ளுபடி மானியம் வழங்கி ஆணையிட்டதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூடுதலாக 10 கோடி ரூபாயை தள்ளுபடி மானியமாகவும் வழங்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, தள்ளுபடி மானியத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பினார்கள். தள்ளுபடி மானியம்*

கடந்த 20 ஆண்டுகளாக தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் தேக்கத்தை அறவே ஒழிக்கும் நோக்கத்தோடு, 260 கோடி ரூபாய் நிலுவையில் இருந்த நேரத்தில், ஒரே நேரத்தில் அந்தத் தள்ளுபடியை அனைவருக்கும் வழங்குவதற்காக ஆணையிட்டு, 160 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 74 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 74 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 49 சங்கங்கள், பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 22 கூட்டுறவுச் சங்கங்கள் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 3 சங்கங்கள் தொழிலியல் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களாகும். இந்தச் சங்கங்கள் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்கு சான்றாக இப்போது காஞ்சிபுரம், திருவள்ளுவர் பட்டு கூட்டுறவுச் சங்கம் தேசிய விருது பெற்றுள்ளது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த புதுமைத் திட்டங்கள் மூலமாகவும், புதிய வடிவமைப்புகளின் காரணமாகவும் இந்த ஆண்டு மேலும் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவுச் சங்கம் மற்றும் காஞ்சிபுரம் முருகன் பட்டு கூட்டுறவுச் சங்கம் ஆகியவை சிறந்த சங்கங்களுக்கான விருதையும் பெற்றிருக்கின்றன என்பதை பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் படிப்பிற்கான சேர்க்கைக்கு, மாணவர்களுடைய +2 மதிப்பெண்களில் மொழிப் பாடங்களைத் தவிர்த்து பிற பாடங்களில் பெற்றுள்ள மதிப்பெண்களை மட்டும் கணக்கிலே எடுத்துக்கொள்கின்றார்கள். இங்கே ஒரு விஷயத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். சட்டம் பயிலும் மாணவர்கள் பிற்காலத்தில் வழக்கறிஞர்களாகத் தொழில்புரிவதற்கு

மொழி ஆளுமை மிக அவசியம் என்கின்ற காரணத்தினால், வரும் காலங்களில் சட்டப் படிப்பிற்கான மாணவர்களின் சேர்க்கையின்போது மொழிப் பாடத்தில் எடுத்த மதிப்பெண்ணையும் சேர்த்து தர வரிசை வழங்கிட வேண்டும் என இந்த அவையின்மூலம் அரசினை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–50

2011 ஆம் ஆண்டு, காஞ்சிபுரம் நகராட்சிப் பகுதியோடு புதிதாக இணைக்கப்பட்ட செவிலிமேடு, தேனம்பாக்கம், ஓரிக்கை, நத்தப்பேட்டை ஆகிய பகுதிகளில் எந்தவித அடிப்படை வசதிகளும், குறிப்பாக, பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற எந்தவொரு திட்டமும் இதுவரை விரிவாக்கம் செய்யப்படவில்லை என்பதை இந்த அவையின்மூலம் நான் அரசுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, அந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகையில் நகராட்சி செலுத்தவேண்டிய பங்கீட்டினைச் செலுத்திவிட்ட பிறகும் இன்னும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்பதை உள்ளாட்சி நிருவாகத்திற்கு நான் தங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சிபுரத்தில் பெருகிவரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் மக்கள் பெருக்கம் இவற்றினால் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் கணக்கில் கொண்டு, அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பேருந்து நிலையத்தினை, காஞ்சிபுரம் புறவழிச் சாலையை தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கக்கூடிய பகுதியிலே அமைத்துத் தந்திட வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கிறேன்.

1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின்போது காஞ்சிபுரத்திற்கு கொண்டுவரப்பட்ட திட்டம், திருப்பாற்கடல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அந்தத் திட்டத்தின் மூலமாக, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக காஞ்சிபுரத்தில் குடிநீர்ப் பிரச்சினையே இல்லை என்ற நிலை இருந்தது. தற்போது அந்த நிலை மாறி, நிலத்தடி நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு இன்றைக்கு குடிநீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதற்கான ஒரு திட்டத்தினை, கூட்டுக் குடிநீர்த் திட்டமாக. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) பதில்தானே? சரி, உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குகின்ற வகையில், காஞ்சிபுரத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணையைக் கட்டுவதோடு, வேகவதியாற்றின் குறுக்கிலும் ஒரு தடுப்பணையைக் கட்டி, நீராதாரத்தினைப் பெருக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், தேவைப்படின், மாமல்லபுரம் அருகிலிருக்கக்கூடிய பகுதியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை உருவாக்கி, அதன்மூலமாக காஞ்சிபுரத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் உற்பத்தியாகும் பட்டுப் புடவைகளுக்குத் தேவையான சரிகை, இதுவரையில் குஜராத் மாநிலத்திலுள்ள சூரத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. அதன்மூலமாக காஞ்சிபுரத்திற்கு போதுமான அளவு சரிகை கிடைக்கவில்லையென்ற காரணத்தினால், காஞ்சிபுரத்திலேயே சரிகை தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்கப்பட்டு, பல ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய வேளையில், அதன் உற்பத்தித் திறனுக்கு 3 வேளைகள் (3 shifts) நடைபெற வேண்டிய தொழிற்சாலை, 3 வேளை நடைபெறாமல், தற்போது 1 shift–ல் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய நிலை உள்ளது. அதுமட்டுமல்லாமல், அதன் தரத்தை உயர்த்தித் தந்து, அதன் மூலமாக காஞ்சிபுரம் பட்டு நெசவாளர்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் பட்டுப் புடவைக்கான பாரம்பரியத்தைப் பாதிக்கின்றவகையில், போலி பட்டுப் புடவைகளும் பெருகி வரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்பதற்காக, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின்போது, பட்டுப் புடவை சரிகையின் தரத்தைக் கண்டறியக்கூடிய இயந்திரம் காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய முக்கிய வீதியான காந்தி ரோட்டிலுள்ள காமாட்சி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை வளாகத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அது தற்போது ஒரு சந்திலுள்ள

சங்குசாப்பேட்டைத் தெருவில் தனியார் கட்டடத்தின் மேல் மாடியில் வைக்கப்பட்டிருக்கின்றது. இதனால், பொது மக்களும், வாடிக்கையாளர்களும் அதனைப் பயன்படுத்தக்கூடிய நிலையில்லாமல் இருக்கிறது. போலி விற்பனை நிலையங்கள், போலி பட்டுப் புடவைகள் விற்பனை இன்றைக்கு அதிகமாக நடந்துகொண்டிருக்கிறது. அதன் மூலமாக, பாரம்பரியம் மிக்க பட்டுப் புடவைகளின் உற்பத்தியும், அதன் விற்பனையும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அதனைத் தடுக்கின்ற முகமாக, சரிகையின் தரத்தைக் கண்டறியக்கூடிய இயந்திரத்தினை உரிய இடத்தில் மீண்டும் வைத்து, அதனைப் பயன்படுத்துகின்ற அளவில் மக்களுக்கு விளம்பரமும் செய்யவேண்டும். போலிப் பட்டுப் புடவைகளைத் தயாரிக்கக்கூடியவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கையினை எடுத்து அதனைத் தடுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.

25,000–க்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்களைக் கொண்ட காஞ்சிபுரத்தில், அவர்கள் வாழ்வில் அக்கறை கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் 2010 ஆம் ஆண்டில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தளபதி அவர்கள் முன்மொழிந்ததை வைத்து, “பேரறிஞர் அண்ணா பட்டு பூங்காத் திட்டம்” என்ற திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தத் திட்டத்திற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, அதை செயல்படுத்துவதற்கான இடம் கீழ்கதுப்பூர் கிராமத்திலே தேர்வு செய்யப்பட்டது. 2011–லே ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, அந்தத் திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தினை இடமாற்றம் செய்து, திட்டத்தின் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு, இதுவரை திட்டத்தில் எந்தவிதமான செயலாக்கமோ, முன்னேற்றமோ ஏற்படாமல் இருப்பதை வேதனையோடு குறிப்பிட்டுச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட, பத்தி 86 மற்றும் 87–லே உள்ள கைத்தறித் துறைக்கான அறிவிப்புகளில்கூட அதற்கான திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்பது காஞ்சிபுரம் மாவட்ட மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தையே தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், 10 ஆண்டுகளுக்கு முன்பாக கூட்டுறவு வங்கிகளில் நெசவாளர்களால் பெறப்பட்ட பண்ணைசாராக் கடன்கள், அந்தக் கடன்களுக்கு வட்டி, வட்டிக்கு மேலாக அபராத வட்டி என்று கடன் அதிகமாகிக் கொண்டிருந்ததைக் கருத்திலே கொண்டு, அவர்கள் பெற்ற கடனையும், வட்டியினையும் தள்ளுபடி செய்திட வேண்டுமென்ற வேண்டுகோளை 2007–லே வைத்தபொழுது, தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு குழுக்கள் அமைத்து, ஆய்வு செய்து, வட்டியை 6 சதவிகிதம் அளவில் செலுத்தினால் போதுமென்ற திட்டத்தினை அறிவித்தார்கள். ஆனால், அப்படி அறிவிக்கப்பட்ட திட்டத்தின்மூலம் வட்டியைச் செலுத்தி முழுமையாகப் பயன்பெற முடியாத அளவிற்கு நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள். தற்போதும் அது நிலுவையிலுள்ள சூழ்நிலையில், நெசவாளர்களின் உடைமைகளை ஜப்தி செய்யக்கூடிய அளவிற்கு இன்றைக்கு கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன. இந்த நிலைமை, ஏற்கெனவே 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்ற' அளவிலே இருக்கிறது. கூட்டுறவுக் கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியினை உடனடியாக தள்ளுபடி செய்து அறிவிக்கின்ற பட்சத்தில், அசல் தொகையினைக் கட்டுவதற்கு நிச்சயமாக நெசவாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்களுடைய கல்விக் கடன் முழுவதும் இரத்து செய்யப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏன், இன்றைய அரசின் தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், ஏனோ தெரியவில்லை, இந்த அரசினுடைய நிதிநிலை அறிக்கையிலே அதற்கான எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. மாணவர்கள் பெற்ற கல்விக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வாய்ப்பில்லாமல், அதனைப் பெற்றுத் தந்த பெற்றோர்கள் இன்றைக்கு அவமானத்தோடு, கூனி, குறுகி இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், சமீபத்தில் ஒரு வங்கி, கடன் பெற்ற ஒருவரின் வீட்டுக்கு நிலுவைத் தொகையினைக் கேட்பதற்காகச் சென்று, அவர்கள் அவமானப்படுத்தப்பட்ட காரணத்தினால், அந்த மாணவரும்,

அவரின் குடும்பமும் தற்கொலைக்கு முயற்சி செய்து, இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பட்டதாரிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில்கொண்டு, உடனடியாக அந்தத் திட்டத்தினைக் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டதன் மூலமாக புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்மூலம் 48,145 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்ல விரும்புவது என்னவென்றால், தற்போதைய நிலவரப்படி, இந்த நாட்டில் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்து, காத்திருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 85 இலட்சம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு சதவிகிதத்தினருக்குக்கூட வேலைவாய்ப்பு வழங்க முடியாத சூழ்நிலை உள்ளது. புதியதாக தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான முனைப்புகளைக் காட்டுவதில் அரசு முழு கவனத்தை செலுத்தி வருவது ஒரு பக்கம் இருந்தாலும், ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகளை பாதுகாத்திட வேண்டும். 2005–லே அடிக்கல் நாட்டப்பட்டு, 2006–ல் தொடங்கப்பட்டது திருப்பெரும்புதூரிலே இருக்கக்கூடிய Nokia SEZ என்ற சிறப்புப் பொருளாதார மையம். அந்த சிறப்புப் பொருளாதார மையத்தில், Nokia, உலகப் பிரசித்தி பெற்ற Foxconn, Perlos, Jabil, Salcomp, Wintek என்ற 6 நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அதன் மூலமாக நேரடியாக 15,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும், மறைமுகமாக 35,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பு இருந்தது. ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டதைப்போல, Nokia தொழிற்சாலை மூடப்பட்டதன் காரணமாக, 10,000–க்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பினை இழந்திருக்கிறார்கள். அதனை ஒட்டியிருக்கக்கூடிய Foxconn தொழிற்சாலையில் கடந்த ஆட்சியின்போது, 23–12–2014 அன்று எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், தற்காலிக உற்பத்தி நிறுத்தம் என்று சொல்லி, ஒரே

நாளில் தொழிற்சாலையை இழுத்துமூடிவிட்டு, தொழிலாளர்களை நடு வீதியிலே நிறுத்திய அவல நிலை ஏற்பட்டபொழுது, மனிதச் சங்கிலிப் போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்கள் (குறுக்கீடு) இதோ சொல்லி முடித்துவிடுகிறேன். சொல்லி முடித்த பிறகு, பதில் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *குற்றச்சாட்டாகச் சொன்னதால், நான் பதில் கூறுகிறேன். இல்லையென்றால் சொல்லமாட்டேன். ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)*

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம்சாட்டுவதாக யாரும் கருதிவிடக் கூடாது. எதிர்க்கட்சியினுடைய செயல் சொல்லிக்கொண்டிருப்பது, ஆளும் கட்சியினுடைய செயல் செயலாக்க வேண்டியது. இது நாட்டின் ஜனநாயகக் கடமை. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேதான் இங்கே இருக்கக்கூடிய ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்கள் பிரதிநிதியாக இங்கே வருகை தந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். நான் வழக்கறிஞராக இருக்கின்ற காரணத்தினால் இதை ஒரு நீதிமன்றத்தைப் போல நடத்திக் கொண்டிருக்கக்கூடிய, அதை நடுவராக இருந்து நடத்திட வேண்டிய மாபெரும் பொறுப்புகொண்ட நீதி அரசர் போல இருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். இலத்தீன் மொழியில் “Audi alteram Partem” என்று ஒரு பழமொழி உண்டு. இருபக்கமுமுள்ள செய்திகளைக் கேட்டறிந்து தீர்ப்பு வழங்கிட வேண்டும் என்பது அதன் பொருள். அதுபோல, என்னுடைய கேள்விகளைக் கேட்பதற்கு வாய்ப்பினை வழங்கிட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். Nokia, Foxconn தொழிற்சாலைகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து நாங்கள் போராட்டங்களை நடத்தி, அதன் மூலமாக அரசின் கவனத்தை ஈர்த்தோம். அது தொடர்பாக பல்வேறு மனுக்களை

தொழில் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறைகளுக்கு அனுப்பினோம். 1984–லே அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியின்போது Simpson Group-ல் ஏற்பட்ட ஒரு பிரச்சினையின் காரணமாக Industrial Disputes Act Section 10(b)–ஐப் பயன்படுத்தி, நிருவாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டபொழுது–status quo என்ற ஓர் உத்தரவு அரசின் மூலமாக அறிவிக்கப்பட்டது. அந்த நிலையினையே Foxconn–க்கும் அறிவிக்க வேண்டும் என்ற எங்களுடைய மனு அரசின்முன் வைக்கப்பட்டது. ஆனால், அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல், பேச்சுவார்த்தை, போராட்டங்கள் என்று தொடர்ந்து நடைபெற்றபொழுதும் எந்தவிதமான பலனும் இல்லாமல், பிப்ரவரி மாதம், அவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை மட்டும் பெற்றுக்கொண்டு செல்ல வேண்டுமென்று அந்த நிறுவனம் இழப்பீட்டுத் தொகையை வழங்கிவிட்டது. ஆனால், அதில் பணியாற்றிய 200–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றுவரை I.D. Act Section 2A –ன்கீழ் மனு செய்து, அதனைப் பெறுவதற்கும் தயாராக இல்லை. Foxconn நிறுவனத்தை தொடர்ந்து நடந்திட வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கப்பட்டது. இதில் இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவரக்கூடிய செய்தி என்னவென்று சொன்னால், Foxconn நிறுவனம் தற்காலிக வேலைநிறுத்தம் மற்றும் உற்பத்தி நிறுத்தம் என்றே அறிவித்தது. தொழிற்சாலையை முழுமையாக மூடிவிடுவதாக அறிவிக்கவில்லை. மூடிவிட வேண்டுமென்று சொன்னால், அரசின் ஆணையைப் பெற்றுதான் மூட வேண்டும். அதற்கு Section 25(o) மூலமாக closure-க்கான மனுவினை செய்திருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அதற்குக் காரணம், இன்றைக்கும் Foxconn நிறுவனம் சென்னைக்கு அருகிலே இருக்கக்கூடிய ஆந்திர மாநிலம், தடா என்ற பகுதியிலே இயங்கிக் கொண்டிருக்கிறது, வேலைவாய்ப்பு தந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று, (குறுக்கீடுகள்) மகாராஷ்டிரத்திலும் 22,000 கோடி ரூபாய் முதலீட்டில் Foxconn நிறுவனம் தொடங்கவிருப்பதாக அறிவித்திருக்கிறது. அங்கெல்லாம் அவர்களுக்கான உற்பத்தித் திறனும், order–ம் இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர்கள்,

நம் தொழிலாளர்கள் இல்லையா? அந்தத் தொழிலாளர்கள், அதுவும், குறிப்பாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 27 வயதுக்குட்பட்ட இளம் தொழிலாளர்கள். அவர்களுடைய வேலைவாய்ப்பினைக் கருத்திலே கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இந்த விவரங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்னார், 'சாலையோரத்தில் வேலையற்றவர்கள். வேலையற்றவர்களின் நெஞ்சங்களில் விபரீத எண்ணங்கள்' என்று. அந்த விபரீத எண்ணங்கள் மூலமாக சமூகக் கேடுகள் ஏதும் விளைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அரசின் கவனத்திற்கு கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

நான் இந்த அரசினுடைய நிதிநிலை அறிக்கையினைப் பற்றி பெரிய அளவில் எந்தவிதமான விமர்சனங்களோ, கருத்துகளோ தெரிவித்துவிடவில்லையென்றாலும், சுருக்கமாக இரண்டே வரிகளில் சொல்லிவிடுகிறேன். நேற்றைக்கு வந்த இந்து ஆங்கில நாளேட்டில் "State's own tax revenue growing at a sluggish pace" என்று சொல்லியிருக்கிறார்கள். State's own tax revenue அதிகரித்துக் கொண்டிருப்பது, ஆமை வேகத்தில். அதனுடைய செலவினங்கள் அதிகரித்துக்கொண்டிருப்பதனால் ஏற்படுகிறது deficit. கடன் சுமை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அந்தக் கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டி அதைவிட பெரிய நெருக்கடியாக இருக்கிறது. இந்தக் கடன், வட்டி இவற்றிற்கெல்லாம் மேலாக ** இதுபோன்ற ஒரு சூழ்நிலையோடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஏற்கெனவே நான் நீக்கிவிட்டேன். மீண்டும் நீங்கள் அதை record செய்யாதீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சி.வி.எம்.பி எழிலரசன்:** முடித்து விடுகிறேன். நன்றி தெரிவித்து முடிக்கப்போகிறேன். எனவே, இந்த அறிக்கையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், வரவும் இல்லை, வருவாயும் இல்லை, பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற வழிவகைகளும் இல்லை. மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு ரசம் போன கண்ணாடி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அது பயனற்றதாக ஆகிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விமர்சனைங்களுக்காக தவறாக எண்ணிவிடாமல், எனது தொகுதிக்காக கேட்டிருக்கக்கூடிய அத்தனை திட்டங்களும் அவசியமானது என்பதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர்கள் அவற்றை நிறைவேற்றித் தந்திட வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளையும் தங்கள்மூலம் வைத்து, விடைபெறுகிறேன். வாய்ப்பினை வழங்கிட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னிப்பேச்சு என்பதால் யாரும் குறுக்கிடாதபடி, வசதிக்குகந்தபடி நீதிமன்றங்களில் வழக்காடுவதுபோல் அவர்களுடைய வாதத்தை இங்கே நிறைவு செய்திருக்கிறார்கள். 2005–2006–ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்தபொழுது, ரூ.57,457 கோடிதான் கடன் இருந்தது. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த தி.மு.க–வினர் ஆட்சியைவிட்டுச் செல்கின்றபொழுது 2010–2011–ல் 1,01,349 கோடி ரூபாய் கடனை (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கையில் கொடுத்துவிட்டுப் போனார்கள். (குறுக்கீடுகள்) ஏதோ பாத்திரம் நிறைய அள்ளிக்கொடுத்துவிட்டுப் போனது போல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, எல்லா நிலைமைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்து விடுகிறேன். அதன் பிறகு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்பொழுது நீங்கள் இப்படிச் செய்வது சரியில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுகளுக்கு மேலாக, மாண்புமிகு அம்மா அவர்களின் நிருவாகத் திறமையின் காரணமாகத்தான், இந்தியாவின் பொருளாதாரத்தில் மந்த நிலையினால் பாதிக்கப்பட்டிருந்தாலும், மற்ற மாநிலங்களில் நம்மைக்காட்டிலும் அதிகமாகக் கடன் பெற்று அந்த மாநிலத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நிருவாகத் திறமையின் காரணமாக எல்லாவற்றையும் கட்டுக்குள் வைத்து, ஒரு நல்ல திறமையான நிருவாகத்தைநடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள்.*

*பிற்பகல் 1–10*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காஞ்சிபுரம் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். மத்திய அரசுடன் நீங்கள் கூட்டணியில் இருக்கும்பொழுது,* retrospective effect *கொடுத்து மத்திய அரசால் முன்தேதியிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட* retrospective effect *வரிச் சட்டம், 2012–ல் கொண்டுவரப்பட்ட திருத்தங்களின்படி, 1–6–1976–லிருந்து கணினி மென்பொருள்களுக்கு வழங்கப்படும் தொகை,* royalty, *வருமானமாகக் கருதப்படும். இதன்படி, சென்னை நோக்கியா நிறுவனத்தில் வருமான வரித் துறையினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர், 2006–2007 முதல் 2011–2013 மார்ச் வரையிலான நிதியாண்டுகளில் ரூ.2,080 கோடி வரித் தொகை மென்பொருள்* supply *செய்வதற்காக நோக்கியாவிற்கு வழங்கிய வகையில், கட்டத் தவறியதால்* defaulter *என்று குறிப்பிடப்பட்டு, அந்தக் கம்பெனி மூடப்பட்டது. இதனால், தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறந்த வழிகாட்டுதலின்படி மீண்டும்*

நோக்கியா அமைந்த இடத்தில் Foxconn நிறுவனத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டதன் காரணமாக, Foxconn நிறுவனத்தைப் புதுப்பிக்க ஏதுவாக, மத்திய அரசு, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் செயலாளர் தலைமையில் ஒரு குழுவினை Foxconn நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தைவான் நாட்டிற்கு அனுப்பியது. அதில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, மாநில அரசும் இணைந்துகொள்ள, மத்திய அரசு கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலின் அடிப்படையில், தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் துணைத் தலைவர் ஆகியோர், Foxconn நிறுவனத்தின் தலைவர் திரு. டெர்ரி கோயு அவர்களை 30–5–2012 அன்று தைவான் நாட்டில் நேரில் சந்தித்து, Foxconn மற்றும் நோக்கியா நிறுவனங்களில் புதுப்பிக்க மற்றும் ஊக்கப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய விழையும் தமிழக அரசின் விருப்பத்தினைத் தெரிவிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கடிதத்தை வழங்கினார்கள். அதன் அடிப்படையில், தமிழக அரசின் ஆதரவினை வரவேற்று, Foxconn நிறுவனத்தின் தலைவர் மேற்காணும் பணிகளை ஜூலை 2017–க்குள் துவக்குவதற்கு பரிசீலனை செய்வதாகத் தெரிவித்துள்ளார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த நிறுவனமும் எந்த state–க்கும் போகவில்லை. தொழில் முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க தமிழகத்திற்கு வந்தால், அவர்களை வரவேற்று, தொழில் தொடங்க ஊக்குவித்து, தொழில் துவங்குவதற்குண்டான அனைத்து சுமுகமான, உகந்த சூழ்நிலைகளை உருவாக்கித் தருகின்ற ஒரு தலைசிறந்த தலைவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

85 இலட்சம் நபர்கள் வேலைக்காகக் காத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் இங்கே கூறினார். தொழில் துறையை மேம்படுத்தும்விதமாக, தொடர்ச்சியாக 2017–ல் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடக்கவிருக்கிறது. ஏற்கெனவே 2015

ஆம் ஆண்டு, செப்டம்பர் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. 7 தொழில்கள் தொடங்கப்பட்டன, 7 தொழில்களைத் துவங்குவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, 29–1–2015–ல் தொடங்கப்பட்டது. மேலும், பல்வேறு தொழில் நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழ்நிலை உருவாகியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்களைத் தொடங்க முன்வருபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை வரவேற்று, தமிழகத்தில் பல்வேறு தொழில்களை உருவாக்குகின்ற ஒரு தலைசிறந்த தலைவர்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன் அவர்கள் தான் ஒரு வழக்கறிஞர் என இங்கு தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர் தோற்ற கட்சிக்கு வாதிட வந்ததினாலோ என்னவோ தெரியவில்லை, அவர் பேசியதெல்லாம் இன்றைக்கு எல்லாமே உபயோகமற்ற கருத்துகளாகவே இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் காஞ்சிபுரத்தில் பட்டு நெசவுப் பூங்கா அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், ஆனால் பட்ஜெட்டில் அதுபற்றி குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவித்து, அது தனக்கு மிகவும் வேதனை அளிக்கிறது, வருத்தம் அளிக்கிறது என்றெல்லாம் கூறி, மிகவும் வேதனைப்பட்டார். அவர் வேதனையே படவேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கொண்டுவந்திருக்கிற திட்டங்களில் ஒன்றாக காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா பட்டு நெசவுப் பூங்காவை அமைக்க கீழ்கதிர்பூர் கிராமத்தில் 75 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பூங்காவிற்கான

மானியமாக 7.54 கோடி ரூபாயும், வட்டியில்லா கடனாக 6.23 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். பட்டுப் பூங்காவின் மதிப்பீடு ரூபாய் 83.83 கோடியாகும். இதில், மைய அரசினுடைய மானியம் ரூ.33.53 கோடி ஆகும். பட்டு நெசவுப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் அனைத்தும் நிறைவேறுகிற நிலையில் உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரைவில் அடிக்கல் நாட்டுவதற்கான ஆணையைப் பிறப்பிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன் அவர்கள், “காஞ்சிபுரத்தில் இயங்கி வருகின்ற பட்டு பரிசோதனைக் கூடம் ஓரத்தில் இயங்கி வருகிறது. அங்கு ஏறிச் செல்வதற்கு சிரமமாக இருக்கிறது. வசதிகள் செய்து தரப்பட வேண்டும்” என்று கேட்டார். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, நானும், அந்தப் பரிசோதனைக் கூடத்தை நேரில் சென்று பார்வையிட்டேன். அந்தப் பரிசோதனைக் கூடம், பட்டு விற்பனைக் கூடங்கள் நிறைந்த பகுதியில் அமைந்திருப்பது ஒருவகையில் வசதிதான். மேலும், கைத்தறித் துறையினுடைய பரிசோதனைக் கூடத்தில், பரிசோதனைக்கான கட்டணமாக வாங்கப்படுவது 500 ரூபாய் மட்டும்தான். ஆனால், மைய அரசு வாங்குகிற பரிசோதனைக்கான கட்டணம் 5,000 ரூபாயாக இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 5,000 ரூபாய் கட்டணத்தில் மைய அரசு செய்கின்ற பரிசோதனையை, 500 ரூபாய் கட்டணத்தில் செய்து தருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன் அவர்கள், “கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் கடனில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன” என்று சொன்னார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மொத்தம் 74 பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன; மொத்தத் தறிகளின் எண்ணிக்கை 39,293; இயங்கும் தறிகள் 6,902 ஆகும். (குறுக்கீடு) மிகவும் சுருக்கமாகச் சொல்கிறேன். மாண்புமிகு

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தற்போது 60 கைத்தறி சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. மொத்த சங்கங்கள் 74—ல், இலாபத்தில் இயங்கி வரும் சங்கங்களின் எண்ணிக்கை 60 ஆகும். 14 சங்கங்கள் மட்டும்தான் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி குறிப்பிட்டார்கள். காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காஞ்சிபுரம் நகராட்சிப் பகுதிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 84 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில், 51 ஊரகக் குடியிருப்புகளில், 5 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவிலும், 10 அரசுப் பள்ளிகள் மற்றும் 35 அங்கன்வாடி மையங்களில், 0.16 கோடி ரூபாய் செலவிலும் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குடிநீர்த் திட்டங்களைப் பற்றி பேசியபோது, குடிநீர்த் திட்டங்களை அவருடைய தலைவர்தான் கொண்டு வந்தார் என்று சொன்னார்கள். அவற்றின் உண்மையான நிலையை குறிப்பிட விழைகிறேன். பாலாற்றினை நீராதாரமாகக் கொண்ட, திருப்பாற்கடல் குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1991 ஆம் ஆண்டு பணிகள் துவக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு 16.6 எம்.எல்.டி. நீர் பெறப்பட்டு, மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் புதிய திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் உரிய நிதி

ஆதாரம் இறுதி செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பாலாற்றில் குடிநீர் ஆதாரம் இல்லாததால், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்து, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்தத் திட்டத்திற்கும் ஒப்புதல் வழங்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 18–8–2004-ல் 12.59 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள். தற்போது பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், விடுபட்ட பகுதிகளில், புதிய பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த 392 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. உரிய நிதி ஆதாரம் இறுதிசெய்யப்பட்டவுடன் பணிகள் தொடங்கப்படும். பாதாள சாக்கடைத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். கடந்த தி.மு.க. ஆட்சியிலே, 55 திட்டங்கள் எடுக்கப்பட்டு, 35 திட்டங்கள் எடுக்கப்பட்ட நிலையிலேயே கைவிடப்பட்டன. 20 திட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டு, அதிலும் ஒரேயொரு திட்டத்தைத்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள். மீதமுள்ள 19 திட்டங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நிதியொதுக்கி நிறைவேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

அதேபோல, பேருந்து நிலையத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். காஞ்சிபுரம் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க பொன்னேரிக்கரை பகுதியில் நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், மேற்படி நிலம் ஏரிப் பகுதியானதால் அரசின் ஒப்புதல் பெற இயலவில்லை. எனவே,

கீழ்க்காணும் 2 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. (1) திருமலையாறு தோட்டம் பகுதியில் இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான 16.79 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏகாம்பரநாதர் கோயில் நிலம். நுழைவு அனுமதி பெற இணை ஆணையர், இந்து அறநிலையத் துறை, வேலூர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, நிலுவையில் உள்ளது. (2) சென்னை—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை என்.எச்.—4 பகுதியிலே தனியார் அறக்கட்டளைக்குச் சொந்தமான 52.66 ஏக்கர் பரப்பளவுகொண்ட நிலத்தினை 99 ஆண்டு கால குத்தகைக்குப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் சொன்னதற்கு பதில் சொல்கிறார். நீங்கள் கன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாமென்று சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பொறுமையாக இருந்தார்கள். அதற்கு பதில் சொல்ல வேண்டுமல்லவா? மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தங்களுடைய பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்திட வேண்டுமென்கின்ற கோரிக்கையினை வைத்தார்கள். தமிழகத்தினுடைய தன்னிகரில்லா மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முழுவதும் 1,808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துவைத்து அதன் மூலம் 16,72,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டில் மட்டும் 104 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 467 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே குறிப்பாக,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 70 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, 72,733 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தற்போது நெல் வரத்து இல்லை. தேவைப்படுகின்ற இடங்களிலெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்திட வேண்டுமென மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதில் சில விளக்கத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே நோக்கியாவைப் பற்றி அவர் சொல்லிவிட்டார். பல போராட்டங்களை நடத்தினோம் என்று சொன்னார்கள். ஒரேயொரு போராட்டத்தை மட்டும் நடத்தியிருந்தால் நோக்கியாவில் இருந்த 10,000 தொழிலாளர்களும் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். இதற்குக் காரணம் நீங்கள்தான். ஏனென்று சொன்னால், 2012 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் முன் தேதியிட்ட வரிச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது நீங்கள் மத்தியில் ஆட்சியிலே இருந்தீர்கள். ஏன் அதை எதிர்க்கவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அப்போது போடப்பட்ட ஒப்பந்தத்திற்கு காங்கிரசும், நீங்களும் உடன்பட்டீர்கள். அதுதான் அந்த ஆலை போனதற்கு காரணம் என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். மீண்டும் 2005 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள் என்று சொன்னதற்கு நன்றி.

பிற்பகல் 1–25

Foxconn பற்றி கேட்டீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியே சென்று விட்டார்கள். Foxconn ஆலை போனதற்குக் காரணமும் நீங்கள்தான். ஏனென்று சொன்னால், (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் கேளுங்கள். 2008 ஆம் ஆண்டு இடதுசாரி கட்சிகளால் அங்கே ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது ஆட்சியில் நீங்கள் இருந்தீர்கள். ஆட்சியில்

இருக்கின்றபோது என்ன செய்ய வேண்டும்? தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். தொழிலுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஆனால், அன்றையதினம் உங்களுடைய கவனக் குறைவின் காரணமாக, தொழிலாளர்கள் உள்ளே புகுந்து, Mode என்று சொல்லக்கூடிய key board–ஐ இரும்புக் கம்பியால் கோடிட்டு, கிட்டத்தட்ட கோடிக்கணக்கான ரூபாய் சேதமாகின்ற அளவிற்கு தகராறு செய்த காரணத்தால், அந்த நிருவாகத்தினர் அன்றையதினம் தொழில் துறை அமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் தலைவரிடம் சொன்னார்கள். இந்த அளவிற்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்ற தமிழகத்தில் நாங்கள் இனிமேல் தொழில் செய்யவேண்டுமா என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று அவரிடத்தில் கேட்டிருக்கிறார்கள். நாளைய தினம் வருகின்றபோதுகூட இல்லையென்று அவர் மறுக்கட்டும். நான் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன். Foxconn என்பது நோக்கியாவினுடைய Vendor Company தான். அப்படி இருந்தும்கூட அந்த Foxconn கம்பெனியை நடத்த வேண்டும் என்பதற்காக அவ்வளவு ஆர்வத்தோடு அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். தொழிலாளர்கள் அவர்களுடைய உரிமைக்காக கேட்டிற்கு வெளியே போராட வேண்டும். ஆனால், ஆலைக்குள்ளே அவர்களை அனுப்பி, அந்த ஆலையில் இருக்கின்ற Key Boards-யை எல்லாம் அவர்கள் சேதாரம் செய்கின்றபோது, அன்றைய தினம் எங்கே சென்றீர்கள்? ஏன் அதைப் பாதுகாக்கவில்லை? இன்றைய தினம் கேட்கின்றவர்கள் அன்றைய தினம் இதைக் கேட்டிருந்தால் தொழிலாளர்களுக்குரிய பாதுகாப்பும் இருந்திருக்கும், தொழிலும் இருந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு எதுவுமே கொடுக்காமல், வாங்கினால் வாங்குங்கள், இல்லாவிட்டால் போங்கள் என்று சொல்லிவிட்டார்கள் என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்கள் அனைவரையும் அழைத்துப் பேசுமாறு ஆணையிட்டிருக்கின்றார்கள். நோக்கியா ஆலையில் ஏற்பட்ட இடர்பாடுகளின் காரணமாக தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக அவர்கள் எத்தனை ஆண்டுகள் வேலை செய்திருக்கின்றார்களோ அத்தனை ஆண்டுகளுக்கு ஏற்றாற்போல் ரூபாய் 3 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை அவர்களுக்கு ஈவுத் தொகையாகக் கொடுத்து அனுப்பியிருக்கின்றார்கள். அதேபோல Foxconn ஆலையிலும் நடைபெற்றிருக்கின்றது. அந்த Foxconn ஆலை போட்ட condition–க்கு ஒத்துக்கொள்ளாத

*தொழிலாளர்கள் இப்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றார்கள். நீங்களும் ஒரு வழக்கறிஞர். அது என்னவென்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆக, இந்தளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். இந்தியாவும், பின்லாந்தும் இரட்டை வரி விதிப்புக்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அதையும்மீறி, 2012 ஆம் ஆண்டு முன் தேதியிட்ட வரிச் சட்டம் கொண்டுவந்த காரணத்தால்தான் நோக்கியா ஆலையும் போனது* Foxconn *ஆலையும் போனது.* Foxconn *ஆலைக்கு சரியான பாதுகாப்புக் கொடுத்திருந்தால், மகாராஷ்டிராவிற்கோ, ஆந்திராவிற்கோ அவர்கள் சென்றிருக்க மாட்டார்கள். தமிழகத்தில் மட்டும்தான் அவர்கள் இருந்திருப்பார்கள். அதற்குக் காரணம் உங்களுடைய ஆட்சி மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன் அவர்கள் பேசுகின்றபோது, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 85 இலட்சம் பேர் வேலைக்காகக் காத்திருக்கின்றார்கள் என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அவர் வழக்கறிஞராக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அவர் பேசுகின்றபோது முதலிலே இருந்து கடைசி வரை வழக்கறிஞர்களுக்கே உரிய தருமத்தோடு தன் கட்சிக்காரர்களுக்காக மட்டுமே வாதாடிக் கொண்டிருக்கின்ற நிலையைத்தான் அவர் எடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உள்ளே இருக்கின்ற பிரச்சினைக்கு செல்லவே இல்லை. எதனால் ஏற்படுகிறது என்றே சொல்லவில்லை. அது வழக்கறிஞர் பாணி, அதாவது தர்மம். வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகத்தான் எடுக்கவேண்டுமென்ற உத்தரவினை 2012 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இரத்து செய்யவில்லை. பொது விளம்பரங்கள் மூலமாகவும் பணி நியமனம் செய்யப்படவேண்டுமென்ற ஆணையை வழங்கியிருக்கின்றது. இதற்கு பொது அறிவிப்பு செய்யப்படவேண்டும். தமிழ்நாடு தேர்வாணையம் மூலமாக கீழ்நிலையில் இருக்கின்ற ஊழியர்கள் பணி நியமனம் செய்யப்படுகின்றனர். மற்ற பதவிகள் பொது விளம்பரங்கள்*

மூலமாக எடுக்கப்படவேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவும் அந்தப் பணிகளை எடுக்கலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, கடந்த நான்கு ஆண்டு காலமாக இதன் மூலமாகத்தான் அனைத்து பணியாளர்களும் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலமாக எத்தனை பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருங்கிணைந்த சார் நிலை பணிகள் தேர்வு–1 பல்வேறு பதவிகளை உள்ளடக்கியது. அதன்மூலம் 15 ஆயிரத்து 325 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. உதவிப் பொறியாளர் பணியிடங்கள் 919 நிரப்பப்பட்டிருக்கின்றன. தொகுதி–4 தேர்வில் மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் 268 பேர்களுக்கு பணிகள் தரப்பட்டிருக்கின்றன. தொகுதி–4 தேர்வுகள் மூலமாக 15,681 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். கிராம நிருவாக அலுவலர்களாக 7,696 பேர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள், மருந்து ஆய்வாளர்களாக 114 பேர் தேர்வு செய்யப்பட்டு, பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள், தொகுதி–1 தேர்வு மூலமாக 131 பேர் தேர்வு செய்யப்பட்டு, பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள், வேளாண்மை விரிவாக்க அலுவலர்களாக 460 பேரும், ஒருங்கிணைந்த சார் நிலை பணிகள் தேர்வு–2 மூலமாக பல்வேறு பதவிகளுக்கு 138 பேரும், உரிமையியல் நீதிபதிகள் தேர்வு மூலமாக 162 பேரும், உதவி குற்றவியல் வழக்கறிஞர் 88 பேரும், சென்னை உயர் நீதிமன்ற பணிகளுக்குள் அடங்கிய பதவிகளுக்காக 268 பேரும், வனச் சரகர் பணியாளர்களாக 80 பேரும், தோட்டக் கலை அலுவலர் பணிகளுக்காக 183 பேரும், குழந்தைகள் நலத் திட்ட அலுவலர்களுக்காக 117 பேரும், உதவி வேளாண் அலுவலர் பதவிகளுக்காக 417 பேரும், ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வுகள் மூலமாக 98 பேரும், உதவி வனப் பாதுகாவலராக 2 பேரும், நெடுஞ்சாலைத் துறையில் உதவி பொறியாளர்களாக 213 பேரும், உதவி மருத்துவ அலுவலர் பதவிக்காக 83 பேரும், ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்காக 4 பேரும், ஒருங்கிணைந்த

சார்நிலை பணிகள் தேர்வு–II–ல் பல்வேறு பதவிகளுக்காக 1,807 பேரும், கிராம நிருவாக அலுவலர் பதவிக்காக 813 பேரும், பிற பதவிகளுக்காக 13,123 பேர்கள் என மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியின் மூலமாக 58,190 பதவிகள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.

**திருமதி கு. உமா மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி கு. உமா மகேஸ்வரி, ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Foxconn India Private Limited என்ற நிறுவனத்தில் மொத்தம் 1,306 நிரந்தர தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இந்த நிறுவனத்தில் ஃபாக்ஸ்கான் அண்ணா தொழிற்சங்கப் பேரவை (A.T.P.), Foxconn தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (L.P.F.) மற்றும் காஞ்சி பொதுத் தொழிலாளர் சங்கம் (C.I.T.U.) ஆகிய மூன்று தொழிற்சங்கங்கள் இயங்கி வந்தன. நோக்கியா ஆலை இயக்கம் 31–10–2014 அன்று முடிவுக்கு வந்ததால், ஃபாக்ஸ்கான் கம்பெனியின் தொடர் வியாபாரச் சரிவு மற்றும் உற்பத்திக் குறைவு போன்ற காரணங்களால் ஃபாக்ஸ்கான் நிறுவனத்திற்கு ஆர்டர்கள் பெறப்படவில்லை. இதனிடையே, நோக்கியா ஆலையில் ஆர்டர்கள் இல்லாத காரணத்தினால் ஃபாக்ஸ்கான் நிறுவனம் விருப்ப ஓய்வுத் திட்டம் அறிவித்தது. (குறுக்கீடு) தொழிலாளர்கள் பற்றி உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் பேசினார், அதனால், நான் இந்த பதிலைத் தருகின்றேன். இந்நிலையில் தொழிலாளர்கள் தரப்பில், தொழிலாளர்களுக்கு நிருவாகம் மீண்டும் பணியும், கூடுதல்

தொகையும் வழங்க வேண்டும். நிறுவனத்தை மீண்டும் நடத்தும்பட்சத்தில், தொழிலாளர்களுக்கு முன்னுரிமையும் தர வேண்டுமென்று வலியுறுத்தியது. இதனைத் தொடர்ந்து, 12—2—2015 அன்று இரு தரப்பினரும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, தொழில் தகராறு சட்டம், பிரிவு 18(1)—ன்கீழ் நிருவாகமும், தொழிற்சங்கமும் (C.I.T.U.) ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்படி, ஒவ்வொரு தொழிலாளியும் ரூ.3.90—லிருந்து ரூ.4.75 இலட்சம் வரை, அதாவது சராசரியாக ரூ.4.33 இலட்சம் பணப் பயன் பெற்றுள்ளனர். இருப்பினும் 1,306 தொழிலாளர்கள் முழுப் பணப் பயன்களைப் பெற்றுக்கொண்ட பின்னரும், Writ Petition No. 5008/2016—ல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கு சென்னை, உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இத்தொழிலாளர்களுக்காக அரசுத் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கவும், திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கவும், தொழில் தொடங்கத் தேவையான கடன் உதவிகள் செய்யவும், வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரவும் தொழிலாளர் ஆணையர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். தொழிலாளர்கள்மீது அளவற்ற பாசமும், பரிவும் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிறுவனத்தை சென்னையில் மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, 85 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். இதில், 10—வது மற்றும் 12—வது வகுப்புகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் 60 சதவிகிதம் பேர் இருக்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 60 சதவிகித மாணவ, மாணவிகள் மேற்படிப்பு படித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1—35

அதுமட்டுமல்லாமல், 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை Employment Exchange மூலமாக 77,696 நபர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) T.N.P.S.C. மூலமாக 41,687 நபர்களுக்கும், T.N.M.R.B. மூலமாக 9,375 நபர்களுக்கும், T.R.B. மூலமாக 56,328 நபர்களுக்கும், T.N.U.S.R.B. மூலமாக 32,997 நபர்களுக்கும், private

*2016 ஜுலை 26]* [டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்]

sector *மூலமாக 1,42,114 நபர்களுக்கும்,* O.M.C.L. *நிறுவனத்தின் மூலமாக 1,126 நபர்களுக்கும்,* Protector of Emigrants *மூலமாக 69,691 நபர்களுக்கும்,* campus recruitment *மூலமாக 70,860 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மொத்தம் 5,01,874 நபர்களுக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியில் வேலை கிடைத்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல்,* Special Job Mela *நடைபெற்றது. 15 மாவட்டங்களில் இது நடைபெற்றது. மொத்தத்தில்* online *மூலமாக 2,01,364 நபர்கள் பதிவு செய்திருந்தார்கள். இதில் வேலை அளிப்பவர்கள், அதாவது* employers *3,330 நபர்கள் இருந்தார்கள். வேலை கேட்டு வந்தவர்கள் 4,47,496, பணி நியமனம் பெற்றவர்கள் 59,232 என்று தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல்,* job fair–*ல் வேலைவாய்ப்பற்ற 53,440 மாணவர்கள் திறன் பயிற்சி பெறுவதற்கு சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், அயல்நாட்டு வேலைவாய்ப்பு பெற பதிவு செய்தவர்களில் 1,646 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

**திருமதி கு. உமா மகேஸ்வரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அன்பே சிவம் என்பதற்கு அகரமாகவும், ஓம் என்பதற்கு மகமாகவும்,. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள், உங்கள் உறுப்பினர்கள் எத்தனை பேருக்குப் பேசுவதற்கு நான் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி பேசுங்கள்.*

***திருமதி கு. உமா மகேஸ்வரி:** *ஓங்காரமாக உயர்ந்து நிற்கும் மாண்புமிகு அம்மா அவர்களே, தங்கள் மலரடி பொற்பாதங்களில் அம்மா வாழ்க, அம்மா வாழ்க என ஆர்ப்பரித்து ஓடும் என் உதிரங்களால் வணங்குகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)*

*“ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினும் தான்முந் துறும்”*

*என தெய்வ ஆணையை நினைவூட்டும் தெய்வப் புலவர் வள்ளுவர்*

"வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்"

என வாழ்வியல் பாதைக்கு வள்ளுவம் இயற்றிய பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர்.

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி"

என்று உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் பெருந்தகையின் கூற்றிற்கு ஏற்ப, ஊழ்வினை யாதாகினும் அதனை சீர்திருத்தி, வாழ்வியலை ஏழைக்கு வசந்தமாக்கித் தரும் வேந்தர்களுக்கெல்லாம் வேந்தராக வீற்றிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக மக்களின் நலன் காக்கும் தெய்வம் அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறு படை வீடு கொண்டிருக்கும், விரும்பியோர் வீடுதோறும் குடிகொண்டு அருள்பாலிக்கும் தமிழ்க் கடவுள் முருகப் பெருமானைப் போல் ஆறு முறை மாண்புமிகு தமிழக முதல்வராக செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மாட்சிமைபொருந்திய ஆட்சி தந்து, ஏங்கும் ஏழைகளின் உள்ளங்களில் எல்லாம், (மேசையைத் தட்டும் ஒலி) இல்லங்களில் எல்லாம் நிறைந்து நிற்கிறீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! தங்கள் கருணையால் சாதாரணப் பெண்ணான என்னை விளாத்திகுளம் ஒன்றியக் குழுத் தலைவியாக கடந்த ஐந்தாண்டுகளில் பணியாற்றிட பாக்கியம் தந்தீர்கள் அம்மா.

பிற்பகல் 1–40

மேலும், மனிதநேயம் மிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னை விளாத்திகுளம் ஒன்றியக் கழக இணைச் செயலாளராக்கியும், தங்களின் பொற்கால ஆட்சியில் விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கியும், இந்தப் பிறப்பெடுத்த என் வாழ்வினை நீட்டித்தீர்களே அம்மா, தங்கள் புண்ணிய காலடியில் என் கோடானு கோடி உதிரத் துளிகளால் வணங்குகிறேன் அம்மா.

அம்மா, தங்களின் ஆட்சி தெய்வத்தின் ஆட்சி அம்மா! ஆம், தெய்வத்தின் ஆட்சி அம்மா! அம்மா, கரிசல் வெயிலில்

காய்ந்துபோன முதியோர்களின் கன்னக் குழியில் புன்னகை தவழ, முதியோர் உதவித் தொகையை உயர்த்தித் தந்தவர் தாங்கள் அம்மா. அம்மா, முதிர்கன்னிகளே இல்லாத திருநாட்டை உருவாக்கிட தாலிக்குத் தங்கம் 1 பவுன் என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியில் ஓங்கி வளர்ந்தது தமிழ்நாடு என்ற நிலையை அடைய, ஏழை பட்டதாரி மணமகளுக்கு உதவித் தொகையை ரூபாய் 50,000/– என உயர்த்தினீர்களே, அம்மா! தமிழ்நாட்டில் குழந்தைச் செல்வங்கள் உயர் கல்வி பெற்றிட, உலகமே போற்றும் உன்னதத் திட்டமான விலையில்லா மடிக் கணினி திட்டம் மற்றும் மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி ஆணையிட்டு, ஏழைகளின் வீட்டில் ஒளி விளக்காக, அன்பின் ஆலய மணி விளக்காக விளங்கி, பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், அறிவார்ந்த சமூக முன்னேற்றத்திற்காகவும், தொழில் வளர்ச்சியின்மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் அயராது தவ வாழ்வு வாழும் அவதாரமே! தியாகத் திருவுருவே, அம்மா! உங்கள் ஆணையால் தமிழகம் அமைதி, வளம் என வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போடுகிறது, அம்மா! அம்மா, தென் தமிழகத்தைச் சார்ந்தவள் என்ற முறையில் வீரமும், உணர்ச்சியும், தீரமும் நிறைந்த தென் தமிழகத்து மக்கள் உயர்ந்தோங்கி வாழ இந்த நிதியாண்டில் வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில் பெரும் முக்கியத்துவம் தந்தமைக்காக அம்மா! உங்கள் மலரடி பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களை சமர்ப்பிக்கின்றேன், அம்மா!

மழை பெய்த களிமண் நிலமாய், மனம் எப்போதும் நெகிழ்ந்திருக்கும் விளாத்திகுளம் தொகுதி மக்களின் விசாலமான பார்வைக்கு நன்றி மலர்களை நயனுறத் தந்து, நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் எனது கன்னிப் பேச்சைத் தங்கள் திருவடிமுன் காணிக்கையாக்குகின்றேன், அம்மா! அம்மா, என் பிரபஞ்சமே, இதை தண்ணளியாய் ஏற்றிடுக!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய பயிர்க் கடன் தள்ளுபடி, வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம், தாலிக்கு 8 கிராம் இலவச தங்கம், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட், கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம், மதுக் கடைகள் நேரம் குறைப்பு என்று தாங்கள் சொன்ன தேர்தல் வாக்குறுதிகளை ஆறாம் முறையாக அரியணை ஏறியதும் 5 கோப்புகளில் கையெழுத்திட்டு தமிழக மக்களை ஆற்றுப்படுத்திய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி

அம்மா அவர்களே, தங்களின் பொற்கால ஆட்சியின் நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கன்னிப் பேச்சை மாவிலைத் தோரணமாய் இந்த மன்றத்தின்முன் வைக்கிறேன். அம்மாவின் இசைவால் அளிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளுமே அகில இந்தியாவின் வான்வெளிப் பரப்பை வசீகரிக்கவைத்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய விவசாயிகளின் வறுமையைப் போக்கிட அவர்களுக்கு 6,000 கோடி ரூபாய்க்கு புதிய பயிர்க் கடன்கள் வழங்கிய அன்னையே! பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்யும் நோக்கில் நடப்பாண்டில் ரூ.1,680.73 கோடி நிதி வழங்கிய தாயே! விலையில்லா ஆடு, மாடு வழங்கும் திட்டத்தின்கீழ் 12,000 ஏழைப் பெண்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்கிய அன்னையே! ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு 4 இலட்சம் வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கிய தாயே! விலையில்லா கறவைப் பசுக்களுக்கு அலகுத் தொகையை ரூ.30,000/–லிருந்து ரூ.35,000/– ஆக உயர்த்தி வழங்கிய அன்னையே! அடுத்த ஐந்தாண்டுகளில் ஏழைகளுக்கு 10 இலட்சம் வீடுகள் கட்டி நகர்ப்புறங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களை மறுகுடியமர்த்த வீட்டு வசதித் துறைக்கு சிறப்பு நிதியையும், பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.24,130 கோடி நிதியையும் ஒதுக்கிய தாயே! மாணவர்களுக்கு 5.3 இலட்சம் விலையில்லா மடிக் கணினிகள் வழங்க ரூ.890 கோடி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.11,514.34 கோடி நிதி ஒதுக்கிய அன்னையே! அக்டோபர் மாதத்தில் உள்ளாட்சித் தேர்தல், நடப்பு ஆண்டு இறுதிக்குள் ஸ்மார்ட் ரேஷன் அட்டை வழங்க ஏற்பாடு, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.9,073 கோடி நிதி! நடப்பு நிதியாண்டில் 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் தொடங்க அனுமதி ஆகியவற்றை வழங்கிய அன்னையே! விலையில்லா வேட்டி சேலை திட்டத்திற்கு ரூ.457.45 கோடி, தள்ளுபடி மானியத்திற்கு ரூ.78 கோடி நிதி வழங்கிய தாயே!

*பிற்பகல் 1–45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.2,888.26 கோடி செலவில் 11 முக்கிய குடிநீர்த் திட்டப் பணிகள், மாற்றுத் திறனாளிகளுக்கு 1,000 விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கிய அன்னையே, நடப்பு நிதியாண்டில் 3.5 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள், உலமாக்கள் உதவித் தொகையை ரூ.1,500/– ஆக உயர்த்தியது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்

வசிக்கும் பகுதிகளில் 1,000 கோயில்களைப் பழுது நீக்கி புதுப்பிக்க ரூ.10 கோடி நிதி, மாநில நெடுஞ்சாலைகளை 4 வழிச் சாலைகளாகத் தரம் உயர்த்த ரூ.1,541 கோடி நிதி என திட்டங்கள் தந்த தாயே. 2,000 பேருந்துகள் வாங்க ரூ.875 கோடி நிதி வழங்கிய அன்னையே! தென் தமிழகத்தில் அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த தொழில் துறைக்கு ரூ.2,105 கோடி நிதி, அடுத்த ஐந்தாண்டுகளில் 18,500 மெகா வாட் கூடுதல் மின் உற்பத்தித் திட்டம், பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் ரூ.420 கோடியில் 20,000 வீடுகள், தமிழ்நாடு தொழில் கூட்டமைப்பு நிதியத்திற்கு ரூ.2,000 கோடி நிதி, மீன்பிடி தடைக்கால நிவாரண நிதியை ரூ.5,000/– ஆக உயர்த்தியது, மதுரையில் பால் பொருட்கள் தயாரிக்க ரூ.45 கோடியில் புதிய தொழிற்சாலை என அறிவித்த தாயே!

மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்ய ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு. அரசு அலுவலர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்க புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்து, அதில் ஒரு சில சிகிச்சைகளுக்கு உச்சவரம்புத் தொகையை ரூ.7,50,000/– என உயர்த்தியுள்ளது மாண்புமிகு அம்மாவின் அரசு. இப்படி புதிய வரிகள் இல்லாத நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்நாட்டுக்கு சமர்ப்பித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தாயே, தங்களுடைய அன்பு, வேரிலுள்ள நீரைப்போல ஆழமானது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்களுக்கு வழிகாட்டும் தெய்வம். அம்மா அவர்களின் விசுவாச தொண்டர்களாகவும், மக்கள் சேவையே மகேசன் சேவை என புகழ் வாழ்வு வாழ்ந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் விசுவாச தொண்டர்களாகவும், கழகம் தோன்றிய நாள்தொட்டு இன்று வரை திகழ்ந்து வரும் விளாத்திகுளம் தொகுதி மக்களின் எதிர்பார்ப்பினை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று நிறைவேற்றும்படி தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதி பணிகள் குறித்து பணிவாக சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த ஏழை மாணவர்களுக்கான அரசு கல்வியியல் கல்லூரி ஒன்றினை அமைதியும் புண்ணிய பேறும் பெற்ற மகாகவி பாரதியார் பிறந்த மண்ணான எட்டயபுரத்திலோ, சீறாப்புராணம் எழுதி சிறப்பித்த உமறுப் புலவர் பிறந்த மண்ணான நாகலாபுரத்திலோ, அமையச் செய்யுமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன் அம்மா.

விளாத்திகுளம் தொகுதியின் மையத்தில் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதால் எட்டயபுரம், குறுக்குச் சாலை, மேலக்கரந்தை, எப்போதும்வென்றான், பந்தல்குடி ஆகிய இடங்களில் பாலங்கள் அமைத்திட பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன் அம்மா.

அம்மா, விளாத்திகுளம் தொகுதி முழுவதும் கரிசல் மிகுந்த கிராமப்புறங்களாக விளங்குவதால் பள்ளி சிறார்கள், முதியோர்கள் பயன்பெற்றிட, சாலை வசதிகளை மேம்படுத்திடவும், போக்குவரத்து வசதிகளை சீர்படுத்திடவும் வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

அம்மா, விளாத்திகுளம் தொகுதியில் 20 கிராமங்களுக்கு மத்தியில், சுமார் 15,000 மக்கள் வந்து செல்லக்கூடிய விளாத்திகுளம் ஒன்றியம், சிவஞானபுரத்தில் ஆரம்ப சுகாதார மையம் அமைத்திட பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன் அம்மா. அம்மா, வெம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும், சுமார் 2,500 மாணவ, மாணவிகள் படிக்கும் விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்திடவும், வேதியியல் ஆய்வகத்திற்கு புதிய கட்டடம் அமைத்திடவும், மாண்புமிகு அம்மா அவர்களால் தரம் உயர்த்தப்பட்ட வேப்பலோடை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளின் சேர்க்கை அதிகரித்துள்ளதால் போதிய ஆசிரியர்களை நியமிக்கவும், மாணவ, மாணவிகள் பாதுகாப்பாக இருக்க சுற்றுச் சுவர் அமைத்திடவும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன் அம்மா. அம்மா, விளாத்திகுளம் தொகுதி, பசுவந்தனை கிராமத்தில் சுயம்புவாக உருவாகி 600 ஆண்டுகளுக்கு மேலாக அருள்பாலித்து வரும் அருள்மிகு ஆதிகைலாசநாதர் திருக்கோயில் தெப்பக்குளத்தினை புதுப்பித்துத் தருமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன் அம்மா. இவற்றையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கனிவோடு

2016 ஜூலை 26] [திருமதி கு. உமா மகேஸ்வரி]

பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். அம்மா, தங்களின் அருட்பார்வையால் எனக்கு முகவரி கிடைத்தது. அந்த முகவரியால், விளாத்திகுளம் தொகுதி மக்களால் இந்தப் பேரவையில் அமரும் பேறு பெற்றமைக்கும், நிதிநிலை அறிக்கையின்மீது பேச அனுமதி அளித்தமைக்கும் நானும், என் குடும்பத்தாரும் அன்னைக்கு நன்றியோடு இருப்போம் என்று சொல்லி, தங்களின் திருக்கமல தாமரையடிகளை கண் ஒற்றி வணங்கி, என்றும் மக்களின் நலனை மனதில் கொண்டு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு அளித்த இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்று, பாராட்டி எனது கன்னிப் பேச்சினை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். 10 நிமிடங்களில் உரையை முடித்துவிட வேண்டும்.

**திருமதி எஸ். விஜயதரணி:** பேசுவதற்கு ஆரம்பிக்கும்போதே இப்படியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்தான். அதற்குமேல் நேரம் இல்லை. அதற்குள் முடித்துவிட வேண்டும்.

***திருமதி எஸ். விஜயதரணி:** பேரவைத் தலைவர் அவர்களே, Starting–லேயே இப்படிச் செய்தால் எப்படி? Starting trouble கொடுக்கிறீர்கள். சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016–2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் விதிக்காதது பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும், நிதிப் பற்றாக்குறை எதிர்பார்த்ததைவிட கூடுதலாகவே உள்ளது. எதிர்காலத்தில் நிதி சிக்கனம் தேவையென்று

கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் முரண்பாடுகள் உள்ளதாகவே பார்க்கிறேன். 2012—2013 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் மொத்த உற்பத்தி மதிப்பு 3.39 சதவிகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது வாசித்த நிதிநிலை அறிக்கையில் 2012—2013 ஆம் ஆண்டு மொத்த உற்பத்தி மதிப்பு 4.85 சதவிகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலே எந்த புள்ளிவிவரம் சரி என்பது தெரியவில்லை. எல்லாம் ஏட்டளவில்தான் உள்ளதா என்ற சந்தேகம் இருக்கிறது.

அதேபோல, 2012—2013 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் மாநில மொத்த உற்பத்தி 3.39 சதவிகிதமாக இருந்தது, 2014—2015 ஆம் ஆண்டு 7.25 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என 73 ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கை பக்கம் 80—ல் 2012—2013 ஆம் ஆண்டில் 4.85 சதவிகிதமாக இருந்த மொத்த உற்பத்தி வளர்ச்சி 2014—2015 ஆம் ஆண்டில் 6.94 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என கூறப்படுகிறது. இதில் எது உண்மை? நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், 2014—2015 ஆம் ஆண்டு வரவு 1 இலட்சத்து 27 ஆயிரத்து 389 கோடி ரூபாய். செலவு 1 இலட்சத்து 27 ஆயிரத்து 100 கோடி ரூபாய். வருவாய்க் கணக்கில் உபரி ரூ.289 கோடியாகவும், 2015—2016 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் வருவாய் பற்றாக்குறை 9,175.78 கோடி என்றும் 2016 பிப்ரவரி மாதம் கூறப்பட்டது. இந்த ஆண்டு 2016—2017—ல் பற்றாக்குறை 15,854.47 கோடியாக அதிகரித்துள்ளது. ஆக, ஒரு சில மாதங்களிலேயே வருவாய் பற்றாக்குறை 6,699.69 கோடி அதிகரித்துள்ளது. 2016—2017, பிப்ரவரி மாதத்தில் நிதிப் பற்றாக்குறை 36,740.11 கோடி ரூபாயாக இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், இன்றைய நிதிநிலை அறிக்கையில் நிதிப் பற்றாக்குறை 40,533.84 கோடியாக அதிகரித்துள்ளது. மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.92 சதவிகிதமாக இருந்தது இன்று 2.96 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. நாளை என்னவாக இருக்கும்? 2017—2018 ஆம் ஆண்டில் பற்றாக்குறை 3.34 சதவிகிதமாக இருக்குமென மதிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், வருவாய்ப் பற்றாக்குறை மொத்த உற்பத்தியில் 3 சதவிகிதம்தான் இருக்க வேண்டுமென்ற அளவுகோலை இது தாண்டியிருக்கிறது. 3 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டுமென்று நிதித் துறைச் செயலாளர் திரு. சண்முகம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். எனவே, கட்டுக்குள் அடங்காமல் இருக்கக்கூடிய வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை இவற்றை சரி செய்ய அரசாங்கம்

மேற்கொண்டு என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரையில் விளக்கமாகக் கூறுவார்கள் என்ற நம்பிக்கையோடு அடுத்த சப்ஜெக்ட்டிற்குப் போகிறேன்.

பிற்பகல் 1–55

அடுத்து, தேசிய கல்விக் கொள்கை. அது மக்களை மிகவும் பாதிக்கக்கூடிய கல்விக் கொள்கையாக அமையவிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்த இலவசக் கல்வித் திட்டத்தை செம்மைப்படுவதற்குப் பதிலாக முழுமையாக நீக்கும் முயற்சியை மத்திய அரசு புதிய தேசிய கல்விக் கொள்கையின் மூலமாக எடுத்து வருவதை ஆபத்தானதாக நான் பார்க்கிறேன். இது மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

அதேபோல, MHRD–மனித வள மேம்பாட்டுத் துறை, Cadre Control–ஐ தங்கள்வசம் வைத்துக்கொள்ள முயற்சிப்பது National Education Policy, NEP–ன் முன்மொழிவுகளில் தெள்ளத்தெளிவாக கூறப்பட்டிருக்கிற ஒன்று. இதிலிருந்து மாநில அரசு கல்வித் துறை நிருவாகத்தை நடத்தும் உரிமையை தன் கையிலிருந்து இழந்துவிடக்கூடிய ஒரு சூழ்நிலை தெளிவாகத் தென்படுகிறது. நம்முடைய மாநில அரசு இதற்கு என்ன எதிர்ப்பைப் பதிவு செய்யப் போகிறது? கல்வி என்பது Concurrent List–ல், பொதுப் பட்டியலில் இருக்கக்கூடிய ஒன்றாக இருந்தாலுங்கூட, கல்வியைப் பொறுத்தவரை, மாநில அரசு அந்த நிருவாகத்தை எப்போதுமே தன்வசம் வைத்துக்கொள்ளவேண்டும். மாநிலத்திற்கு ஏற்றாற்போல் கல்வித் திட்டங்கள், ஆசிரியர் நியமனம், நிருவாகம் சம்பந்தப்பட்ட பிற விஷயங்கள் இவை எல்லாமே எப்போதுமே மாநிலத்தின் கைவசம்தான் இதுவரை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், தற்பொழுது வந்திருக்கக்கூடிய இந்த தேசிய கல்விக் கொள்கையின் முன்மொழிவுகளை ஆய்ந்து, பரிசோதித்து, ஆய்வு செய்து, நாம் படித்துப் பார்க்கும்போது, முழுக்க, முழுக்க அது ஒரு R.S.S.-னுடைய கல்விக் கொள்கையைத்தான் முன்னிறுத்த முயற்சிக்கிறது. அதை நாம் தடுக்க வேண்டும். இது ஓர் ஆபத்தான கலாச்சாரம் என்று நான் கருதுகிறேன். இந்தக் கல்விக் கொள்கையைப் பொறுத்தவரை, சிறுபான்மை கல்வி நிறுவனங்கள், கட்டாயக் கல்வித் திட்டத்திலிருந்து ஏற்கெனவே முழுமையாக

விடுவிக்கப்பட்ட சூழ்நிலையில், சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு தேசிய கல்விக் கொள்கையிலிருந்து விலக்கு அளிக்காமல், அவற்றையும் முழுமையாக உள்ளே கொண்டு வரக்கூடிய முயற்சியும் நடந்து வருவதைப் பார்க்க முடிகிறது.

ஏற்கெனவே 5–வது, 4–வது வகுப்புகளை முடித்ததிலிருந்து கட்டாயத் தேர்ச்சி முறை 8–வது வகுப்பு வரை பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், இந்தக் கட்டாயத் தேர்ச்சி முறையும் இந்த தேசியக் கல்விக் கொள்கையில் மாற்றப்படுகிறது. அதுவும் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் குழந்தைகளை மிகவும் பாதிக்கும். 8 ஆம் வகுப்பு வரை உள்ள கட்டாயத் தேர்ச்சி முறை, கட்டாயமாக குழந்தைகள் பள்ளிக்குப் போவதற்கு உதவி செய்கிறது. ஆனால், இந்தக் கட்டாயத் தேர்ச்சி முறையில் ஒரு தடங்கல் வரும்போது நிறையப் பேர் அடுத்த வகுப்புக்குப் போகாமல் அப்படியே நின்றுவிடுவார்கள். இல்லை, படிக்காமல் நின்றுவிடுகிற அந்தப் பழைய முறை வர வாய்ப்பு இருக்கிறது. இது மாணவ மாணவியரின் இடைநிற்றலை அதிகரிக்கும். அதனால், அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். சிறு வயதிலேயே கட்டாயமாக கல்வி பயில வேண்டுமென்பதற்காக 8 ஆம் வகுப்புவரை கட்டாயத் தேர்ச்சி முறையை பின்பற்ற வேண்டும் என நாம் எடுத்திருக்கிற முடிவை கைவிடுகிற ஆலோசனை தேசிய கல்விக் கொள்கை முன்மொழிவுகளில் காணப்படுகிறது.

அதேபோல, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு முடித்தவுடன் தொழிற் கல்வியை ஊக்குவிக்கிற கட்டாய முறையைக் கொண்டு வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதன்மூலம் கல்விக்கான முன்னுரிமை விடுவிக்கப்படுவதைத்தான் பார்க்க முடிகிறது. கல்விக்கான முன்னுரிமைதான் முதலில் இருக்க வேண்டும். தொழிற் கல்விக்கான முன்னுரிமையை vocational என்பதை நாம் இரண்டாவதாகத்தான் நம்முடைய மாநிலத்தில் வைத்திருக்கிறோம். இந்த vocational–ஐ முதன்மைப்படுத்துகிற முயற்சி இந்த தேசிய கல்விக் கொள்கையில் இருக்கிறது. அப்போது நிச்சயமாக 10 ஆம் வகுப்பை முடிக்கும்போதே ஒரு மாணவன் படிப்பு, academic என்பதில் சிறக்க முடியவில்லை என்றால், உடனடியாக நீங்கள் தொழிற் கல்வி கற்பதற்குச் செல்லுங்கள் என்று சொன்னால், அவன் யாருடைய தொழிலுக்குச் செல்வான்? அவனுடைய

தந்தை, தாயுடைய தொழிலைத்தான் கையில் எடுப்பான். தந்தை நடத்துகிற தொழில் என்ன தொழில்? மரம் ஏறி பிழைக்கிற நபராக இருந்தாலோ, வியாபாரம் பார்த்துக் கொண்டிருக்கிற நபராக இருந்தால் குடும்பத் தொழிலைத்தான் கையில் எடுத்துச் செய்ய வேண்டிய சூழ்நிலை வருகிறது. அப்போது, குலக் கல்வி, குலத் தொழில் என்ற அந்த பழைய முறையே மீண்டும் அமலுக்கு வரும். அது படிப்படியாக நுழைந்துவிடும்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இன்னும் ஐந்து நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். ஆகவே, இந்த முறை தொடர்ந்தால், குறிப்பாக, பகுத்தறிவு பெற்ற நம்முடைய தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு மிகப் பெரிய ஆபத்தாக அமையும். ஆகையால், தேசிய கல்விக் கொள்கைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதுடன், இந்தச் சட்டமன்றத்தில் ஒட்டுமொத்த குரலோடு இதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அந்த எதிர்ப்பை பிரதமர் அவர்களிடத்திலும், பாராளுமன்றத்திலும் முழுமையாகப் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, TET, SLET தேர்வுகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறவில்லை. அந்தத் தேர்வுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். வழக்காடு மன்றங்களிலுள்ள வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணவேண்டும். ஏனெனில், ஐந்தாண்டு காலத்திற்குள் முடிக்க வேண்டிய ஆசிரியர்கள் இத்தேர்வினை எழுதமுடியாமல் தவித்துவருகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வாய்ப்புகளைத் தரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, ஒரேயொரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு பதில் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், சற்று பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிட்டு, பதில் சொல்லுங்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 5 ஆண்டு காலத்திற்குள் ஆசிரியர்கள் எழுதி முடிக்கவேண்டிய தேர்வைப் பற்றி இப்போது நான் சொன்னேன். ஆனால், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் தொடர்ந்து வழங்கியிருக்கக்கூடிய தீர்ப்புகளில் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்த* TET *தேர்வு எழுதுவதிலிருந்து* exemption *கொடுத்திருக்கிறார்கள். அது இதில் வரவே வராது என்று தெளிவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும்கூட,* minority institutions*யை இதிலே கொண்டுவருகிறோம். அதற்கு முழுமையாக விலக்களிக்க அரசாங்கம் முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மற்றும் அரசு உதவி பெறும் துவக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பணிகளில் சேருவதற்கு, 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் மற்றும் அதன் விதிகளின்படி, ஆசிரியர் தகுதித் தேர்வில் கட்டாயத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதனடிப்படையில், 2012 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் நாள் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் மொத்தம் 7,14,526 பேர் தேர்வு எழுதினர். இதில் 2,448 பேர், அதாவது, 0.34 சதவிகிதம் பேர் தேர்ச்சி பெற்றனர். அதே ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி நடைபெற்ற துணைத் தேர்வில் 6,43,095 பேர் தேர்வு எழுதினர். இதில் 19,261 பேர், அதாவது, 2.99 சதவிகிதம் பேர் தேர்ச்சி பெற்றனர். மேலும், 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் தேதி நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் மொத்தம் 6,62,498*

*பேர் தேர்வு எழுதினர். இதில் 29,518 பேர் அதாவது 4.45 சதவிகிதம் பேர் தேர்ச்சி பெற்றனர். ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்தோர் பயன்பெறும் வகையில், அவர்கள் பெறவேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண்ணை 60 விழுக்காட்டிலிருந்து 55 விழுக்காடாகக் குறைத்து சமூக நீதி காப்பதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி 6 ஆம் நாளிட்ட பள்ளிக் கல்வித் துறையின் அரசாணை 25–ஐ நடைமுறைப்படுத்தியதன் அடிப்படையில், கூடுதலாக 43,183 பேர் தேர்ச்சி பெற்றார்கள். மேற்கண்ட அரசாணை 25–ஐ எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் மேற்படி ஆணையினை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை இரத்து செய்து தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பினை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கில் அரசின் சார்பாக வாதிட மூத்த வழக்குரைஞரை நியமித்ததோடு, வழக்கில் தனிக் கவனம் செலுத்தவும், வழக்கினை விரைவுபடுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் துறை அதிகாரிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் குழு வழக்காக மாற்றி விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் குழு வழக்கில் இறுதித் தீர்ப்பை ஒத்திவைத்து ஆணையிட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திருமதி விஜயதரணி, உரையை இன்னும் ஒரு நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. உரையை முடியுங்கள்.*

*பிற்பகல் 2–05*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக TANGEDCO நிறுவனத்தில் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட களப் பணி உதவியாளர், கம்பியாளர்*

பணியிடங்கள் காலியாக உள்ளன. கூடுதல் பணி பளு காரணமாக, மனச் சுமையில் உள்ளனர். பொதுமக்களுக்கு மின் விநியோகம், தடங்கல் இல்லாமல் வழங்குவதற்கு இந்தப் பணியிடங்களை முழுமையாக நிரப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** முடித்துவிடுகிறேன். வேளாண் துறையில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 100 நாட்களாக இருந்ததை 150 நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. விவசாயப் பணிகளுக்கும் தனியாக பணி ஆணை வழங்கி, விவசாயப் பணிகளையும் இதில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கேரள மாநிலத்தைப்போல், மாநில அரசின் பங்களிப்பையும் அளித்து, இந்தப் பணிக்கு ஊதியத்தையும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை பல்கலைக்கழக துணை வேந்தர் பணியிடங்களை கவனத்தில் எடுத்து நிரப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக் கடனைப் பொறுத்தவரையில், மாணவர்கள் இன்றைக்கு அனைத்துப் படிப்புகளுக்கும் கல்விக் கடன் பெற்று நிறைய படிக்கிறார்கள். வேலைவாய்ப்பின்றி தவித்து வருகிறார்கள். கிட்டத்தட்ட தனியார் பணியிடங்களுக்காக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இதோ முடித்துவிடுகிறேன். தனியார் பணியிடங்களுக்காக 4 இலட்சத்து 47 ஆயிரம் பேர் interview attend செய்தார்கள். 3,500 நிறுவனங்கள் பங்குபெற்றன. 53 ஆயிரம் பேர்தான் select ஆனார்கள். மீதமிருக்கின்ற நிறைய பேர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. பொதுத் துறை வங்கிகளில் வாங்கிய கல்விக் கடன் தள்ளுபடி சம்பந்தமாக மாநில அரசு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். விவசாயக் கடனை தள்ளுபடி செய்கிறமாதிரி எப்படியாவது கல்விக் கடனையும் தள்ளுபடி செய்து, மாணவ, மாணவியர்களுக்கு கட்டாயமாக நாம் உதவி செய்ய வேண்டும். அதற்குண்டான முயற்சிகளை தமிழக அரசு முனைப்புடன் எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய ஒரேயொரு கோரிக்கை. எங்களுடைய மாவட்டத்தில் மழையின் காரணமாக சாலைகள் அதிகமாக சேதம் அடைந்துவிட்டன. போடப்பட்ட சாலைகளெல்லாம் உடைந்திருக்கின்றன. 5 ஆண்டுகள் முடிந்த நிலையிலுள்ள சாலைகளும் இருக்கின்றன. 3 ஆண்டுகள் முடிந்த சாலைகளும் இருக்கின்றன. அதிக அளவில் மழை பொழிவு இருப்பதால், சீதோஷ்ண நிலை மோசமாக இருக்கின்றது. Rubberised சாலைகள் போட வேண்டுமென்றால் செலவு அதிகமாக இருக்கும். கேரளாவில் rubberised சாலைகளைப் போட்டதால் அந்தச் சாலைகள் நன்றாக இருக்கின்றன. 5 வருடங்கள் ஆனாலும் உடையாமல் இருக்கின்றன. மற்ற சாலைகள் 5 வருடங்கள் முடிவதற்கு முன்பே உடைந்து போகின்றன. சாலைகள் 5 வருடங்கள் உடையாமல் இருக்க வேண்டுமானால், rubberised சாலைகளை அமைக்க வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** பேருந்துகள் மிகவும் உடைந்த நிலையில் இருக்கின்றன. எங்களுடைய மாவட்டத்திற்கு புதிய பேருந்துகளைத் தந்து, எங்களையும் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ** உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி.

## தொகுதிக் கோரிக்கைகள்

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு பேரூராட்சிக்குட்பட்ட களியல்நெட்டா ரோட்டில் அரகநாடு சந்திப்பிலிருந்து வைகுண்டம் எஸ்டேட் வழியாக மாங்கோடு ஊராட்சி, குளப்பாறை பாதை மண் சாலையாக உள்ளது. குளப்பாறை கிராமத்தையும், கடையால் பேரூராட்சி, அரகநாடு கிராமத்தையும் இணைக்கும் மண் சாலையை தார் வைத்து மேம்பாடு செய்து, பஸ் போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குமரி மாவட்டம், தனியாருக்குச் சொந்தமான பட்டா வேளாண் விளை நிலங்கள், குடியிருப்பு வீடு நிறைந்த பகுதிகள், வணிக வளாகங்கள், குறு, சிறு, நடுத்தரத் தொழில் வர்த்தக நிறுவனங்கள் அடங்கிய பட்டா நிலங்கள் ஆகியவை தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்திற்குட்படுத்தப்பட்டவை. மாவட்டத்தில் சுமார் 60,000 மனுக்கள் நிலுவையிலுள்ளன. சட்டத் திருத்தம் 4A-ன்படி விலக்களித்து உத்தரவிட்ட பின்பும், Administrative Order–ஐ அரசு அனுப்பினால்தான் பத்திரங்களை validity ஆக்க முடியுமென குமரி மாவட்ட வனக் குழு கூறுகிறது. எனவே, அரசு இதில் தலையிட்டு, பத்திரங்களை validity ஆக்க ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டத்தில் தனியாருக்குச் சொந்தமான சுமார் 690 முந்திரி ஆலைகள் இயங்கி வருகின்றன. தற்போது மத்திய B.J.P. அரசு கச்சா முந்திரிக்கு 9.34% இறக்குமதி வரி விதிப்பதால் கச்சா முந்திரியை இறக்குமதி செய்வது அடியோடு நின்றுவிட்டது. முந்திரி தொழிற்சாலையும் இழுத்து மூடப்படும் சூழ்நிலையிலுள்ளது. எனவே, மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்தும்விதமாக, கச்சா முந்திரிக்கு விதிக்கப்படும் இறக்குமதி வரியை இரத்து செய்ய இம்மாமன்றம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

குமரி மாவட்டத்தில் இரப்பர் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு இரப்பருக்கு உரிய விலை கிடைக்காமல் இரப்பர் விவசாயமே அழிந்துவிட்டது. கேரள அரசு இரப்பரை கொள்முதல் செய்வது போன்று தமிழக அரசும் கிலோ ஒன்றுக்கு ரூ.250/– வீதம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரியில் தென்னை விவசாயம் செய்யும் விவசாயிகள் பெருத்த இன்னலை சந்தித்து வருகின்றனர். அரசு கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும். தேங்காய் மூடி சிரட்டையுடன் கிலோ ஒன்றுக்கு ரூ.30/–, கொப்பரைத் தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.150/– வீதம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குமரி மாவட்டம், மார்த்தாண்டம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாளர்கள் (நிருவாகம், தணிக்கை) பணியிடம் காலியாக உள்ளது. பணியிடத்தை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*2016 ஜூலை 26]  [திருமதி எஸ். விஜயதரணி]*

*குமரி மாவட்டம், அருமனை, பள்ளியாடி சார் பதிவாளர் அலுவலகங்களில் ஜெனரேட்டர் ஒழுங்காக இயங்குவது இல்லை. குமரி மேற்கு மாவட்டத்தில் மின்சாரம் பெரும்பாலும் பகல் நேரங்களில் இருப்பது இல்லை. சார் பதிவாளர்கள் அலுவலகங்களில் காலை 10–00 மணி முதல் மாலை 5–45 மணி வரை இருந்து பத்திரப் பதிவை தொய்வின்றி பதிய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*குமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, விளவங்கோடு தாலுகாவிற்குட்பட்ட தாலுகா அலுவலக ஆவணங்கள், கிராம நிருவாக அலுவலக ஆவணங்கள், பேரேடுகள் 'அ' பதிவேடுகளில் பட்டாதாரர்கள் பெயர் இருக்கும். ஆனால், கணினி பட்டா, சிட்டா எடுக்கச் சென்றால், பட்டாதாரர்கள் நில உடைமையாளர்கள் பெயர் இருப்பதில்லை. எனவே, வருவாய்த் துறை அதிகாரிகள் இத்தகைய குளறுபடிகளை சரிசெய்து தருவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.*

*குமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சியின் குடிநீர்த் தேவைக்கு அழகியபாண்டியபுரம் பேரூராட்சி, பெருந்தலைகாடு அருகே உள்ள உலக்கை அருவி திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*குமரி மாவட்டம், குழித்துறை, தாமிரபரணி ஆறு, சுசீந்திரம் பழையாறு, மணவாளக்குறிச்சி வள்ளியாறு ஆகிய ஆறுகளில் வருடந்தோறும் சராசரியாக 10,000 மில்லியன் கன அடி தண்ணீர் கடலில் கலந்து வீணாகிறது. தாமிரபரணியில் 4,784 அடி பழையாறு 4,256 அடி வள்ளியாறு 986 அடி ஆக மொத்தம் 10,026 மில்லியன் கன அடி நீர் கடலில் கலந்து வீணாவதைத் தடுக்க மூன்று ஆறுகளிலும் வாய்ப்பு உள்ள இடங்களில் தடுப்பணை கட்டப்பட வேண்டும்.*

*குழித்துறை, தாமிரபரணியில் திக்குறிச்சி, பாகோடு, விளாத்துறை ஊராட்சி, விளாத்திவிளை, அஞ்சாலிக்கடவு, முளமூட்டுக்கடவு, முஞ்சிறை, பைங்குளம், அம்சி ஆகிய இடங்களில்* check dam *அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட இடைக்கோடு பேரூராட்சியில் மாலைக்கோடு பகுதியில் பல்லிக்கூட்டம் என்ற இடத்தில் முல்லையாற்றின் குறுக்கே புதிய அணை கட்டப்பட வேண்டும். இந்தத் தண்ணீரை நெய்யாறு இடதுகரை சானலில் விடுவதற்கு கால்வாய் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

தாமிரபரணி ஆறு, திற்பரப்பு அருவியின் மேல்புறம் கடையாலுமூடு பேரூராட்சி, களியல் அருகே ஆற்றுக்கடவு பகுதியிலிருந்து புதிய கால்வாய் அமைத்து, அருமனை பேரூராட்சி, வெள்ளாங்கோடு ஊராட்சி, மஞ்சாலுமூடு ஊராட்சி, மாங்கோடு, தேவிகோடு ஆகிய ஊராட்சிகள், இடைக்கோடு, பாகோடு பேரூராட்சிகள் வழியாக இறுதியில் குழித்துறை, தாமிரபரணி ஆற்றில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திற்பரப்பு இடதுகரை, வலதுகரை கால்வாய்களைத் தூர் வாரி மண், செடி, சேறுகளை அப்புறப்படுத்தி, ஆற்றின் கரைகளைப் பலப்படுத்தி மடை, ஷட்டர்களைச் சீரமைத்து வெளியேறு கால்வாய்மூலம் குளங்களுக்குத் தண்ணீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரியில் ஆரல்வாய்மொழி, நாகர்கோவில், ராஜாக்கமங்கலம், குளச்சல் (ANRC) சாலை, நாகர்கோவில்—செட்டிக்குளம் முதல் ராமன்புதூர், புன்னக்காட்டுவிளை வரையுள்ள சாலைகளில் ஒரே நேரத்தில் சாலையை மூடி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். சாலையில் தார், சிமென்ட், கான்கிரீட், அலங்கார தரை ஓடுகள் பதித்து குறைந்தது 3 ஆண்டுகளுக்குள் பராமரிப்பு, மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளக் கூடாது என ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, சிற்றாறு அணை—I—ன் எதிர்ப்புறம் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் மாநிலச் சாலைகள் 204 கிலோ மீட்டர். விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், 143 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் ரூ.65.7 கோடி மதிப்பீட்டில் சீர் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய சாலைகள் முன்னுரிமை அடிப்படையில், இந்த ஆண்டு CRIDP திட்டத்தின்கீழ் எடுத்து சீரமைக்கப்படும் என்பதைத் தங்கள்

வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசும்போது ** என்று சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீக்கியாவிட்டது, திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேருந்து சம்பந்தமான வினாவை எழுப்பினார்கள். குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு நேற்று இதே அவையில் தகுந்த பதிலை வழங்கியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் சகோதரி அவர்கள் நேற்று அவைக்கு வரவில்லை என்பதால் அந்தப் பதிலை மீண்டும் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

நேற்று சொன்ன பதில்தான். திருநெல்வேலி கோட்டத்திற்கு 288 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மற்ற கோட்டங்களிலிருந்து 150 பேருந்துகள் அந்தக் கோட்டத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மொத்தமாக 438 பேருந்துகள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோட்டத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மிக விரைவிலே கூண்டு கட்டப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய 40 புதிய பேருந்துகள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் துவக்கப்பட்டு, அந்தக் கோட்டத்திற்கு வழங்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உதிரி பாகங்கள் வாங்குவதற்காக 5.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27–7–2016) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*16. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீதான வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் 29–1–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 19–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*17. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட வணிக வரித் துறை அதிகாரிகளுக்கு, வரி விதிப்பு செய்வதற்கு அனுமதி அளித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 17–12–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 122–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*18. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே1) துறையின் 5–1–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 3–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*2016 ஜூலை 26]*

*19. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

– – – – –

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.